தமிழ்நாடு அரசு

தமிழ்

ஐந்தாம் வகுப்பு

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2012
திருத்திய பதிப்பு – 2013
(முப்பருவப் பாடநூல் தொகுப்பு)

பாடநூல் உருவாக்கம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை : ரூ.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்

www. textbooksonline.tn.nic.in

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல், பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

இயல்	பாடத் தலைப்பு	பக்கம்
1.	வாழ்த்து*	1
	எனக்கு இறக்கைகள் முளைத்தால்...!	3
	காடு எம் வீடு	11
2.	திருக்குறள்*	13
	செம்மொழியாம் தமிழ்மொழி	16
	வாழ்வின் வழிகாட்டி	24
3.	நீதி நெறி விளக்கம்*	26
	நெஞ்சை அள்ளும் தஞ்சைப் பெரிய கோவில் (கடிதம்) (நாள்குறிப்பு)	29
	மூன்று பொற்காசுகள்	41
4.	திருக்குறள்*	42
	கலை உலகில் கலைவாணர்	45
	வெற்றியின் முதற்படி	54
5.	பெண்கல்வி*	56
	உணவுத் திருவிழா	61
	ஒற்றுமையே பலம்	69

இயல்	பாடத் தலைப்பு	பக்கம்
6.	கும்மியடி பெண்ணே கும்மியடி	70
	சித்திரைப் பொருட்காட்சி	73
	காடையின் நுண்ணறிவு	77
7.	நூறு வயது தருவன!	79
	களப்பயணம் செல்வோம்	83
	தன்னம்பிக்கைத் தாத்தா	90
8.	பகைவனுக்கு அருள்வாய்*	93
	போரைத் தடுத்த புலவர்	96
	குப்பையில் கிடந்த மகள்!	107
9.	கனவு தந்த தீர்ப்பு	111
	அறிவு வளர்ச்சியில் கலைக்களஞ்சியம்!	114
	விகடகவி தெனாலிராமன்	118

* மனப்பாடப்பகுதி

திறன் பகுதி	திறன்	பாடம்
1. கேட்டல்	விழிப்புணர்வு கதைகளை, பாடல்களை கேட்டுப் புரிந்துகொள்ளுதல்	இயல் – 1, 2, 3, துணைப்பாடம் 4, 5, 7, 8 (செய்யுள்)
	கலந்துரையாடலைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்	துணைப்பாடம் இயல் – 7
	நாடகத்தைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்	இயல் – 8 உரைநடை
2. பேசுதல்	இயல்பாக உரையாடுதல்	இயல் – 1, 2, 3 துணைப்பாடம் இயல் – 7 உரைநடை
	நாடகங்களில் பங்கேற்று நடித்தல்	இயல் – 8 உரைநடை
	குறித்த தலைப்பில் பேசுதல்	இயல் – 1 உரைநடை
	உரிய ஒலிப்புடன் பேசுதல்	இயல் – 4 உரைநடை
3. படித்தல்	அழைப்பிதழ்கள்/நிகழ்ச்சி அறிவிப்புகள்/ துண்டு வெளியீடுகளைப் படித்தல்	இயல் – 2 உரைநடை, பயிற்சிகள்
	எளிய எண் விவரங்களைப் படித்தறிதல்	இயல் – 6 உரைநடை,
	செய்தித்தாள் படித்தல்	இயல் – 6 பயிற்சி
	நாடகங்களைக் குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல்	இயல் – 8 பயிற்சி உரைநடை
4. எழுதுதல்	பொருளுணர்வுக்கேற்ப இடைவெளிவிட்டு எழுதுதல்	இயல் – அனைத்தும்
	பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்	பயிற்சி
	உறவுமுறைக் கடிதம் எழுதுதல் / நாட்குறிப்பு எழுதுதல்	இயல் – 3 உரைநடை, பயிற்சி
	கட்டுரை / உரையாடல் எழுதுதல்	இயல் – 4, 5
5. படைப்பாற்றல்	பாடல் எழுதுதல்	இயல் – 3, 5, 8
	அழைப்பிதழ் உருவாக்குதல்	இயல் – 2
	தனிநடிப்பு	இயல் – 8 பயிற்சி
	படத்தை நிறைவு செய்தல்	இயல் – 7 பயிற்சி
	உருவங்களைச் செய்தல்	இயல் – 9 பயிற்சி
	செயல்திட்டம்	இயல் – 4, 8, 9 பயிற்சி

திறன் பகுதி	திறன்	பாடம்
6. நடைமுறை இலக்கணம்	இணைப்புச் சொற்களை அறிந்து பயன்படுத்துதல்	இயல் – 3, 5 பயிற்சி
	மரபுத்தொடர்களை அறிதல்	இயல் – 2, 5 பயிற்சி
	இணைச்சொற்களை அறிதல்	இயல் – 3 பயிற்சி
	பேச்சுத் தமிழ் திருந்திய தமிழ் அறிந்து கொள்வோம்	இயல் – 4 பயிற்சி
	சொற்றொடர் அமைப்புமுறை அறிதல்	இயல் – 8 பயிற்சி
7. தானே கற்றல்	சிறுசிறு கதைகளைப் படித்தல்	துணைப்பாடம் அத்து இயல்கள்
	குழந்தைகள் கலைக்களஞ்சியத்தைப் பயன்படுத்துதல்	இயல் – 9 உரைநடை
	பொருள் அறிவோம்	அனைத்தும்
8. சொல்லாட்சித் திறன்	சொற்களஞ்சியம் பெருக்குதல்	செய்யுள் பகுதிகள் மற்றும் அனைத்து இயல்கள்

செய்யுள்

இயல் –1

– கவிமணி தேசிக விநாயகம்

பாடல்பொருள் :

நாட்டில் அறம் பெருக வேண்டும்; உண்மை நிலைபெற வேண்டும். பருவமழை பொழிந்து பயிர்கள் செழித்து வளர வேண்டும். மேன்மை பொருந்திய கலைகளெல்லாம் வளர வேண்டும். மக்கள் உயிர்களிடத்தில் கருணை கொண்டு வாழ வேண்டும். இவை அனைத்தும் நிறைவேற, இறைவா! உம்மை வணங்குகிறோம்.

சொல்பொருள் :

தொழுதல்	–	வணங்குதல்
தருமம்	–	அறம்
தழைத்திட	–	பெருகிட, மிகுந்திட
சத்தியம்	–	உண்மை
ஓங்கு	–	உயர்ந்து நிலை பெற
திருவளர் கலை	–	மேன்மை பொருந்திய கலை

ஆசிரியர் குறிப்பு

பெயர் : தேசிக விநாயகம்

ஊர் : கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூர்

பெற்றோர் : சிவதாணு, ஆதிலட்சுமி

சிறப்புப் பெயர் : கவிமணி

இயற்றிய நூல்கள் : மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், உமர்கய்யாம் பாடல்கள், ஆசிய சோதி

காலம் : 27–07–1876 முதல் 26–09–1954 வரை

பயிற்சி

அ. வகுப்பறையில் பேசுக.

1. உனக்கு வாய்ப்புக் கிடைத்தால் உன் பள்ளியில் எவற்றைப் பாதுகாக்க வேண்டும், எவற்றை மாற்ற வேண்டுமென நீ எண்ணுவாய் ?

ஆ. பிரித்து எழுதுக.

1. திருவடி = _____
2. கலையெல்லாம் = _____
3. பருவமழை = _____

இ. பாடலில் வரும் சொல்லுக்கு ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுக.

(எ.டு.) 1. செழித்திடவே , விழித்திடவே , _____ , _____ , _____

2. _____ , _____ , _____ , _____ , _____

ஈ. விடை எழுதுக.

நாட்டில் என்னென்ன மாற்றங்கள் நிகழ வேண்டுமெனக் கவிமணி இறைவனிடம் வேண்டுகிறார் ?

விளையாடலாம் வாங்க!

- குழந்தைகளை வட்டமாக அமரச்செய்க.
- ஏதேனும் ஒரு குழந்தை நடுவராகச் செயல்பட வேண்டும்.
- நடுவராக இருக்கும் குழந்தை, கைகளைத் தட்டுவதைப் பிறகுழந்தைகள் உற்றுநோக்க வேண்டும். (எட்டு முறைக்கு மேல் மிகாமல் கைகளைத் தட்டவேண்டும்)
- நடுவர் எத்தனை முறை கைகளைத் தட்டினாரோ, அத்தனை எழுத்துகளைக்கொண்ட சொல்லை முதலில் பிழையின்றிக் கூறும் குழந்தையைப் பாராட்ட வேண்டும்.

எனக்கு இறக்கைகள் முளைத்தால். . !

சில்லென்று காற்று வீசியது. கீச்... கீச்... என்ற ஒலியுடன் பறவைகள் வானில் அழகாகப் பறந்து கொண்டிருந்தன. இந்தப் பறவைகள் எங்கே செல்கின்றன? எதற்காகச் செல்கின்றன? அவை என் கண்களிலிருந்து மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தேன். பறவைகளுக்குக் கட்டுப்பாடு இல்லை. அவை எங்கும் பறந்து திரியலாம். எனக்கும் வானில் பறந்து திரிய ஆசைதான். ஆனால், இறக்கைகள் இல்லையே!

எனக்கு இறக்கைகள் முளைத்தால்..! கண்களை மூடிக்கொண்டேன். என் உடம்பில் ஏதோ மாற்றம் ஏற்படுகிறது. ஆ! எனக்கு இறக்கைகள் முளைக்கின்றன. அவை அழகிய மென்மையான பட்டுப் போன்ற இறக்கைகள். அந்த இறக்கைகளை அசைத்துப் பார்க்கிறேன். காற்றில் மிதப்பது போல் இருக்கிறதே! புதிய உணர்வு. என்னால் இப்போது பறக்க முடிகிறது! ஆகா, என்னால் இப்போது பறக்க முடிகிறது! திரும்பத் திரும்பக் கூறி மகிழ்கிறேன்.

சிறகடித்து விண்ணில் பறக்கிறேன். மேலிருந்து பார்க்கிறேன். ஆ! மனிதர்கள் சிற்றெறும்புகளாய்க் காட்சி அளிக்கிறார்கள். வீடுகள் சின்னஞ்சிறு பெட்டிகளாய்ச் சாலைகள் கருங்கோடுகளாய்த் தெரிகின்றன. கதிரவனின் கதிர்கள் வெப்பத்தை வீசுகின்றன. எனக்கு நா வறட்சி ஏற்படுகிறது.

அதோ குளம்! அங்குச் சென்று நீர் அருந்தலாம் என எண்ணிக் குளத்தை நெருங்குகிறேன். குளம் மிகவும் தூய்மையற்றுக் காணப்படுகிறது. குளத்தில் குப்பைகூளங்கள், நெகிழிப் புட்டிகள், நெகிழிப் பைகள் மிதந்து கொண்டிருக்கின்றன. குளத்துநீர், பாசிபடர்ந்து நுரைத்துக் கழிவுநீர்போல விரும்பத்தகாத அழுகல்மணம் வீசுகிறது. குளத்தைச் சுற்றியுள்ள மரங்கள் வெட்டப்பட்ட நிலையில், மொட்டை மரங்களாய்க் காணப்படுகின்றன.

"காடு செழித்தால் மழை பொழியும்"

"மழை பொழிந்தால் மண் குளிரும்"

"மழை பெற மரங்கள் வேண்டும்"

என்பதை அறியாமல் மனிதர்கள் இத்தவறுகளைச் செய்திருக்கிறார்கள். என் நீர்வேட்கையைத் தணிப்பது எவ்வாறு? வேதனையுடன் பறக்கிறேன்; கீழே பார்க்கிறேன்; பெரிய நகரம் தெரிகிறது. தொழிற்சாலைகளிலிருந்து அமிலப்புகை வெளியேறிக் கொண்டிருக்கிறது; அதனால், நகரமே மங்கலாகத் தெரிகிறது. என் கண்கள் புகைபட்டதனால் எரிகின்றன. நச்சுக்காற்றினால் மூச்சுத்திணறல் ஏற்படுகிறது.

மேகமூட்டம் போன்ற புகை மண்டலத்தை விரைவாகக் கடக்கிறேன். போக்குவரத்து வண்டிகள், தொழிற்சாலைகள் வெளிவிடும் புகையினால் மனிதர்களுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படுமே; காற்று மாசுபடுமே. இந்நிலை தொடர்ந்தால் நுரையீரல் புற்றுநோய், மூச்சுக் கோளாறு, சளித்தொல்லை முதலியவை ஏற்பட்டு மக்களை வாட்டுமே.

தொடர்ந்து விண்ணில் பறக்கிறேன்; கீழே பார்க்கிறேன். அந்த நகரத்தை ஒட்டி ஆறு ஒன்று ஓடிக்கொண்டு இருக்கிறது. ஆனால், அது சாக்கடையாய்க் காட்சியளிக்கிறது. தொழிற்சாலைகளின் வேதிக்கழிவுகள், சாயப்பட்டறைகளின் கழிவுகள் முதலியன ஆற்றில் கலந்து கொண்டிருக்கின்றன. இந்த நீரைக் குடிக்கும் உயிரிகளுக்குப் பல நோய்கள் ஏற்படும். மக்களுக்குச் சிறுநீரகக் கோளாறுகள், மஞ்சள் காமாலை, காய்ச்சல், வாந்தி, பேதி முதலிய நோய்கள் ஏற்படும்.

எனக்கு நீர்வேட்கை மிகுந்தது; கவலையோடு பறந்தேன். அதோ! பறவைகள் கூட்டங்கூட்டமாய்ப் பறந்து செல்கின்றன. அவற்றை நானும் பின்தொடர்கிறேன்; நெடுந்தொலைவு செல்கிறேன். அதோ! உயர்ந்த மலைத்தொடர். அங்கு இருந்து வரும் குளிர்காற்று என்னை மெல்ல வருடுகிறது. மலைமுகடுகளில் மேகக்கூட்டங்கள் தவழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் நடுவே பறக்கிறேன்.

அம்மலையில் மூலிகை மணம் கலந்த தூயகாற்று வீசுகிறது. நெடிதுயர்ந்த மரங்கள் வானை முட்டுகின்றன. எங்கும் பசுமையான செடிகொடிகள். பல வண்ணப் பூக்களைச் சுமந்து நிற்கும் தாவரங்கள் காற்றில் அசைந்து ஆடுகின்றன. தேனீக்களும் வண்டுகளும் இன்னொலி எழுப்புவதைக் கேட்டு, என் மனம் மகிழ்கிறது. பல வண்ணங்களில் அழகழகாய் வண்ணத்துப்பூச்சிகள் சிறகடித்துப் பறக்கின்றன. பல வண்ணப் பறவைகளின் ஒலிகளைப் பாடலாய்க் கேட்டு மகிழ்கிறேன். ஆர்ப்பரிக்கும் அருவிகள் வைரத்தொங்கலாய் விழுகின்றன. சலசலக்கும் ஓடைகள் பசுமையான புல்வெளிகளில் பாய்கின்றன.

இந்த இயற்கைக் காட்சியின் ஊடே யானைகள், மான்கள், காட்டெருமைகள் ஆகியவை இருப்பதைக் கண்டு மகிழ்கிறேன். கீழே இறங்கிவிட்டேன். தெளிந்த நீரோடையில் களைப்புத் தீர நீரைக் குடித்தேன்; அந்நீர் மிகுந்த சுவையாக இருந்தது. இயற்கையை எண்ணியெண்ணி வியந்தேன். இந்த நீரோடைகள்தாமே நகரத்திற்கு ஆறுகளாக ஓடி வருகின்றன; ஆனால், இவ்வளவு சுவையான நீர் அங்குக் கிடைப்பதில்லையே, என்ன காரணம்? இந்தத் தூய்மையான நீரும் காற்றும் அனைவருக்கும் கிடைக்க என்ன செய்யலாம்? எனச் சிந்தித்தபோது.....

"மங்கை!... எழுந்திரு, தூங்கியது போதும்" என்றாள் அம்மா.

மங்கை செய்த சிந்தனை என்னவாக இருந்திருக்கும்?

பயிற்சி

I. அ. வகுப்பறையில் பேசுக.

1. நான் ஊர்த் தலைவரானால்...
2. எனக்கு இறக்கைகள் முளைத்தால்....
3. யார் கண்ணுக்கும் தெரியாமல் மறையும் ஆற்றல் எனக்குக் கிடைத்தால்...

ஆ. இப்பாடத்தில் நீ புரிந்து கொண்ட செய்தியைக் கருத்துப் படமாக வரைக.

இ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. அமிலப்புகை – _____
2. வேதிக்கழிவு – _____
3. நெடிதுயர்ந்த – _____

ஈ. பிரித்து எழுதுக.

1. கருங்கோடு = _____
2. உடம்பெல்லாம் = _____
3. காட்டெருமைகள் = _____
4. நீரோடை = _____

உ. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மழை பெற _____ வளர்க்க வேண்டும்.
2. தொழிற்சாலைகளிலிருந்து _____ புகை வெளிவருகிறது.
3. சாயப் பட்டறைகளிலிருந்து _____ நீரில் கலக்கின்றன.
4. வண்டுகள் _____ எழுப்பும்.
5. மலைமுகடுகளில் _____ கூட்டங்கள் தவழ்கின்றன.

ஊ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முகடு என்பதன் பொருள் _____
   (அ) உயரம் (ஆ) உச்சி (இ) நீளம்
2. அருவி என்பதன் பொருள் _____
   (அ) வாய்க்கால் (ஆ) ஆறு (இ) மலையின்வீழ் நீர்
3. தணித்தல் என்பதன் பொருள் _____
   (அ) அதிகமாக்குதல் (ஆ) குறைத்தல் (இ) உயர்த்தல்
4. தொழிற்சாலையின் வேதிக்கழிவுகள் _____ கலந்து கொண்டிருந்தன.
   (அ) ஆற்றுக்கு (ஆ) ஆற்றால் (இ) ஆற்றில்

எ. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. எண்ணியெண்ணி : _____
2. விண்ணில் : _____

ஏ. விடை எழுதுக.

1. மங்கை மனம் வருந்தக் காரணம் என்ன ?
2. தொழிற்சாலைகள் வெளிவிடும் புகையால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?
3. நீ கண்ட இயற்கைவளம் பற்றி எழுதுக.

குழுவாகச் செய்வோம்

செயல்திட்டம்

மூன்று குழுக்களாகப் பிரிக. ஒவ்வொரு குழுவும் முறையே நீர், நிலம், காற்று தலைப்பினை எடுத்துக்கொள்க. உங்கள் ஊரில் நீர், நிலம், காற்று மாசுபாடு அடைவதற்கான காரணிகளைக் கண்டறிந்து, தொகுத்து வகுப்பறையில் பேசுக.

II. மயங்கொலிகள் அறிக.

அ. உரிய ஒலிப்புடன் வாய்விட்டுப் படிக்க.

1. அப்பா வேலை முடிந்து மாலை வேளையில் வீட்டுக்குத் திரும்புவார்.
2. மலை அடிவாரத்தை அடைந்தேன்; மழை பெய்யத் தொடங்கியது.
3. கந்தன் காலையில் வயலுக்குச் சென்றான்; காளைகளை ஏரில் பூட்டினான்.
4. வானில் மின்னல் பளிச்சிட்டது. இடி இடித்த ஒலி கேட்டது.
5. கிளி அழகான பறவை; அதன் அலகு சிவப்பாக இருக்கும்.

ஆ. வேறுபாடு அறிக.

அழகு = எழில்
அலகு = பறவையின் மூக்கு
கலை = ஓவியம் முதலிய நுண்கலைகள்
களை = தேவையற்ற புல் வகைகள்
ஒலி = சத்தம்
ஒளி = வெளிச்சம்
ஒழி = இல்லாமல் போதல்

வால் = ஓர்உறுப்பு
வாள் = ஒரு கருவி
வேலை = பணி
வேளை = காலம்
தலை = ஓர் உறுப்பு
தழை = இலை
தளை = கட்டு

இ. பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.

1. யானை மிகுந்த _____ வாய்ந்த விலங்கு. (பலம் / பழம்)
2. பலம் இல்லை என்றால் _____ தூக்க முடியாது. (பளு / பழு)
3. பள்ளி மணி _____ (ஒலித்தது / ஒளித்தது)
4. யாழினி _____ உயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தாள். (விலை / விளை)
5. எலி _____ வாழ்கிறது. (வலையில் / வளையில்)
6. ஓவியர் வண்ணங்களைக் _____ (குழைத்தார் / குலைத்தார்)

ஈ. பிழைகளை நீக்கி எழுதுக

அதிகாளையில் கோலி கூவும். கதிரவன் உதயமாகும் பொலுது நாம் கண் விலிக்க வேண்டும். ஆதுவே மிகச் சிறந்த பலக்கமாகும்.

_____

_____

_____

_____

இணைந்து செய்வோம்

ஒத்த ஒலிப்புடைய சொற்றொடர்களை எழுதுக.

1. வட்டமான தட்டு

_____

2. அப்பா வாங்கினார் நுங்கு – அதை

_____

3. பள்ளி சென்றாள் செல்வி – அங்குப்

_____

4. துள்ளிச் சென்றாள் வள்ளி – அவள்

_____

5. அம்மா சென்றாள் சந்தை – அங்கே

_____

கலையும் கைவண்ணமும்

நீ கண்டுகளித்த இயற்கைக் காட்சியை வரைந்து வண்ணம் தீட்டுக.

அழகிய ஆடு செய்யலாம்



1. வெள்ளை வண்ண அட்டையை மேற்கண்ட வடிவில் வெட்டவும்.



2. ஆட்டின் தலையை வரைந்து உடலுடன் ஒட்டவும்.

3. ஆட்டின் உடல்மேல் பஞ்சை ஒட்டி, நிற்க வைக்கவும்.

துணைப்பாடம்

காடு எம் வீடு

இயல் –1

காட்டில் சுட்டெரிக்கும் வெயில். அங்கு வாழும் விலங்குகளும் பறவைகளும் ஒரிடத்தில் கூடின. தலைவனான புலி, "எல்லாரும் நான் சொல்வதைக் கேளுங்கள். நாம் உயிர் வாழ்வதற்கு நீர் வேண்டும். ஆனால், மழை இப்பொழுது எல்லாம் அவ்வளவாகப் பெய்வதில்லை. இதற்கெல்லாம் காரணம் காடுகள் அழிவதே" என்றது.

அப்போது, யானை வலம் இடமாகத் தலையை ஆட்டிக்கொண்டு, "காட்டை நாம் அழிப்பதில்லை! மனிதர்கள்தாம் மரங்களை வெட்டிக் காட்டை அழிக்கிறார்கள்" எனப் புலம்பியது.



" உண்மை! காட்டை அழிப்பது மனிதர்களே! அவர்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கையை நினைத்துப் பார்ப்பதில்லை. அவர்களாகத் திருந்தினால்தான் உண்டு", என்றது புலி. பறவைகளும் விலங்குகளும் தலையை மேலும் கீழும் ஆட்டி அதனை ஏற்றுக்கொண்டன.

"காடுகளை வளர்க்க நாங்கள் என்ன செய்ய வேண்டும்?", எனப் பறவைகள் கேட்டன. "கிளிகளே! கிடைக்கும் பழங்களையெல்லாம் தின்று அவற்றிலுள்ள விதைகளைக் காடெல்லாம் பரப்புங்கள்",என்றது புலி.

அப்போது காகங்கள், " புலி அண்ணா ! நாங்கள் வேம்பு, ஆல், அத்தி, அரசு ஆகியவற்றின் பழங்களை விதையுடன் தின்று நிலத்தில் எச்சமிட்டுப் பரப்புகிறோம்",என்றன.

"நாங்கள் தும்பிக்கையால் தண்ணீர் ஊற்றுகிறோம்; விதைகள் முளைக்கட்டும்; செடிகள் வளரட்டும்; மரங்கள் வளர்ந்து காடே பசுமையாகட்டும்" என்றன யானைகள். "இரவு பகலாகக் காட்டைக் காவல் காக்கும் பொறுப்பு எங்களுடையது",என்றன நரிகள்.

"நாம் அனைவரும் உயிர்மூச்சாகக் கொண்டு காட்டைக் காப்போம்" என்றது புலி. சில ஆண்டுகள் கழிந்தன. காடெங்கும் பசுமை! பசுமை....! திடீரென்று வானம் இருண்டது. மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. காட்டில் உள்ள நீர்நிலைகள் அனைத்தும் நிரம்பின. விலங்குகளும் பறவைகளும் மகிழ்ச்சியால் ஆடிப் பாடின. அவை புதியதோர் உலகை உருவாக்கிவிட்டன. ஆனால் மனிதன் ?

சிந்தித்துப் பேசுக

- புவி வெப்பமயமாதல் குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடி அறிந்து கொள்க.
- புவி வெப்பமயமாதலைத் தடுக்க என்னவெல்லாம் செய்யலாம் என்பதைக் குறித்துப் பேசுக.

வான்சிறப்பு
(மழை சிறப்பு)

1. விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது

பாடல்பொருள் : வானத்திலிருந்து மழை பெய்யாவிட்டால் உலகில் பசும்புல்லின் நுனியையும் காண்பது அரிதாகிவிடும்.

சொல்பொருள் :

விசும்பு – வானம் துளி – மழைத்துளி
அரிது – இயலாது

2. நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு. ★

பாடல்பொருள்: நீர் இல்லாமல் உலகில் எந்த உயிரும் வாழ இயலாது. நீருக்குக் காரணமான மழை பெய்யாவிட்டால், பசியால் ஒழுக்கமும் இல்லாமல் போய் விடும்.

சொல்பொருள்:

ஒழுக்கு – ஒழுக்கம் நீரின்று – நீர் இல்லாமல்
வானின்று – மழை இல்லாமல்

விருந்தோம்பல்
(விருந்தளித்தல்)

1. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

பாடல்பொருள் : நாள்தோறும் தன்னை நாடிவரும் விருந்தினரைப் பாதுகாப்பவனுடைய வாழ்க்கை, துன்பம் வந்தபோதும் கெடுவது இல்லை.

சொல்பொருள் :

வைகலும் – நாள்தோறும் ஓம்புவான் – பாதுகாப்பவன்
பருவந்து – துன்புற்று பாழ்படுதல் – வீணாதல்
இன்று – இல்லை

2. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து. ★

பாடல்பொருள் : அனிச்சமலர் முகர்ந்த அளவில் வாடிவிடும். விருந்தினரின் முகமோ மாறுபட்டுப் பார்த்த அளவிலேயே வாடும்.

சொல்பொருள்:

மோப்ப	–	முகர்ந்து பார்க்க
குழையும்	–	வாடும்
திரிந்து	–	மாறுபட்டு
நோக்க	–	பார்க்க

கேள்வி
(கற்றோர் சொல் கேட்டல்)

1. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும். ★

பாடல்பொருள்: எந்தச் செய்தியாயினும் ஒருவன் நல்லனவற்றையே கேட்டறிய வேண்டும். அக்கேள்வியறிவே எல்லா வகையிலும் அவனுக்கு நிறைந்த பெருமையைத் தரும்.

சொல்பொருள் :

எனைத்தானும்	–	எந்தச் செய்தியாயினும்
அனைத்தானும்	–	எல்லா வகையிலும்
ஆன்ற	–	நிறைந்த

2. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய வாயின ராதல் அரிது.

பாடல்பொருள்: நுட்பமாகக் கேட்டறியும் திறனைப் பெறாதவர், பணிவு மிக்க சொற்களைப் பேசுபவராக இருத்தல் இயலாது.

சொல்பொருள் :

நுணங்கிய	–	நுட்பமான	அரிது	–	இயலாது
அல்லார்	–	அல்லாதவர்			

ஆசிரியர் குறிப்பு:

பெயர்	–	திருவள்ளுவர்
காலம்	–	கி.மு. 31
வேறுபெயர்கள்	–	தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர்.

பயிற்சி

அ. வகுப்பறையில் பேசுக.

1. மழைநாளில் உன் அனுபவம் குறித்துக் கூறுக.
2. உன் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை எவ்வாறு வரவேற்று விருந்தளிப்பாய் ?

ஆ. பிரித்து எழுதுக.

1. உலகெனின் = _____
2. மற்றாங்கே = _____
3. முகந்திரிந்து = _____
4. கேள்வியரல்லார் = _____
5. வாயினராதல் = _____

இ. விடை எழுதுக.

1. பூமியில் எப்போது புல் கூட முளைக்காது ?
2. மழை பெய்யாவிடில் ஒழுக்கம் கெடும் – எவ்வாறு ?
3. துன்பத்தால் வருந்திக் கெடாதவர் யார் ?
4. நீ விருந்தினராகச் சென்று மகிழ்ந்த அனுபவம் குறித்து எழுதுக.
5. நுட்பமாகக் கேட்டறியும் திறனால் பெறும் நன்மைகள் யாவை ?

என் உடல் என்னுடையதே

சிந்திக்கலாமா ?

பிறர் என்னிடம் இவ்வாறு நடந்துகொள்ளும்போது சினம் ஏற்படுகிறது.

_____

பிறர் என்னிடம் இவ்வாறு நடந்துகொள்ளும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

_____

பிறர் என்னிடம் இவ்வாறு நடந்துகொள்ளும்போது அச்சம் ஏற்படுகிறது.

_____

பிறர் உன்னைத் தொட்டுப் பேசும்போது அவற்றுள் உனக்குப் பிடித்தவை பிடிக்காதவைப் பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுக.

செம்மொழியாம் தமிழ்மொழி

(கருத்தரங்கம்)

தென்றல் : இன்றைய இலக்கியமன்றத் தொடக்க விழாவினை நம் பள்ளித் தலைமையாசிரியர் அவர்களைத் தலைமை ஏற்று நடத்திக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அழகன் : நான், அதனை வழிமொழிகிறேன்.

தென்றல் : தமிழ்த்தாய் வாழ்த்து.

(அனைவரும் எழுந்து நின்று பாடுதல்)

தலைமை ஆசிரியர் : ஆசிரியப் பெருமக்களே! அன்புக் குழந்தைகளே! அனைவர்க்கும் என்னுடைய அன்பு வணக்கம். செம்மொழியாம் நம் தமிழ்மொழி அளப்பரிய சிறப்புகளைக் கொண்ட அமுதமொழி. தமிழ்மொழியின் சிறப்புகளில் தொன்மை, இனிமை என்னும் தலைப்புகளில் பேச உள்ள, உங்களைக் கண்டு பெரிதும் அகமகிழ்கிறேன். உங்களுக்கு என் பாராட்டுகளும் நல்வாழ்த்துகளும்.

தென்றல் : 'தமிழின் தொன்மை' என்னும் தலைப்பில், தன் கருத்துகளை எடுத்துரைக்க மாணவி முல்லையை அழைக்கிறேன்.

முல்லை : அவையோர்க்கு வணக்கம். உலகில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றுள் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட மொழிகள் ஏழு. அவை கிரேக்கம், இலத்தீன், சீனம், ஈப்ரூ, அரேபியம், சமற்கிருதம், தமிழ் ஆகியன. நம் தாய்மொழியாம் தமிழோ, காலத்தால் முந்தையது. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், 'தொன்மை, தாய்மை, வளமை, இளமை, இனிமை, நுண்மை முதலிய சிறப்புகளைக் கொண்டது தமிழ்மொழி' என்றும், 'தமிழே, உலகின் முதன் மொழி, மூத்த மொழி' என்றும் குறிப்பிடுகிறார்.

அமெரிக்க மொழியியல் அறிஞரான நோம் சாம்சுகி, 'உலக மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி தமிழாகத்தான் இருத்தல் வேண்டும்' எனக் கூறியுள்ளார்.

தேனி மாவட்டம் புலிமான் கோம்பை மற்றும் தாதப்பட்டி என்னும் ஊர்களில் கிடைத்த நடுகல் கல்வெட்டுகள்

இயல்பு



நிறமாற்றம்



செப்பம்

திருமுருகாற்றுப்படை எழுதப்பட்ட ஓலைச்சுவடி

பூம்புகாரை ஒட்டிய கடற்பகுதியை ஆய்வு செய்த அறிஞர் ஒருவர், தமிழ்க் கல்வெட்டு ஒன்றனைக் கண்டுபிடித்தார். அவர், தமிழ்மொழி பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது எனத் தெரிவித்துள்ளார். கிரேக்க, இலத்தீன் மொழிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ச்சொற்கள் இருப்பதை ஞானகிரியார் என்னும் அறிஞர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பழனி – பொருந்தல் அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற சுடுமண் பொம்மைகள்

நம் தமிழ்மொழி உலகில் வேறு எந்த மொழியும் பெற்றிடாத பெருஞ்சிறப்புகளைப் பெற்ற மொழி. தமிழ்மொழி, தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலைப் பெற்றுத் திகழ்கிறது. இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகள் தொடர்ச்சியான இலக்கண இலக்கிய வளங்களைக் கொண்டுள்ள மொழி. அதனால்தான் செம்மொழியாகத் திகழ்கிறது. எனவே அதனைப் போற்றி வளர்ப்போம். நன்றி, வணக்கம்!

தமிழரின் பழங்கால நாணயங்கள், அணிகலன்கள்

தென்றல் : 'தமிழின் இனிமை'என்னும் தலைப்பில் கருத்துகளை வழங்க மாணவன் மணவாளனை அழைக்கிறேன்.

மணவாளன் : அவையோரை வணங்குகிறேன். உலக மொழிகளுள் மிகுந்த அழகும் திருத்தமும் ஒழுங்கும் கொண்டது தமிழ். தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். தமிழ் என்னும் சொல்லிலேயே வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்று எழுத்துகளும் இடம்பெற்றுள்ளன.

தமிழ், தமிழ், தமிழ் எனப் பன்முறை அடுக்கிக் கூறினால் அமிழ்து எனவும், அமிழ்து, அமிழ்து, அமிழ்து எனக் கூறும்போது தமிழ் என ஒலிப்பதும் தமிழின் இனிமையாகும். தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழைக் கொண்டது. தமிழ்மொழியைக் குறிக்க அருந்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ், தென்தமிழ், வண்டமிழ், தண்டமிழ், நற்றமிழ், நெடுந்தமிழ், அன்னைத்தமிழ்,

ஈடு இணையற்ற சொல்வளமும் கருத்துச் செறிவும் மிக்கது, தமிழ்மொழி. ஈ, வா, கை, தை, வை, பை, மை முதலிய நாற்பத்திரண்டு ஓரெழுத்துச் சொற்களும் ஒருபொருள் குறித்த பல சொற்களும் தமிழில்தான் மிகுதியாக உள்ளன. ஒரு கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதற்குக் கூறுதல், செப்புதல், உரைத்தல், மொழிதல், பகர்தல், விளம்புதல், அறைதல், இயம்புதல், நவிலுதல் முதலிய நாற்பது சொற்கள் உள்ளன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பல்வகை இலக்கியங்களைப் பெற்றுள்ளது, தமிழ்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்'

– என்று பாரதியாரும்,

'இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்தநல் அமுது'

– என்று பாரதிதாசனும்

தமிழின் இனிமையைப் பறைசாற்றுகின்றனர்.

வான்புகழ் வள்ளுவரின் திருக்குறள், எந்நாட்டவர்க்கும் எக்காலத்திற்கும் பொருந்தும்படியான பொதுமைக் கருத்துகளைக் கூறுவதால், 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்படுகிறது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் உயரிய கருத்துகளை உலகுக்கு உணர்த்தியது, நம் தமிழ்மொழி.

தமிழர்களின் விருந்தோம்பலும், ஒருவனுக்கு ஒருத்தி என்னும் பண்பாடும் உலகமே வியந்து பார்க்கும் உயர்ந்த பண்புகள். நம் பண்பாட்டின் வழி, நாம் நடப்போம்; நாளும் தமிழின் இனிமையைச் சுவைப்போம்! நன்றி, வணக்கம்.

தலைமைஆசிரியர் : நம் பள்ளி மாணவர்கள் முல்லையும் மணவாளனும் 'தமிழின் தொன்மை', 'தமிழின் இனிமை' பற்றி மிகச் சிறப்பாகப் பேசினார்கள்.

மாணவச்செல்வங்களே, நம் தமிழ்ச் செம்மொழிக்குச் சிறப்பு சேர்க்க, குழந்தைகளுக்குத் தமிழிலேயே பெயர்சூட்ட வேண்டும். ஊர்ப்பெயர்கள், தெருப்பெயர்கள், கடைப்பெயர்கள் தமிழிலேயே அமையவேண்டும்.

ஒவ்வொருவரும் தம் பெயரின், முன் எழுத்துகளைத் தமிழிலேயே எழுத வேண்டும். கையொப்பமிடும் போதும் தமிழிலேயே இடவேண்டும்.

தமிழர்களிடம் தமிழிலேயே பேச வேண்டும். நம் எழுத்திலும் பேச்சிலும் தமிழ்மணம் கமழ வேண்டும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்னும் நிலை மலரப் பாடுபடவேண்டும். நன்றி, வணக்கம்!

மாணவன் அழகன் நன்றி நவில, நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

பயிற்சி

I. அ. வகுப்பறையில் பேசுக.

1. தமிழின் இலக்கிய வளம், தமிழரின் விருந்தோம்பல் போன்றவை குறித்த குறிப்புகள் எழுதி வந்து சிறு குழுவில் பேசுக.
2. பாரதியார், பாரதிதாசன் பாடல்களுள் நீ அறிந்த பாடலை ஓசை நயத்துடன் பாடுக.

ஆ. எழுதுக.

உன் வகுப்பில் உள்ள மாணவர்களின் பெயர்களை எழுதுக. பிறமொழி எழுத்துகள் இடம்பெறாத பெயர்களை அடிக்கோடிடுக.

இ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. தொன்மை – _____
2. முந்தையது – _____
3. செம்மொழி – _____
4. தீந்தமிழ் – _____
5. காப்பியங்கள் – _____
6. கேளிர் – _____
7. பண்பாடு – _____
8. விருந்தோம்பல் – _____
9. நவிலல் – _____

ஈ. பிரித்து எழுதுக.

1. செம்மொழி = _____
2. ஆறாயிரம் = _____
3. ஒரெழுத்து = _____
4. தண்டமிழ் = _____

உ. சேர்த்து எழுதுக.

1. பத்து + பாட்டு = _____
2. தீம் + தமிழ் = _____
3. யாம் + அறிந்த = _____
4. எ + நாட்டவர்க்கும் = _____
5. விருந்து + ஓம்பல் = _____

உ. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. உலகில் _____ மேற்பட்ட மொழிகள் உள்ளன.
2. தமிழ்மொழியின் முதல் இலக்கண நூல்_____
3. முத்தமிழ் என்பது இயல், இசை, _____
4. திருக்குறள் _____ எனப் போற்றப்படுகிறது.

எ. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. இனிமை : _____.
2. உயர்வு : _____.
3. மொழி : _____.

ஏ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. விண்மீன்களைக் குறிக்காத ஒரு சொல் _____

   (அ) நட்சத்திரம் (ஆ) தாரகை (இ) பூமி

2. சொல்லுதல் என்னும் பொருளைக் குறிக்காத ஒரு சொல் _____

   (அ) கூறுதல் (ஆ) மொழிதல் (இ) கேட்டல்

3. நிலவைக் குறிக்காத ஒரு சொல் _____

   (அ) திங்கள் (ஆ) மதி (இ) சூரியன்

ஐ. விடை எழுதுக.

1. தமிழ் மொழி குறித்துத் தேவநேயப் பாவாணர் கூறுவது யாது?
2. தமிழ் இலக்கியங்களின் வகைகள் சிலவற்றை எழுதுக.
3. தமிழ் மொழி எவ்வாறெல்லாம் போற்றப்படுகிறது?
4. தமிழின் தொன்மை குறித்து எழுதுக.
5. தமிழின் இனிமையைப் பற்றிப் பாரதியார் கூறியது யாது?

இணைந்து செய்வோம்

தமிழ்ச் சொல்லை அறிந்து எழுதுக.

ரூம்	–	ஆட்டோ	– .....
டீ	–	பஸ்	– .....
பிளாஸ்டிக்	–	சைக்கிள்	– .....
கார்	–	ரோடு	– .....
லாரி	–	எரேசர்	– .....

II. அ. குறிப்புகளைக் கொண்டு பழமொழியைக் கண்டுபிடித்து எழுதுக.

(எ.கா.) ஓவியம் வரையவும், தமிழ்மொழியைக் கற்கவும் நல்ல பயிற்சி வேண்டும்.

பழமொழி – சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.

1. முழுமையாகக் கற்று அறிந்தவர்கள் யாரும் இல்லை. உலகில் நாம் கற்க வேண்டியவை இன்னும் நிறைய உள்ளன.

---

2. நம் வேலைகளை நாமே செய்து கொள்ள வேண்டும்.

---

3. கடல் கடந்து சென்றும் செல்வத்தைத் தேட வேண்டும்.

---

4. நோயில்லாமல் வாழ்வது, நமக்குப் பெருஞ்செல்வம்.

ஆ. பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.

நான் 'ஆண்டி' வீட்டுக்குப் போனேன். 'கேட்' மூடியிருந்தது. ' காலிங் பெல்லை' அழுத்தினேன். 'அங்கிள்' வந்தார். 'கம்மின்' என்றார்.

இ. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறி இடுக .

1. இஃது என் தமிழ்ப்பாடநூல்
2. அஃது உன் பாடநூலா
3. ஆ ஆ இந்த ஓவியம் எத்துணை அழகாக இருக்கிறது
4. சிறுதுளி பெருவெள்ளம் என்பது பழமொழி
5. காட்டில் மான்கள் நரிகள் புலிகள் யானைகள் முதலியவை வாழ்கின்றன
6. நீங்க எல்லாரும் நலமா நான் நலமா இருக்கேன்
7. ஒரு சேதி சொல்லப்போறேன் என்ன தெரியுமா

வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!

மாணவர்மன்ற நிறைவு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

வணக்கம். நம் பள்ளி மாணவர் மன்றத்தின் முதலாண்டு நிறைவு விழா 14-07-2013 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். அவ்வேளையில், நம் பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். அனைவரும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்புவிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இப்படிக்கு,

செயலர்,

மாணவர் மன்றம்.

நிகழ்ச்சி நிரல்

நாள் : 14.07. 2013

நேரம் : காலை 10.00 மணி

இடம் : ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, புத்தேந்தல்.

தமிழ்த்தாய் வாழ்த்து

தலைமை : திருமதி மு. மாதவி அவர்கள், தலைமை ஆசிரியர்.

முன்னிலை : திரு. இரா. சுந்தரம் அவர்கள், தமிழாசிரியர்.

சிறப்புரை : திருமதி க. வான்மதி அவர்கள், இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை.

கலைநிகழ்ச்சிகள்: 'ஊருக்கு நல்லது செய்வேன்', நாடகம்
ஐந்தாம் வகுப்பு மாணவர்கள்

நன்றியுரை : கா. கவின், ஐந்தாம் வகுப்பு

நாட்டுப்பண்

நிகழ்ச்சித் தொகுப்பாளர் : த. முகில், ஐந்தாம் வகுப்பு.

குழுவாகச் செய்வோம்

செயல்திட்டம் : உன் பள்ளி ஆண்டு விழாவிற்கு அழைப்பிதழ் உருவாக்குக.

விளையாடலாம் வாங்க!

குழந்தைகளை இரு குழுக்களாகப் பிரிக்கவும். ஒரு குழு ஆங்கிலச் சொற்கள் கலந்த சொற்றொடரைக் கூற மற்றொரு குழு அதனை தமிழ் சொற்றொடராக மாற்றிக் கூறவேண்டும்.

(எ.கா.)

முதல் குழு: நான் சைக்கிள் வாங்கினேன்.

இரண்டாம் குழு: நான் மிதிவண்டி வாங்கினேன்.

இதுபோல் இரு குழுவும் மாறி மாறி விளையாட வேண்டும். சரியாக விடைகூறிய குழுவுக்கு மதிப்பெண் வழங்கவும். அதிக மதிப்பெண் பெற்ற குழுவை வெற்றி பெற்ற குழுவாக அறிவிக்கவும்.

பாட்டி ஏதோ ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார். அதனைப் பேரன் பார்த்துக் கொண்டிருந்தான். "கதை எழுதுகிறீர்களா? அக்கதை என்னைப் பற்றியதா?" எனப் பேரன் வினவினான்.

பாட்டி எழுதுவதை நிறுத்திவிட்டுத் தன் பேரனைப் பார்த்து, "நான் உன்னைப் பற்றிதான் எழுதுகின்றேன். எழுதப்படும் சொற்களைப் போல் அவற்றை எழுதும் பென்சிலும் மிகவும் முக்கியமானது. நீயும் பெரியவனான பின் இந்தப் பென்சிலைப் போல் இருப்பாய் என நான் நம்புகிறேன்" என்றார். ஆர்வமும் வியப்புமாகப் பேரன் அந்தப் பென்சிலைப் பார்த்தான். அது ஒன்றும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகத் தெரியவில்லை. "இந்தப் பென்சில், நான் பார்த்த மற்ற பென்சில்கள் போலத்தானே உள்ளது" என்றான்.

"நீ பார்க்கும் பார்வையினைப் பொருத்தே பொருள்களின் முக்கியத்துவம் இருக்கின்றது. பென்சிலுக்கு ஐந்து பண்புகள் உள்ளன. அவற்றை உன்னுள் வளர்த்துக் கொண்டால், இவ்வுலகில் நீயும் சிறப்பாக வாழலாம்" என்றார் பாட்டி.

பாட்டி, "பல திறமைகளை உடையவனாக நீ இருப்பினும் உன்னை வழி நடத்திச் செல்வதற்குப் பலர் உள்ளனர். அவர்கள் உன் தாய், தந்தை, ஆசிரியர்கள், பெரியோர்கள் மற்றும் நல்ல புத்தகங்கள். நல்ல பென்சிலும் எழுதுபவருக்கு உட்பட்டு, அவர் நினைக்கும் வழி செல்கின்றது. அதுபோல், உன்னை வழி நடத்துபவரின் சொற்களைக் கேட்டு நீயும் நடக்க வேண்டும். இது முதல் பண்பு.

நான் பென்சிலின் கூர்மை மழுங்கும் போதெல்லாம், அதனைக் கூர்மைப் படுத்துகின்றேன். அதனால், பென்சில் துன்பத்திற்கு உட்படுகின்றது. ஆனால், அது கூர்மையாக்கப்பட்டுத் திறம்படச் செயலாற்ற, தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றது. அதுபோல நீயும் சில தோல்விகள், துன்பங்களைத் தாங்கிக் கொள்ளக் கற்றுக்கொண்டால், நன்கு பக்குவப்பட்டுச் சிறந்தவனாக ஆவாய். இது இரண்டாவது பண்பு.

ஏதேனும் தவறுதலாகப் பென்சிலால் எழுதிவிட்டால் அழிப்பான் கொண்டு அழிக்கின்றோம். இதற்குப் பென்சில் அனுமதிக்கின்றது. தவற்றைத் திருத்திக் கொள்வது ஒருகுறை அன்று. நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டத் தவறுகளைத் திருத்திக் கொள்வது தேவையாகின்றது. இது மூன்றாவது பண்பு.

மரத்தாலான பல்வேறு வண்ணங்கள் பூசப்பட்ட பென்சிலின் வெளித் தோற்றத்தைவிட, அதன் உள்ளே உள்ள கரிமம் (கிராபைட்) இன்றியமையாதது. அதுபோல், நீயும் உன் மனத்துள் என்ன நிகழ்கிறது என்பதைக் கவனிப்பதில் கருத்தினைச் செலுத்துதல் வேண்டும். இது நான்காவது பண்பு.

பென்சில், தான் எழுதும் தாளில் தன்னுடைய சுவட்டினை முத்திரையாகப் பதித்துவிட்டுச் செல்கின்றது. அதுபோல, உன் வாழ்வில் செய்யும் ஒவ்வொரு செயலும் உன் தனித்தன்மையையும் முத்திரையையும் பதித்துப் பெயர் சொல்லும்படி இருக்க வேண்டும். ஆகவே, உன்னுடைய ஒவ்வொரு செயலையும் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும். இது ஐந்தாவது பண்பு" என்று விளக்கினார்.

"பாட்டி, நான் இப்போது பென்சிலின் பண்புகளைப் புரிந்து கொண்டேன்!" என்றான் பேரன்.

செய்து பார்ப்போம்

கலையும் கைவண்ணமும்

1. முற்றும் உணர்ந்தவர் இல்லை, முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க – சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். *

பாடல்பொருள்: பொன்னாலான காதணிகளை அணிந்த பெண்ணே! உலகில் முழுமையாகக் கற்று உணர்ந்தவர் எவரும் இல்லை. ஆகையால், அனைத்தையும் கற்றுத் தேர்ந்துவிட்டோம் என ஒருவன் செருக்கு கொள்ளக்கூடாது; ஏனெனில், கொல்லன் உலைச்சம்மட்டியால் உடைபடாத பெரிய மலையைச் சிறிய உளி தகர்த்துவிடும்.

சொல்பொருள்:

முற்றும் உணர்ந்தவர்	–	முழுமையாகக் கற்று உணர்ந்தவர்
கற்றனம்	–	கற்றுவிட்டோம்
களியற்க	–	செருக்குக் கொள்ளக்கூடாது
கனங்குழாய்	–	பொன்னாலான காதணிகளை அணிந்த பெண்ணே
தகரும்	–	உடைபடும்
கொல்லுலை	–	கொல்லன் உலை

2. வாங்கும் கவளத்து ஒருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயர்உறா – ஆங்கதுகொண் (டு)
ஊரும் எறும்புஇங்கு ஒருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோடு அயின்று.

பாடல்பொருள் : அசைந்து கொண்டிருக்கும் யானைகள், தாம் உண்ணும் உணவில் வாயினின்று தவறிச் சிறிது விழுந்துவிட்டால், அதற்காக அவை வருந்துவதில்லை. அவ்வாறு சிந்திய உணவை, அங்கு ஊர்ந்து செல்லும் ஒருகோடி எறும்புகள், தம் சுற்றம் சூழ உண்டு வாழும். ஒருவர், தம்மிடம் உள்ள செல்வத்தின் சிறு பகுதியைப் பிறருக்குப் பயன்படும்படி செலவு செய்வதனால் பலரும் பயன் பெறுவர்.

சொல்பொருள்:

கவளம்	–	சோற்று உருண்டை
தூங்கும்	–	அசைந்து கொண்டிருக்கும்
களிறு	–	ஆண் யானை
துயர்உறா	–	வருத்தம் அடைவதில்லை
உப்யும்	–	வாழும்
ஆரும்	–	நிறைவுபெறும்
கிளையோடு	–	சுற்றத்தாரோடு
அயின்று	–	உணவாக உண்டு

3. மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்; – செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்;
கருமமே கண்ணாயி னார். *

பாடல்பொருள்:

தாம் மேற்கொண்ட செயலில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள், உடல் வருத்தம், பசி, உறக்கம், பிறர்செய்யும் தீமைகள், காலத்தின் அருமை, பிறரால் ஏற்படும் இழுக்குகள் ஆகியவற்றைப் பொருட்படுத்த மாட்டார்கள்.

சொல்பொருள்:

மெய்	–	உடல்
செவ்வி	–	காலம்
துஞ்சார்	–	உறங்கார்

ஆசிரியர் குறிப்பு

பெயர் – குமரகுருபரர்

ஊர் – தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருவைகுண்டம்

பெற்றோர் – சண்முக சிகாமணிக் கவிராயர், சிவகாம சுந்தரி

சிறப்பு – இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர்

காலம் – 17 ஆம் நூற்றாண்டு

குமரகுருபரர்

பயிற்சி

அ. பிரித்து எழுதுக.

1. சிற்றுளி = _____
2. கொல்லுலை = _____
3. ஆங்கது = _____
4. கண்ணாயினார் = _____
5. நல்வழி = _____

ஆ. எதிர்ச்சொல் எழுதுக.

1. குறை x _____
2. நல்வழி x _____
3. விழிப்பு x _____
4. கவலை x _____

இ. விடை எழுதுக.

1. முழுவதும் கற்றுவிட்டோம் எனச் செருக்கடையக் கூடாது. ஏன்?
2. யானை உண்ணும்போது சிந்தும் உணவு எதற்குப் பயன்படுகிறது?
3. ஒரு செயலில் ஈடுபடுபவர் எவற்றைப் பொருட்படுத்த மாட்டார்?

பட்டிமன்றம் நடத்துங்கள்.

குழுவாகச் செய்வோம்

நெஞ்சை அள்ளும் தஞ்சைப் பெரிய கோவில்

(கடிதம்)

58 , கலைமகள் நகர்,
காரைக்குடி,
01.10.2011.

அன்புத்தோழி அமுதா!

நலம். நலமறிய ஆவல். நாங்கள் காலாண்டு விடுமுறையில் தஞ்சாவூரில் உள்ள அத்தை வீட்டிற்குப் பேருந்தில் புறப்பட்டோம். தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் காவிரி பாயும் தஞ்சைத் தரணியில் பார்க்கும் இடமெல்லாம் வயல்கள்; பச்சைப்பசேல் எனத் தலையசைத்து ஆடும் நெற்பயிர்கள்; நெற்கதிர்களைக் கொத்தித் தின்னக் கூடும் குருவிக்கூட்டங்கள்; ஆங்காங்கே நீர் நிலைகளில் பூத்துக்குலுங்கும் தாமரை, அல்லி மலர்கள். அவை மனத்திற்கு மகிழ்ச்சியைத் தந்தன. மாமாவும் அத்தையும் பேருந்து நிலையத்தில் எங்களை வரவேற்று வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

மறுநாள், அவர்கள் எங்களைத் தஞ்சைப் பெரியகோவிலுக்கு அழைத்துச் சென்றார்கள். கோவிலைத் தொலைவில் இருந்து பார்த்தபோதே மனத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது. "இக்கோவில் இராசராச சோழனால் கட்டப்பட்டது; நாம் காண்பது கேரளாந்தகன் திருவாயில்" என்று மாமா கூறினார். அங்கு, ஒரே கல்லால் ஆன மிக உயரமான இரு தூண்கள் இருப்பது மிகவும் அருமை.

வாயிலின்மேல் ஐந்துநிலைகள் உடைய கருங்கல் கோபுரம் செம்மாந்து நிற்கிறது. இதுதான் தமிழகத்தில் எழுப்பப்பட்ட உயரமான முதற்கோபுரமாம். கோபுரத்தில் தெய்வச்சிற்பங்கள், விலங்குகள் என அனைத்தும் உயிருள்ளவை போன்று காட்சியளிக்கின்றன.

அடுத்த வாயில், 'இராசராசன் திருவாயில்' என்றார் மாமா. அது மூன்று நிலை உடைய கருங்கல் கோபுரம். அந்நுழைவாயிலின் இருபுறமும் எழில்மிகு மிகப் பெரிய துவாரபாலகர் சிற்பங்கள். அவற்றுள், இடப்புறம் உள்ள சிற்பம் கற்பனையின் சிகரம் எனலாம்.

துவாரபாலகரின் வலக்கால், 'கதை' என்னும் ஆயுதத்தின்மேல் அழுந்தி உள்ளது. அதைச் சுற்றியுள்ள பெரிய பாம்பு ஒன்று, யானையை விழுங்குவது போன்ற சிற்பம். யானையையே விழுங்கும் பாம்பு எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும். அப்பாம்பை மிதிக்கும் துவாரபாலகர் எவ்வளவு வலிமை வாய்ந்தவராக இருக்க வேண்டும். அத் துவாரபாலகர் வணங்கும் இறைவன் எவ்வளவு ஆற்றல் மிக்கவராக இருத்தல் வேண்டும்; நினைத்துப் பார்த்தேன். எனக்கு வியப்பாக இருந்தது.

கோபுரத்தில் அமைந்துள்ள சிற்பங்கள் உயிர் ஓவியங்களாகக் காட்சி அளிக்கின்றன. காட்சிக்கும் கருத்துக்கும் சிறப்பளிக்கும் வகையில் அனைத்துச் சிற்பங்களையும் அமைத்துள்ளார் மன்னன் இராசராசன். அவை புராண நிகழ்வுகளைக் கண்முன் காட்டுகின்றன.

கோவிலின் உள்ளே ஒரே கல்லால் ஆன மிகப்பெரிய நந்தியைக் கண்டேன். இந்த நந்தி விந்தையிலும் விந்தையானது! அதனருகே நான் நின்றபோது என் உயரம் மிகவும் குட்டையாக இருந்ததை உணர்ந்தேன்.

கோபுரத்தை அண்ணாந்து பார்த்தேன். அக்கோபுரத்தைத் திருவிமானம் என்றும் கூறுவர். அதன் உச்சியில் மிகப்பெரிய உருண்டை வடிவக்கல்லைக் கண்டேன் . "அந்தக்கல் எண்பத்தொரு 'டன்' எடை கொண்டது" என்று மாமா கூறினார். அக்காலத்தில், இவ்வளவு பெரிய கல்லை அவ்வளவு உயரத்திற்கு எப்படிக் கொண்டு சென்றார்கள் என்று வியந்து நின்றேன். அத்திருவிமானத்தின் கீழே இறைவன் இருக்கும் கருவறை உள்ளது.

"கோவிலில் உள்ள எழில்மிகு ஓவியங்கள் அனைத்தும் இலைகள், பூக்களைக்கொண்டு செய்த இயற்கை வண்ணங்களால் தீட்டப்பட்டவை" என்றார் ஒருவர். அர்த்த மண்டபத்தின் உள்ளே இராசராசன் சிற்பம் உள்ளது. அச்சிற்பத்தைச் சுற்றிலும் நடன நங்கைகள் நளினத்துடன் ஆடும் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இவற்றை நினைத்துப் பார்க்கும்போது நாட்டியக்கலைமீது இராசராசனுக்கு இருந்த பெருவிருப்பத்தை அறிந்தேன்.



கோவிலின் பக்கவாட்டுச் சுவரில் நாட்டியக்கலையில் உள்ள ஆடல்வகைகளை விளக்கும் சிற்பங்கள்! இவை அனைத்தையும் பார்த்து மகிழ்ந்தேன். என்னைப்போலவே வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் நம் கட்டடக் கலையையும் சிற்பக் கலையையும் கண்டுகளித்தனர்.

சோழர்கால ஓவியம் – சனகாதி முனிவர்கள்

எனக்குக் கோவிலைவிட்டு வரவே மனம் இல்லை. மீண்டும் மீண்டும் பார்த்தேன். "இக்கோவிலைக் கட்டி ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன" என்றார் மாமா.

நம் முன்னோரின் கலைத்திறனையும் கட்டடக் கலையையும் எண்ணியெண்ணி வியந்தேன்.

ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் நிமிர்ந்து நிற்கும் தஞ்சைப் பெரிய கோவிலைக் காண எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. இக்கோவிலைப் பற்றி மேலும் பல செய்திகளை நேரில் வந்து கூறுகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புத் தோழி,
த. தமிழ்ச்செல்வி.

உறைமேல் முகவரி

அ. அமுத யாழினி,
த/பெ. அருண்மொழி,
115, பெரிய கடைவீதி,
நீலாம்பூர்,
கோவை – 641062.

தஞ்சை மாவட்டத்தில் மலைகளோ பாறைகளோ இல்லை. ஆகையால் புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில், நார்த்தாமலை முதலிய இடங்களில் இருந்து கற்களும் பாறைகளும் கொண்டுவரப்பட்டுத் தஞ்சைப் பெரியகோவில் கட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம், 1987 ஆம் ஆண்டு தஞ்சைப் பெரிய கோவிலை 'உலகப் பாரம்பரியச் சின்னமாக' அறிவித்துள்ளது.

கி.பி. 1010 ஆம் ஆண்டு தஞ்சைப் பெரியகோவிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்றது. 2010 ஆம் ஆண்டில் ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்தன.

தஞ்சைப் பெரிய கோவில் ஆயிரமாவது ஆண்டு நிறைவுவிழாக் காட்சிப்படங்கள்

விழா மேடையில் இடம் பெற்றிருந்த மாமன்னன் இராசராசன் சிலை.

விழாவில் வெளியிடப்பட்ட சிறப்பு அஞ்சல் தலை , சிறப்பு நாணயம் .

களிமேடு கிராமத்தினர் வழங்கிய திருமுறை ஓதுதல்.

விழாவில் இடம் பெற்ற கும்மி நடனம்.

முனைவர் பத்மா சுப்பிரமணியம் குழுவினரது நடனம்.

பயிற்சி

I. அ. வகுப்பறையில் பேசுக.

உன் ஊரிலுள்ள கோவில்கள், சிறப்பு வாய்ந்த இடங்களின் பெயர்களைக் கூறுக. அவற்றின் அமைப்பைப் பற்றி விவரிக்க.

ஆ. எழுதுக.

1. உன் மனம் கவர்ந்த இடம் அல்லது நீ விரும்பும் பொருளைப் பற்றி உன் தோழிக்கு / தோழனுக்குக் கடிதம் எழுதுக.

2. உன் ஊர்த்திருவிழாவிற்கு அழைப்பு விடுத்து உறவினர்க்குக் கடிதம் எழுதுக.

இ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. களஞ்சியம் – _____
2. தரணி – _____
3. டன் – _____

ஈ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கோவிலைக் குறிக்கும் வேறு சொல் _____

   (அ) இல்லம் (ஆ) ஆலயம் (இ) சத்திரம்

2. நாட்டியத்தைக் குறிக்கும் வேறு சொல் _____

   (அ) நாடகம் (ஆ) நடனம் (இ) பாடல்

3. ஓவியத்தைக் குறிக்கும் வேறு சொல் _____

   (அ) வண்ணம் (ஆ) சிற்பம் (இ) சித்திரம்

4. யானையைக் குறிக்கும் வேறு சொல் _____

   (அ) பரி (ஆ) மந்தி (இ) கரி

உ. விடை எழுதுக.

1. இராசராசன் வாயிலின் சிறப்பு யாது?
2. கோவிலில் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ள உருவங்கள் எவை?
3. தஞ்சைக் கோவிலில் உள்ள நந்திச்சிலை பற்றி எழுதுக.
4. தஞ்சைக் கோவிலின் அமைப்புப் பற்றி எழுதுக.

II. இணைச் சொற்களை அறிக.

1. என் தாய் என்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார்.
2. அமலநாதன் நன்றாகப் படித்துப் பேரும் புகழும் பெற்றான்.
3. மூங்கில் மரங்கள் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்தன.

வண்ண எழுத்தில் உள்ள சொற்கள் இரண்டும் ஒரே பொருளைத் தந்து கருத்தை வலுப்படுத்துகின்றன. இவற்றை நேரிணை என்கிறோம்.

1. குழந்தை இங்கும் அங்கும் ஓடி விளையாடியது.
2. நண்பர்களின் இன்ப துன்பங்களில் நாம் பங்கெடுக்க வேண்டும்.
3. நாம் அனைவரிடமும் விருப்பு வெறுப்பு இன்றி நடந்துகொள்ள வேண்டும்.

வண்ண எழுத்தில் உள்ள சொற்கள் எதிர்ச்சொற்களாக அமைந்து கருத்துக்கு வலுச்சேர்க்கின்றன. எனவே, இவற்றை எதிரிணை என்கிறோம்.

1. தஞ்சையில் நெல்வயல்கள் பச்சைப் பசேல் எனக் காணப்படுகின்றன.
2. கிளியின் மூக்குச் செக்கச் செவேல் என இருக்கும்.
3. முயல் வெள்ளை வெளேரென இருந்தது.

வண்ண எழுத்தில் உள்ள சொற்கள் வண்ணத்தின் செறிவினை (அடர்த்தியை) வலுப்படுத்துகின்றன. இவற்றைச் செறியிணை என்கிறோம்.

இணைச்சொற்கள் – நேரிணை, எதிரிணை,
செறியிணை என மூவகைப்படும்

ஆ. பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டத்தில் எடுத்து எழுதுக.

கன்னங்கரேல், கண்ணும் கருத்துமாக, இன்ப துன்பம், சீரும் சிறப்பும், வெற்றி தோல்வி, ஒப்பாரும் மிக்காரும், அன்றும் இன்றும், தன்னந்தனியாக.

நேரிணை	எதிரிணை	செறியிணை

ஆ. படிப்போம்! எழுதுவோம்!

இனியனின் நாள்குறிப்பு

04 – சூலை – 2013 – வெள்ளி

இன்று காலையில் நண்பனுடன் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில் மூன்றாம் வகுப்பில் படிக்கும் கந்தன் அழுதபடி நின்று கொண்டிருந்தான்.

நாங்கள் அவனைப் பார்த்து, "கந்தா. . . ஏன் அழுகிறாய்?" என்று கேட்டோம். பென்சில் வாங்குவதற்காக அப்பா கொடுத்த ஐந்துரூபாய்க் காசைக் காணவில்லை", எனக் கூறி மீண்டும் அழத்தொடங்கினான்.

"ஐந்துரூபாயை எங்கே வைத்தாய்?", எனக் கேட்டோம். அதற்குக் கந்தன், "எனது சட்டைப் பையில்தான் வைத்தேன்" என்றான். நாங்கள், அவன் சட்டைப் பையைப் பார்த்தோம். பையில் சிறிய ஓட்டை இருந்தது. அந்த ஓட்டை வழியாகத்தான் காசு விழுந்திருக்கும் என முடிவு செய்தோம். எப்படியாவது கந்தனின் அழுகையை நிறுத்த நினைத்தோம். வீட்டில் எங்களுக்குக் கொடுத்த காசுகளைத் திரட்டினோம். அவனுக்குப் பென்சில் வாங்கித்தர முடிவு செய்தோம்.

அந்த நேரத்தில் நான்காம் வகுப்பில் படிக்கும் முத்து, அங்கு வந்தான். பள்ளிக்கு வரும் வழியில் ஐந்துரூபாய்க்காசு ஒன்று கிடைத்ததாகச் சொன்னான். "அப்படியா! அந்தக் காசு, கந்தனுக்கு அவன் தந்தை 'பென்சில்' வாங்குவதற்குக் கொடுத்தது" எனக் கூறினோம். உடனே, முத்து அந்த ஐந்துரூபாயைக் கந்தனிடம் கொடுத்தான். முத்துவின் நேர்மையான உள்ளம் எங்களை மிகவும் கவர்ந்தது. முத்துவுக்கு நன்றி கூறினோம்.

கந்தனுக்கு நல்ல பென்சில் ஒன்றை வாங்கிக் கொடுத்தோம். கந்தனின் அழுகை நின்றது; முகத்தில் மலர்ச்சி தோன்றியது. தானாகவே முன்வந்து உதவும் நண்பர்களைப் பெற்றிருக்கின்றேன் என்னும் உணர்வு என்னை நெகிழச் செய்தது. இந்த நட்பு என்றென்றும் தொடர வேண்டுமென விரும்புகின்றேன்.

இந்நாள் என்வாழ்வில் மறக்க முடியாத ஓர் இனிய நன்னாளாகும்.

நீ, நாட்குறிப்பு எழுதியது உண்டா? இல்லையெனில், இதுபோன்று இன்று முதல், நாட்குறிப்பு எழுதிப் பழகுக; தொடர்ந்து எழுதுக.

இ. உன் வாழ்வில் நிகழ்ந்த இனிமையான ஒரு செய்தியைப் பற்றி எழுதுக.

தேதி

கிழமை :

மாதம் :

ஆண்டு :

இணைந்து செய்வோம்

அ. புதிர்களுக்கு விடையைக் கண்டுபிடித்துக் கூறுக.

1. ஆயிரம் காய் காய்க்கும்; ஆனால், ஒன்றுகூடக் கனியாகாது. அஃது என்ன ?
2. ஆனை விரும்பும் சேனை விரும்பும்; அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும். அஃது என்ன ?
3. சின்னஞ்சிறு கதவுகள், செய்யாத கதவுகள், திறந்தாலும் மூடினாலும் சத்தம் செய்யாத கதவுகள். அவை என்ன ?
4. தண்ணீரில் விளைந்தவன் மழைநீரில் கரைகிறான். அவன் யார் ?
5. உமிபோலப் பூப்பூக்கும் சிமிழ்போலக் காய்காய்க்கும். அஃது என்ன ?
6. இடி இடிக்கும்; மின்னல் மின்னும்; ஆனால், மழை பெய்யாது. அஃது என்ன ?
7. வளைந்து நெளிந்து செல்லும் இது, நிலத்தை வளப்படுத்தும். அஃது என்ன ?
8. வளைந்து வளைந்து செல்பவன் – உன்னை விரும்பும் ஊரில் சேர்ப்பான். அவன் யார் ?
9. காக்கைபோலக் கறுப்பு நிறம்; கையில் தொட்டால் ஊதா நிறம்; வாயில் போட்டால் நீல நிறம்; சுவைத்தால் இனிக்கும் பழம். அஃது என்ன ?

ஆ. துண்டு வெளியீட்டைப் படிக்கவும்.

நீங்கள் பள்ளி செல்லும் மாணவரா ?

வேலை தேடுபவரா ?

கணினி கற்க விருப்பமா ?

முத்து கணினிப் பயிற்சி மையம்

6 வயதுமுதல் அனைவரும் சேரலாம்.

திறப்பு விழா :

2012 மே 2,
புதன்கிழமை

பயிற்சி நேரம் :
காலை 8 மணிமுதல்
இரவு 10 மணிவரை
★ ★ ★

திறப்பு விழாச் சலுகை:
கட்டணத்தில்
10% கழிவு.

குறைந்த கட்டணம்!
நிறைந்த பயிற்சி!

பயிற்சி மையம் : 115, அன்னூர் முதன்மைச் சாலை,
கூட்டுறவு வங்கி அருகில், தென்னம்பாளையம்.

விடை கூறுக.

1. துண்டு அறிக்கை எதனைப் பற்றியது ?
2. கணினி பயிற்சி மையத்தின் பெயர் என்ன ?
3. கணினி பயிற்சியில் சேர வயது வரம்பு உள்ளதா ?
4. கணினி பயிற்சி மையம், எதன் அருகில் உள்ளது ?

இ. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சிபி அறைக்குள் வந்தான். கூண்டுக்குள் இருந்த கிளி, படபடவெனச் சிறகுகளை அடித்தது; 'கீ, கீ' எனக் கத்தியது; அதன் காலில் கட்டுப் போடப்பட்டிருந்தது. அதன் அருகில் சென்றவன், சில மிளகாய்ப் பழங்களைக் கூண்டுக்குள் வைத்தான்.

"கொஞ்சம் பொறுத்துக்கொள். ஒரிரண்டு நாளில் நீ விடுதலையாகிப் பறக்கலாம்", என அன்போடு கூறினான்.

அப்பொழுது, அங்குக் கறுப்பு நிறப் பூனை ஒன்று வந்தது.

அது 'மியாவ்' எனக் கத்தியது; அவன் கால்களை உரசியவாறே சுற்றிச்சுற்றி வந்தது.

" உனக்கும் பசிக்கிறதா ? இரு, வருகிறேன். பால் சூடு ஆற வேண்டாவா?" எனப் பூனையைச் செல்லமாய்த் தடவியவாறே கூறினான்.

விடை தருக.

1. கிளி, படபட வெனச் சிறகடித்துக் கத்தியது. எனவே, சிபி _____
2. கிளியினால் பறக்கமுடியாது; ஏனெனில், _____
3. சிபி, கிளியைக் கூண்டுக்குள் அடைத்துள்ளான்; ஏனெனில், _____
4. பூனைக்குப் பசி; எனவே, _____
5. சிபி, பூனைக்குப் பால் தரவில்லை; ஏனெனில், _____
6. சிபி, கிளியை வளர்க்கிறானா ?
7. சிபியின் இயல்பு பற்றி எழுதுக.

ஈ. படத்தைப் பார், பாடல் எழுதுக.

பார் பார் தொட்டியைப் பார்
தொட்டியின் மேலே செடியைப் பார்
செடியில் பசுமையான _____

_____

_____

_____

_____

குழுவாகச் செய்வோம்

செயல்திட்டம்

- உன் ஊரில் விளையாடும்போது பாடப்படும் பாடல்களைத் திரட்டி வருக.

  (எ.கா.) குலை குலையாய் முந்திரிக்காய் ...

- சிறுவர் இதழ்களில் வரும் கதைகளைத் தொகுத்து, கதைத் தொகுப்பு ஒன்று உருவாக்குக.

மூன்று பொற்காசுகள்

நாகப்பன் பெருஞ்செல்வர். அவர், தன்னிடம் வேலையில் சேர்பவர்களுக்கு ஆண்டு முடிவில் மூன்று பொற்காசுகள் ஊதியமாக வழங்குவார். அதற்குமுன் அறிவைச் சோதிப்பதற்கு மூன்று செயல்களைக் கொடுப்பார். அவற்றைச் சரியாகச் செய்து முடிக்க வேண்டும். இல்லையெனில், ஒவ்வொரு செயலுக்கும் ஊதியத்திலிருந்து ஒரு பொற்காசைக் குறைத்துக்கொள்வார்.

இதனை ஒப்புக்கொள்பவரையே வேலையில் சேர்த்துக்கொள்வார். நாகப்பனிடம் வேலையில் சேர்ந்த எவரும் இதுவரை ஊதியம் பெற்றதில்லை. ஏனெனில், ஆண்டு முடிவில் அவர் தரும் செயல்களைச் செய்ய முடியாமல் தோல்வியடைந்து சென்றுவிடுவர். இவ்வாறாக, நாகப்பன் வேலையாள்களுக்கு ஊதியம் தராமல் ஏமாற்றி வந்தார்.

நாகப்பனின் ஏமாற்றும் எண்ணத்தை அறிந்த அறிவுநம்பி அவருக்குப் பாடம் புகட்ட எண்ணினான். நாகப்பனின் விதிகளை ஒப்புக்கொண்டு அறிவுநம்பி வேலையில் சேர்ந்தான். ஓராண்டு முடிவில், "ஐயா, நான் பணியில் சேர்ந்து இன்றோடு ஓராண்டு நிறைவடைகிறது; ஊதியம் வேண்டும்" என்றான். "அப்படியா! விதிகள் உனக்கு நினைவிருக்கிறதா?" எனக் கேட்டார் நாகப்பன்.

அறிவுநம்பி, "ஐயா, நன்றாக நினைவிருக்கிறது" என்றான். "இவ்வூரில் எத்தனை காகங்கள் இருக்கின்றன? எண்ணிச்சொல். இதுதான் முதல் வேலை", என்றார் நாகப்பன். "ஆயிரத்துப்பத்து" என்றான் அறிவுநம்பி.



உடனடி பதிலைக் கேட்ட நாகப்பன், சற்றே அதிர்ச்சியடைந்து "அது எப்படி?" என்றார். அறிவுநம்பி சற்றும் தயங்காமல், "ஐயமிருந்தால் காகங்களை எண்ணிப்பாருங்கள்" எனச் சிரித்துக் கொண்டே சொன்னான். "ஆயிரத்துப்பத்துக் காகங்களைவிட அதிகமாக இருந்தால் என்ன செய்வது"? எனக் கேட்டார் நாகப்பன்.

"அதிகமாக இருந்தால் அவை வெளியூரில் இருந்து வந்தவையாக இருக்கும்" என்றான் அறிவுநம்பி. "எண்ணிக்கை குறைவாக இருந்தால்" என நாகப்பன் கேட்டவுடன், "இங்குள்ளவை வெளியூருக்குச் சென்றிருக்கும்" எனக் கூறிக் கலகலவெனச் சிரித்தான் அறிவுநம்பி.

"அப்படியா! அடுத்தவேலை, இந்த அறைக்குள் இருக்கும் நெல்லைக் காயவைக்க வேண்டும். வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது" என்றார். "இதோ ஒரு நொடியில் முடிக்கிறேன்"என்று கூறிய அறிவுநம்பி, மடமடவென வீட்டின் கூரை மேல் ஏறினான்; கூரையைப் பிரித்தான்; கதிரவனின் வெப்பம் வீட்டிற்குள் இருந்த நெல்லின்மீது விழுந்தது. "ஐயோ கூரை.. கூரை.." எனப் பதறினார் நாகப்பன்."ஐயா, நீங்கள் கூறியபடியே அறைக்குள்ளேயே நெல்லைக் காய வைத்துள்ளேன்"என்றான் அறிவுநம்பி. நாகப்பன் பற்களை நறநறவெனக் கடித்தார்.



மூன்றாவது வேலையை இவனால் செய்யவே முடியாது என முடிவு செய்தார். அறிவுநம்பியைப் பார்த்து, "என் தலையின் எடை என்ன? சரியாகக் கூறு" என்றார். அறிவுநம்பி சற்றுச் சிந்தித்தான்; நாகப்பனின் தலையை உற்று நோக்கினான்; விரைவாகத் தோட்டத்திற்குச் சென்றான். பூசணிக்காய் ஒன்றனைப் பறித்து வந்தான். "ஐயா, உங்கள் தலையின் எடையும் இப்பூசணிக்காயின் எடையும் ஒன்றுதான்" என்றான். "அது எப்படி ஒன்றாகும்" என்றார் நாகப்பன். "இதோ! தராசு இருக்கிறது. ஒரு தட்டில் பூசணிக்காயை வைக்கிறேன். ஐயம் இருந்தால் சரிபார்த்துக்கொள்ளுங்கள்" என்றான். நாகப்பன் தன் தலையை நினைத்துப்பார்த்தார். தன் தவற்றை உணர்ந்தார்.

"இனிமேல் யாரையும் ஏமாற்ற மாட்டேன்" எனக்கூறி, அறிவுநம்பிக்கு மூன்று பொற்காசுகளைக் கொடுத்தார்.



பிறர் ஏமாறுவதைக் கண்டு மகிழும் மனநிலையை உருவாக்குவது சரியா என்பது குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுக.

வினைத்திட்பம்

1. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

பாடல்பொருள்

இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளிது. ஆனால், சொல்லியபடி செய்து முடித்தல் அரிது.

சொல்பொருள்: சொல்லியவண்ணம் – சொல்லியபடி

2. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

பாடல்பொருள்

ஒருவரின் தோற்றத்தைக் கண்டு இகழக் கூடாது. ஏனெனில் உருண்டோடும் பெரிய தேரைக் காப்பது அதன் சிறிய அச்சாணியே ஆகும்.

சொல்பொருள் :

உருவு	–	உருவம்
எள்ளாமை	–	இகழ்ந்து பேசாமை
அன்னார்	–	போன்றவர்

பெருமை

1. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

பாடல்பொருள்

பெருந்தன்மையான குணம் கொண்டவன் எல்லாரிடமும் எப்பொழுதும் பணிவாக நடந்து கொள்வான். சிறுமைக் குணம் உடையவன் எப்போதும் தன்னைத் தானே பாராட்டிப் புகழ்ந்துகொள்வான்.

சொல் பொருள்:

பணியுமாம் – பணிவாக நடப்பர்

சிறுமை – இழிவான குணம்

2. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்.

பாடல் பொருள் :

பெருமை உடையவர் பிறரால் எளிதில் செய்து முடிக்க முடியாத செயல்களை, விடாமுயற்சியுடன் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர் ஆவர்.

சொல்பொருள் :

ஆற்றுவார் – செய்வார்

அருமை – எளிதில் செய்ய இயலாத அரிய செயல்.

பயிற்சிகள்

அ. பிரித்து எழுதுக.

1. உருவுகண்டு = _____
2. பெருந்தேர் = _____

ஆ. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. இகழ்தல் : _____
2. பாராட்டு : _____
3. விருப்பம் : _____
4. சிறுமை : _____

இ. விடை எழுதுக.

1. ஒருவரின் உருவத்தைக் கண்டு இகழக்கூடாது. ஏன் ?
2. அரிய செயலைச் செய்து முடிப்பதற்கு நமக்குத் தேவையானது எது ?

இணைந்து செய்வோம்

அ. சரியான விடையை ✔ குறியிடுக.

அ.1. பெருமைக் குணம் உடையவர் யார்?

1. அனைவருக்கும் உதவி செய்பவர்.
2. யாருக்கும் உதவாதிருப்பவர்.
3. பிடித்தவருக்கு மட்டும் உதவி செய்பவர்.

அ.2. சிறுமைக் குணம் உடையவர் யார்?

1. பிறர் பொருளை எடுத்துக்கொள்பவர்.
2. அவரின் அனுமதியோடு எடுத்துக்கொள்பவர்.
3. அதைப்போலவே வாங்கிக் கொள்ளலாம் என நினைப்பவர்.

அ.3. பணிவு என்பது

1. யார் எதைக் கூறினாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல்.
2. யார் எதைக் கூறினாலும் மறுத்துப் பேசுதல்.
3. சரியானவற்றை ஏற்றுக்கொள்ளுதல். தவறானவை எனில் தன் கருத்தை விளக்கங்களுடன் வெளிப்படுத்துதல்.

உரைநடை

கலை உலகில் கலைவாணர்

இயல் – 4

அன்று, நாடகம் முடிந்ததும் மக்கள் கூட்டம், மேடையை நோக்கி ஓடியது. நாடகத்தில் மிகச் சிறப்பாக நடித்திருந்த சிறுவனுக்குப் பாராட்டுகள் குவிந்தன. விழாவிற்குத் தலைமையேற்ற சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் "இச்சிறுவன் வருங்காலத்தில் மாபெரும் மேதையாக விளங்கப்போகிறான்; இவனால் தமிழ்நாடே பெருமையடையப் போகிறது" என்று பாராட்டிப் பேசினார். இந்த அளவிற்கு அனைவரின் கவனத்தையும் ஈர்த்த அச்சிறுவன் யார்?

நாஞ்சில் நாடு என்று அழைக்கப்படும் குமரி மாவட்டம் எண்ணற்ற கலைஞர்களையும் செந்தமிழ் அறிஞர்களையும் நல்கியது. இம்மாவட்டத்திலுள்ள ஒழுகினசேரியில் 1908ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் சுடலைமுத்து–இசக்கியம்மாளுக்கு மகனாகப் பிறந்த அச்சிறுவனே பார்போற்றும் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்.

இளம் வயதிலேயே கல்வியை இழந்த அவர், குடும்பத்திற்கு உதவிட, நாடக அரங்குகளில் குளிர்பானங்கள் விற்றார். இவரது நல்ல குரல் வளமும், பாடும் திறனும், நகைச்சுவைப் பேச்சும் நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தன. சிரிப்பு நடிகராக மட்டுமல்லாமல் சிந்தனைக்குரிய செய்திகளைச் சொல்பவராகவும் விளங்கினார். இவருடைய நகைச்சுவைப் பேச்சு படித்தவர் மட்டுமல்லாது பாமரரும் மகிழ்ந்து போற்றும் வண்ணம் இருந்தது.

இவர் பாடுவார், ஆடுவார், எழுதுவார், உரையாற்றுவார், நடிப்பார், நடிக்கவும் வைப்பார், சிரிக்கச் சிரிக்கப் பேசி மக்களைச் சிந்திக்கவும் வைப்பார். பிறர் மனத்தைப் புண்படுத்தாமல் பண்படுத்தும் நகைச்சுவையைக் கையாள்வதில் சிறந்து விளங்கினார்.

என்.எஸ். கிருஷ்ணன் எழுத்தாளர் மாநாடு ஒன்றில் பேசும்போது, அங்குக் கூடியிருந்தவர்களைப் பார்த்து, "இன்று எழுத்தாளர்கள் எழுதுகோலில் எப்படிப்பட்ட மையைத் தொட்டு எழுதுகிறார்கள் தெரியுமா? சிலர் பெருமை தொட்டு எழுதுகின்றனர். பலர் தற்பெருமையில் தொட்டு எழுதுகின்றனர். வேறு சிலர் பொறாமையில் தொட்டு எழுதுகின்றனர். மற்றும் சிலர் பழைமையில் தொட்டு எழுதுகின்றனர்.

இவற்றையெல்லாம்கூட ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், யாருமே தொடவே கூடாத, தீமை தரக்கூடிய சில "மை"கள் உள்ளன. அவை என்னென்ன தெரியுமா?" என்று கேட்டார். கூட்டத்தினர் விடை தெரியாமல், என்ன சொல்லப்போகிறார் என்ற ஆர்வத்துடன் உன்னிப்பாகக் கவனித்தனர். "கயமை, பொய்மை, மடமை, வேற்றுமை ஆகியவைதாம் அவை" என்றார். அனைவரும் கையொலி எழுப்பி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

எழுத்தாளர்கள் சமுதாயக் கடமையாகத் தொட்டு எழுத வேண்டிய "மை"கள் என்னென்ன? என்று அவையோரைப் பார்த்துக் கேட்டார். அவையோர் விழிக்க, அவரே விடை கூறினார். "நன்மை தரக்கூடிய நேர்மை, புதுமை, செம்மை, உண்மை" என்றார். அரங்கம் முழுவதும் கையொலி அடங்க வெகு நேரமாகியது. மேலும் அவர் "மக்கள் மனத்திலிருந்து" நீக்க வேண்டிய "மைகள்" வறுமை, ஏழைமை, மடமை, கல்லாமை, அறியாமை என்று சொன்னபோது அவையோர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. 'மை' என்ற சொல்லைக் கொண்டு என்.எஸ்.கிருஷ்ணன் ஆற்றிய செந்தமிழ்ச்சொல் விளையாடல் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

"வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்", "சிரிக்கத் தெரிந்தவன் மனிதன் மட்டுமே! சிரித்து வாழ வேண்டும்" என்று கூறிய அவர், திரைப்படத்தில் சிரிப்பின் சிறப்பை விளக்கி...

சிரிப்பு பற்றிய பழமொழிகளைச் சேகரியுங்கள்

சிரிப்பு... இதன்
சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே நமது பொறுப்பு.
சிந்திக்கத் தெரிந்த மனித இனத்திற்கே
சொந்தமான கையிருப்பு
எந்த ஜீவராசியும் செய்ய முடியாத
செயலாகும் இந்தச் சிரிப்பு
மனம் கருப்பா வெளுப்பா என்பதை எடுத்துக்
காட்டும் கண்ணாடிச் சிரிப்பு ...
களைப்பை நீக்கிக் கவலையைப் போக்கி
மூளைக்குத் தரும் சுறுசுறுப்பு ...

என்ற பாடல் பாடிச் சிந்தனையைத் தூண்டுகிறார். இவரது நகைச்சுவை உணர்வைப் பாராட்டி முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், 'நகைச்சுவை அரசு' என்னும் பட்டத்தை வழங்கினார்.

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் தலைமையில் நடராஜா கல்விக்கழகம் ஏற்பாடு செய்த விழாவில் கலைவாணர்' என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் தனக்குத்தானே நாகரிகக் கோமாளி ' என்ற பட்டத்தையும் சூட்டிக் கொண்டார்.

எதிர்காலத்தில் உலகில் அறிவியல் வளர்ச்சி எப்படியிருக்கும் என்பதை அக்காலத்திலேயே திரைப்படங்களில்,

விஞ்ஞானத்தை வளர்க்கப் போறேண்டி – மேனாட்டாரை
விருந்துக் கழைச்சுக் காட்டப் போறேண்டி

.....

நெல்லு குத்த மாவரைக்க
நீரிறைக்க மிசினு
அல்லும் பகலும் ஆக்கி அரைக்க
அதுக்கொரு மிசினு....
என்று பாடியுள்ளார்.

ஆம் , இன்று நாம் பயன்படுத்தும் மின் அரைவை இயந்திரங்களைப் பற்றி அன்றே கூறியிருப்பது வியப்பிலும் வியப்பு.

நகைச்சுவைச் சிந்தனை உணர்வுக்கு, அப்பாற்பட்டுத் துன்பப்படுவோருக்கு உதவும் அரிய பண்பு அவரிடம் இருந்தது. ஒரு முறை துணை நடிகர் ஒருவர் உடனே ஊர் திரும்ப வேண்டியிருந்தது. பணம் இல்லாததால் வருத்தத்துடன் இருந்தார். இதனை அறிந்த கலைவாணர் துணை நடிகரை அழைத்தார். "என் பெட்டியில் பணம் இருக்கிறது, எடுத்துக்கொண்டு ஊர் போய்ச்சேர்" என்றார். நன்றி கூறிச் சென்ற துணை நடிகர் மீண்டும் திரும்பி வந்தார்.

உன் நண்பரிடம் உனக்குப் பிடித்த பண்பு எது ?

“ஐயா! பணத்தை எடுத்துக் கொள்ளச் சொன்னீர்கள், ஆனால், பெட்டிச் சாவியைத் தரவில்லையே?” என்று கேட்டார். கலைவாணர் சிரித்தார். “பெட்டிச்சாவியா? நான் என் பெட்டியை எப்போது பூட்டினேன்? அது எப்பொழுதும் திறந்துதான் இருக்கும். போய் உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்” என்று கூறினார். பணம் வைத்திருக்கும் பெட்டியை மட்டுமல்லாமல் மனத்தையும் எப்போதும் அவர் திறந்தே வைத்திருந்தார். இவ்வாறாக, இல்லை என வருவோருக்கு அள்ளி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தார் கலைவாணர்.

இத்தகு பெருமை வாய்ந்த கலைவாணருக்குப் பெருமைசேர்க்கும் வண்ணம் தமிழக அரசு சென்னையில் சிலை நிறுவியுள்ளது.

பயிற்சிகள்

அ) அகரமுதலியைப் பார்த்து பொருள் எழுதுக:

சதாவதானி –
மேதை –
நல்கியது –
பார் –
சொல்லொணா –
பாமரர் –
கையாள்வதில் –
கயமை –
மடமை –
நன்செய் –
செவிமடுத்தனர் –

ஆ. பிரித்து எழுதுக.

1. தலைமையேற்ற = _____
2. வருங்காலத்தில் = _____
3. இதையெல்லாம் = _____
4. என்னென்ன = _____

இ. சேர்த்து எழுதுக.

1. வாய்ப்பு + அளித்தனர் = _____
2. கை + ஆள்வதில் = _____
3. கூடி + இருந்தவர்கள் = _____
4. வைத்து + இருக்கும் = _____
5. அ + காலத்திலேயே = _____

ஈ. எதிர்ச்சொல் அமைத்துச் சொற்றொடரை நிரப்புக.

1. இளமையில் கற்பது எளிது; _____ கற்பது அரிது.
2. ஒற்றுமையுடன் வாழ்வது நன்று; வேற்றுமையை வளர்ப்பது _____.
3. நாம் புதுமையை ஏற்போம்; _____ காப்போம்.
4. நல்லொழுக்கம் பெருமை சேர்க்கும்; தீயொழுக்கம் _____சேர்க்கும்.
5. குழந்தைகளைப் புகழ வேண்டும்; _____கூடாது.
6. பகலில் தெரிவது கதிரவன்; _____தெரிவது விண்மீன்.
7. நான் உண்மை பேசுவேன் ; _____பேசமாட்டேன்.

உ. விடை எழுதுக.

1. எழுத்தாளர்கள் எப்படிப்பட்ட மையைத் தொட்டு எழுதவேண்டும்? என்று என்.எஸ்.கிருஷ்ணன் கூறுகிறார்?
2. சிரிப்பின் சிறப்பை என்.எஸ்.கிருஷ்ணன் எவ்வாறு விளக்குகிறார்?
3. கலைவாணர் ஒரு மனிதநேயர்– விளக்குக.
4. அறிவியல் வளர்ச்சி பற்றிக் கலைவாணர் கூறியவை யாவை?

அ. வகுப்பறையில் பேசுக.

நண்பர்களுடன் இணைந்து ஏதேனும் நகைச்சுவை உரையாடலை நடித்துக் காட்டுக.

இணைந்து செய்வோம்

ஆ. நகைச்சுவை உரையாடலை எழுதுக.

சிரிக்கலாம் வாங்க!

யானை : நான் வேகமா ஓடி கடையில் என்ன வாங்கி இருப்பேன் ?

குரங்கு : தெரியலையே!

யானை : வேறு என்ன ? மூச்சு தான்!

ஒட்டகச்சிவிங்கி :

அணில் :

மான் :

பாம்பு :

நீர் யானை :

காண்டா மிருகம் :

இ. பேச்சுத் தமிழில் அமைந்த சொற்றொடர்களைத் திருந்திய தமிழில் எழுதுக.

கேளுங்க ...! கொழந்தைகளா...! அந்த காலத்துல எங்களுக்கு வெவரம் பத்தாது. அதனால பொம்பல புள்ளைய பள்ளிக்கூடம் அனுப்பல. பள்ளிக்கூடம் ஒரு கனவா இருந்துச்சி. ஆனா இப்ப ஆம்பள பொம்பள எல்லாமே ஒன்னுதான். யாருமே ஒசந்தவங்க தாழ்ந்தவங்க என்ற பேச்சிக்கே இடமில்லை.

(எ.கா.) கேளுங்க ...! கொழந்தைகளா...!

– பேச்சுத் தமிழ்

கேளுங்கள் ...! குழந்தைகளே

– திருந்திய தமிழ்

ஈ. கீழ்க்காணும் தொடர்களை உரிய ஒலிப்புடன் மீண்டும் மீண்டும் சொல்லிப் பழகுங்கள். பிழையின்றி யார் அதிக முறை கூறுகிறார்கள்? எனப் போட்டியிடுங்கள்: வெல்லுங்கள்.

1. கடல் வற்றட்டும் கருவாடு தின்றிடலாம் எனக் குடல் வற்றி இளைத்ததாம் கோடியக்கரைக் கொக்கு.

2. வண்ணவண்ணப் பூக்கள் கண்ணைக் கவரும்,
எண்ணமெல்லாம் கன்னலாய் இனிக்கும்.

3. உருளுது புரளுது உலகம் சுழலுது, ஒடுது ஆடுது கூடுது குறையுது,
இரவும் பகலும் இருட்டுது மிரட்டுது.

உ. நிரப்புக.

சிந்தித்து நிரப்புக.









குழுவாகச் செய்வோம்

1. கட்டுரை எழுதுவோம்

1. பாடப்பகுதியின் முதல் பக்கத்தைப் படித்துப் பார்க்க.
2. அப்பகுதியில் இடம் பெற்ற முக்கிய செய்திகளை அடிக்கோடிடுக.
3. அவற்றைப் பட்டியலிட்டுக் கீழ்க்காணும் கட்டுரையின் பொருளுரையில் எடுத்து எழுதுக.

கலைவாணரின் இளமைப் பருவம்

முன்னுரை:

பார்போற்றும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் இளமைப் பருவம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பொருளுரை:

_____

_____

_____

முடிவுரை:

பிறரின் மனம் புண்படாமல் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த கலைவாணரைப் பின்பற்றுவோம்.

2. மேற்கண்ட கட்டுரையைப் போல் பாடப்பகுதியின் இரண்டு மற்றும் மூன்றாம் பக்கங்களுக்குக் குழுவாக இணைந்து கட்டுரைகள் எழுதுக. தகுந்த தலைப்பிடுக.

உன் வீட்டில் உள்ளவர்கள் பேசும் பேச்சுவழக்குச் சொற்களையும் அவற்றுக்கான இலக்கிய வழக்கு சொற்களையும் எழுதுக.

வெற்றியின் முதற்படி

"அம்மா! இன்று மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. நான் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளப் போகிறேன். எனக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும். அதற்காகப் பல நாளாகப் பயிற்சி எடுத்துவருகிறேன்" என்றான் செந்தில்.

"மகனே! உனக்குத்தான் பரிசு. உன்னை வெல்ல எவர் இருக்கிறார்! நம்பிக்கையுடன் முயற்சி செய்" என்று வாழ்த்தினார் அவன் தாய்.

எதிர்பார்த்தபடியே செந்திலுக்கு முதல் பரிசு கிடைத்தது. வெற்றிக் கோப்பையுடன் வீட்டுக்கு வந்தான். அம்மா விருந்து சமைத்துக் கொண்டு இருந்தார். தான் வெற்றி பெற்ற செய்தியை யாரோ அம்மாவிற்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அதைக் கொண்டாடத்தான் அம்மா விருந்து செய்கிறார் என்று நினைத்தான்.

தாயை அணைத்துக் கொண்ட செந்தில், "அம்மா! நான் வெற்றி பெற்றது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான். 'மகனே! நீ வெற்றி பெறுவாய் என்று எனக்கு உறுதியாகத் தெரியும். இந்த அட்டையைப் பார்' என்றார் அம்மா.

"மகனே! உன் வெற்றிக்கு வாழ்த்துகள். அதற்காகத்தான் இந்த விருந்து" என்று அதில் எழுதியிருந்தது. குடும்பத்தினருடன் செந்தில் விருந்தை மிக மகிழ்வோடு சுவைத்துச் சாப்பிட்டான்.

சிறிது நேரத்திற்குப்பின் செந்தில், அம்மா கொடுத்த அந்த அட்டையைக் கையில் எடுத்தான். பின்பக்கமும் ஏதோ எழுதி இருப்பதுபோலத் தெரிந்தது; திருப்பிப் பார்த்தான்.

அதில் 'அன்பு மகனே! தோல்வி ஏற்பட்டதற்காக வருந்தாதே; எதையும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்; தோல்வியே வெற்றியின் முதற்படி; முயற்சி செய்; வெற்றி பெறுவாய்! அதற்காகத்தான் இந்த விருந்து' என்று எழுதியிருந்தது. செந்தில் மகிழ்ச்சியோடு தன் அம்மாவைத் திரும்பிப்பார்த்தான்..

அட்டையின் இரண்டு பக்கமும் இரு வேறு செய்திகள் எழுதிய செந்திலின் அம்மாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்?

சிந்திக்கலாமா?

ஓட்டப்பந்தயத்தில் முதலில் வேகமாக ஓடிய அந்தோணி கீழே விழுந்ததால் இரண்டாவதாக ஓடி வந்த இருவரில், வில்லியம் முதலிடம் பெற்றுவிட்டான்.

இரண்டாவதாக ஓடி வந்த யூசுப், அந்தோணியைத் தூக்கிவிட்டதால் வெற்றி பெற முடியவில்லை.



பரிசு யாருக்கு? உன் கருத்தைக் கூறு.

செய்யுள்

பெண்கல்வி

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் – பாட
சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன் அன்னை!

சிலைபோல ஏனங்கு நின்றாய் ? – நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய் ?
விலைபோட்டு வாங்கவா முடியும் ? – கல்வி
வேளைதோ றும்கற்று வருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ கல்வி ? – நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!

படியாத பெண்ணா யிருந்தால் – கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால்
கடிகாரம் ஓடும்முன் ஓடு! – என்
கண்ணல்ல ? அண்டை வீட்டுப் பெண்களோடு
கடிதாய் இருக்குமிப் போது! – கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!

கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு – பெண்
கல்வி பெண்கல்விஎன் கின்றதன் போடு.

– பாவேந்தர் பாரதிதாசன்

ஆசிரியர் குறிப்பு :

பெயர்	–	பாரதிதாசன்.
இயற்பெயர்	–	சுப்புரத்தினம்.
ஊர்	–	புதுச்சேரி.
பெற்றோர்	–	கனகசபை , இலக்குமி அம்மையார்.
காலம்	–	29–04–1891 முதல் 21–04–1964 வரை
சிறப்புப்பெயர்கள்	–	பாவேந்தர், புரட்சிக்கவிஞர்.

பயிற்சிகள்

அ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக :

சொல்பொருள் :

தலைவாரி –

அன்னை –

பாடசாலை –

படியும் –

புதல்வி –

அண்டை வீடு –

கடிதாய் –

ஆ. பிரித்து எழுதுக .

1. பூச்சூடி = _____
2. ஏனங்கு = _____
3. இவ்வூரார் = _____
4. கண்ணல்ல = _____

அ. பெண் கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறும் வில்லுப்பாட்டு ஒன்றை உன் நண்பர்களுடன் இணைந்து அமைத்துப் பாடுக.

ஆ. கலந்துரையாடுக.

தேவி மூன்றாம் வகுப்பில் படிக்கும் குழந்தை. அவளுக்குத் தம்பி பிறந்தபின் தம்பியைப் பார்த்துக்கொள்வதற்காக பள்ளிக்குச் செல்ல வேண்டாம் என நிறுத்தப்பட்டாள்.

மணிமாலா ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். அவள் அம்மா சில வீடுகளில் வீட்டு வேலை செய்து பணம் ஈட்டி வந்தார். திடீரென அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லாமல் போனதால் மணிமாலா பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டு விட்டு வேலைக்கு அனுப்பப்பட்டாள்.

மேற்கூறிய நிகழ்வுகளிலிருந்து நீ தெரிந்து கொண்டது என்ன? இது போன்ற பெண் குழந்தைகளின் கல்வி நிலையை மாற்ற என்ன செய்யலாம் என்பது குறித்துக் கலந்துரையாடுக.

செயல் திட்டம்

பெண் கல்வியின் சிறப்புகளைக் கூறும் பாடல்களைத் திரட்டுங்கள். ஏற்ற படங்களை வரைந்தோ ஒட்டியோ படத்தொகுப்பு அமைக்க.

சிந்திக்கலாமா?

வீட்டு வேலைகளில் வீணா, அவள் தம்பி, அப்பா மூவரும் பங்கேற்பார்கள்

இரவி இதைக் கிண்டல் செய்கிறான்



வீட்டு வேலைகளை எவ்வாறு பகிர்ந்து செய்யலாம்? உன் கருத்துகளைக் கூறு.

பாதிப் படம் இங்கே மீதிப் படம் எங்கே வரைந்து மகிழ்க.

உனது விருப்பம் போல் செய்து மகிழ்க.



உணவுத் திருவிழா

பாரதிதாசன் குடியிருப்பு அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது அக்குடியிருப்பில் ஆண்டு தோறும் மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்கும் வகையில் விழாவைத் தேர்வு செய்வர். இந்த ஆண்டு 'உணவுத் திருவிழா' கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கலா தனது நண்பர்களான இரமணி, முகிலன் ஆகியோரைத் தங்களின் இல்லத்திற்கு அழைத்திருந்தாள். விழா நாளன்று குறித்த நேரத்திற்கு முன்னரே அவர்கள் இருவரும் வந்து விட்டனர். கலா அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று அழைத்துச் சென்றாள்.

கலா : இரமணி, முகிலன் ... நீங்கள் இரண்டு பேரும் வந்ததில் மிக்க மகிழ்ச்சி. வாருங்கள், கண்காட்சி அரங்குகளைக் காணலாம்.

இரமணி: எங்களுக்கும் மகிழ்ச்சி, கலா. உணவுப் பண்டங்களில் இத்தனை வகைகளா? பார்க்கப் பார்க்க வியப்பாக இருக்கிறதே....!

கலா: எத்தனை விதமான உணவு வகைகள் என்பதை விட, இந்த உணவு வகைகள் எதற்காக நாம் உண்ண வேண்டும் என்பதுதான் முக்கியம் – ஒவ்வொரு வகை உணவு பற்றியும், அதை உண்பதால் நமக்குக் கிடைக்கும் சத்துகள், மருத்துவப் பயன்கள் பற்றியும் விளக்கமாகச் சொல்லுகிறார்கள். விளக்கப் பலகைகளும் வைத்திருக்கிறார்கள்.

இரமணி: தேனும் தினைமாவும் இதுவரை கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர சாப்பிட்டது இல்லை. தினை, வரகு, சாமை, குதிரைவாலி . இந்த அரிசி வகைகளில் நார்ச்சத்தும், உயிர்ச்சத்தும், தாதுஉப்புகளும் அதிகமாம். இவைதாம் நம் பாரம்பரிய உணவாம்.

கிலன்: கோதுமை மாவு – அரிசி மாவு தோசைகள்தாம் இதுவரை சாப்பிட்டிருக்கிறோம். இங்கேயோ, கம்புத் தோசை, கேழ்வரகுத் தோசை, சோளத் தோசை, முடக்கற்றான் தோசை என்று பலவிதமான தோசைகள். பார்த்ததுமே சுவைக்கத் தூண்டுகின்றனவே! கம்புத்தோசை மட்டுமல்ல கம்பங்கூழ், களி, கம்பு மாவு உருண்டை போன்ற பல வகை உணவுகள் வைக்கப்பட்டுள்ளனவே. கம்பு நார்ச்சத்தும் மாவுச்சத்தும் மிகுந்ததாம்.

கம்பு

கலா: ஆம், முகிலன். சுவைக்க மட்டுமின்றி சீரான உடல் நலத்திற்கும் அவை அவசியம், நாம் இப்போதெல்லாம் வீட்டில் உண்பதையே மறந்து விட்ட உணவு வகைகள் இவை.

இரமணி: சோள மாவில் மட்டும் எத்தனை உணவு வகைகள், பாரேன்! சோளச்சோறு, சோளமாவு உப்புமா, சோளப்பிட்டு எல்லாம் சுடச்சுடத் தருகிறார்கள். சோளத்தில் உயிர்ச்சத்து 'ஏ' அதிகமாம். சோளம் புரதச்சத்து மிகுந்து, உடல் வளர்ச்சிக்கான ஆற்றலைத் தருகிறதாம்.

சோளம்

கேழ்வரகு

முகிலன் : கேழ்வரகுப் பலகாரங்களின் பெயர்களைக் கேட்டதுமே ஆசையாக இருக்கிறது. கேழ்வரகுக் கூழ், களி, கஞ்சி, அடை, வடை, அதிரசம், பணியாரம் – எல்லாம் சுவையும் பயனும் மிக்கவை. உடலுக்குத் தேவையான கால்சியம் சத்து மிக்க உணவு கேழ்வரகு என்கிறார்கள்.

கலா: ஆவி மூலம் வேக வைக்கப்படும் உணவுகளில் பாருங்கள். எத்தனை வண்ணங்கள், எத்தனை வடிவங்கள்? சிவப்பரிசிப் பிட்டு, கொழுக்கட்டை, இடியாப்பம், வெண் பிட்டு, வேக வைத்த சீனிக் கிழங்கு, பனங் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு இவையெல்லாம் புரதச்சத்து மிக்கவையாம்; நோய் எதிர்ப்புச்சத்துக்கு உதவுகின்றனவாம்.

கேழ்வரகுக் கூழ்

முகிலன்: பக்கத்து அரங்கிலே பாருங்கள். சுண்டல் மணம் சுண்டி இழுக்கிறதே! புரதச் சத்து மிகுந்த, உடல் வளர்ச்சிக்கு உதவுகிற முளைக் கட்டிய பாசிப்பயறு சுண்டல், நவ தானிய சுண்டல், கொண்டைக் கடலை, தட்டைப்பயறு, மொச்சை என பயறு வகைகளில் பக்குவமான பண்டங்கள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வாருங்கள், ஒவ்வொரு கை அள்ளி உண்ணுவோம்.

சுண்டல்

கீரை

கலா: இதோ– கீரை வகைகள் பிரிவு. கீரை வகையும், கீரை தோசையும் மணக்கின்றன. கீரைகளில் இரும்புச் சத்தும், தாது உப்புகளும் மிகுதியாக உள்ளன. தெளிவான கண்பார்வைக்கு உதவுகின்றன. இரத்தத்தில் சிவப்பணுக்கள் அதிகரிக்க உதவுகின்றன.

இரமணி: இதோ பார் முகிலா! உன்னை மாதிரி உடம்பு இளைத்தவர்களுக்கு 'எள்' ஏற்ற உணவு என்று போட்டிருக்கிறார்கள், எள் உணவு கொழுப்புச் சத்துத் தரவல்லது; குடற்புண்களை ஆற்றவும் கூடியதாம். எள்ளுருண்டை, எள்ளுப்பணியாரம், எள்ளுமாவு, எள்ளுப்பொடி என வகைவகையான உணவுகள் இருக்கின்றனவே.

எள்ளுருண்டை

முகிலன்: கலா... இந்த உணவுத்திருவிழா அரங்கில் சுற்றிச் சுற்றிக் கால்கள் ஓய்ந்து விட்டனவே ... கொஞ்சம் சூடாக எதையாவது குடித்தால் நன்றாக இருக்குமே...

கலா: இதோ இந்த அரங்கிற்குப் போகலாம், வா! இயற்கையான, நாம் மறந்தே போய் விட்ட பானங்கள் இருக்கின்றன. சூடான சுக்குநீர், குளிர்ந்த பதநீர், நினைவாற்றல் தரும் வல்லாரைச் சாறு , இதமான கேழ்வரகுக் கஞ்சி, குளிர்ச்சி தரும் பனங்கற்கண்டுச் சாறு, காமாலை நோய் தீர்க்கும் கீழாநெல்லி, அருகம் புல் சாறு, இளநீர் இவற்றுள் என்ன வேண்டுமோ குடியுங்கள்....

முகிலன்: அருமையான கேழ்வரகுக் கஞ்சி! சூடான சுவையான சுக்குக் காப்பி....! இந்த அற்புதமான உணவுத் திருவிழாவிற்கு எங்களை அழைத்ததற்கு மிகவும் நன்றி, கலா.

அருகம் புல் சாறு

கலா: நீங்கள் இரண்டு பேரும் இங்கே வந்ததில் எனக்கும் மிகவும் மகிழ்ச்சி, நன்றி. இனிமேல் இந்த மாதிரி இயற்கையான, சத்தான உணவு வகைகளையே உண்ணப் பழகுவோம்! உடல் நலம் காப்போம்!

பயிற்சிகள்

I. அ. அகர முதலியைப் பார்த்து பொருள் எழுதுக.

அரங்கு –

முடக்கத்தான் –

ஆ. பிரித்து எழுதுக.

1. விழிப்புணர்வு = _____
2. உணவுத்திருவிழா = _____
3. குடற்புண் = _____
4. சிவப்பணுக்கள் = _____
5. எள்ளுருண்டை = _____.

இ. விடை எழுதுக.

1. கீரை உண்பதால் கிடைக்கும் பயன்கள் யாவை?
2. ஆவியில் வேக வைக்கப்படும் உணவு வகைகள் சிலவற்றை எழுதுக.
3. உன் ஊரில் விளையும் சத்தான உணவுப் பொருள்கள் எவை?

இணைந்து செய்வோம்

அ. குறிப்புகளைப் பயன்படுத்தித் தன் வரலாறு எழுதுக.

என் பெயர் இட்டலி. என்னைத் கண்டுபிடித்த நாடு இந்தியா. அரிசி மற்றும் உளுந்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகிறேன். என்னை ஆவியில் வேகவைத்துத் தயாரிப்பதால் உடலுக்கு நல்லது செய்வேன். கி.மு. 700 லிருந்து உணவுப் பொருளாகப் பயன்பாட்டில் உள்ளேன்.

எள்ளுருண்டை: கண்டு பிடித்த நாடு சீனா.

தேவையான பொருள் எள், வெல்லம்.

ஆ. விளம்பரங்கள் உருவாக்கலாமா ?

இ. கருத்து வரைபடத்தை நிறைவு செய்க.



குழுவாகச் செய்வோம்

அ. இணைப்புச் சொல்லை அடிக்கோடிட்டு எடுத்து எழுதுக.

காலை உணவு என்பது மிக அவசியம். ஏனெனில், இரவு உணவுக்குப் பின் தூங்கிவிடுகிறோம். ஏழு, எட்டு மணி நேரம் தூக்கம் அவசியம். ஆகவே ஆழ்ந்து உறங்குகிறோம்; அந்த நேரம் முழுவதும் உணவு ஏதும் உண்பது இல்லை. எனவே, காலை உணவு முக்கியம். ஆனால் நம்மில் பலரும் காலை உணவை உண்பதில்லை. அதனால் தவறாமல் காலை உணவு உட்கொள்வது தேவையானது.

ஆ. வகுப்பறையில் பேசுக.

மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரிக்க. ஒவ்வொரு குழுவிலுள்ளவர்களையும் ஒரு வாரத்தில் தங்கள் வீட்டில் செய்த உணவுகளைப் பட்டியலிடச் செய்க. பட்டியலில் இடம் பெற்ற சத்தான உணவுகளைத் தனியே எடுத்து எழுதி, வகுப்பறையில் படித்துக் காட்டச் சொல்க.

இ. தொடர் உருவாக்குக.

குழந்தைகளை வட்டமாக உட்காரச் செய்யவும். ஒரு குழந்தை வினைச்சொல்லைக் கொண்டு முடியும் தொடரைக் கூறச் செய்க. அடுத்த குழந்தை அச்சொல்லை முதலாகக் கொண்டு தொடரை உருவாக்கச் செய்க. இவ்வாறு தொடர்ந்து விளையாடி மகிழ்க.

(எ.கா) பூங்குழலி தோட்டத்திற்குச் சென்றாள்.
சென்று மல்லிகைப்பூப் பறித்தாள்.
பறித்த .....

அறிந்துகொள்வோம்

அ. உயிரினத்தில் ஓர் எழுத்து ஒரு மொழி

ஆ – பசு	ஏ – அம்பு
ஈ – தேனீ	ஐ – தலைவன்
ஊ – தசை	ஒ – மகிழ்ச்சி

ஆ. தொகைச் சொற்களை விரித்தறிவோம்.

முக்கனி	– மா, பலா, வாழை
இருதிணை	– உயர்திணை, அஃறிணை
முத்தமிழ்	– இயல், இசை, நாடகம்
நாற்றிசை	– கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
ஐந்திலக்கணம்	– எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
அறுசுவை	– இனிப்பு, துவர்ப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு

முளைகட்டிய தானியக் கலவை செய்துபார்

தேவையான பொருள்கள்: பச்சைப் பயறு, துருவிய தேங்காய், நாட்டுச்சர்க்கரை.

செய்முறை: பச்சைப் பயறைக் காலையில் தண்ணீரில் ஊற வைக்கவும். மாலை அதை ஒரு துணியில் கட்டித் தொங்கவிடவும். மறுநாள் முளை விட்டிருக்கும். அதனை ஒரு பாத்திரத்தில் கொட்டி அதனுடன் தேங்காய்த்துருவல், நாட்டுச் சர்க்கரை சேர்த்துக்கிளறவும். சுவையான தானியக் கலவை தயார்.

செயல் திட்டம்

கோடைக்காலம் வந்ததுமே தமிழ்நாட்டுக் கிராமங்கள் அனைத்திலும் கூழ் வார்க்கும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. கோடையின் வெம்மையைத் தணிப்பதற்கான ஓர் உணவாக இது பயன்படுகிறது. இதே போல் காலநிலைக்கேற்ற உணவுப் பழக்கங்களை ஊரில் உள்ள பெரியவர்களிடம் நேர்காணல் செய்து தகவல்களைச் சேகரிக்கவும்.

சிந்திக்கலாமா ?

துரித உணவகத்தில் உள்ள உணவுகள்தாம் மிகவும் சுவையானவை. சுவையானதை மட்டுமே உண்பேன் என்கிறாள் கவிதா.

சுவையுடன் உடலுக்குச் சத்தானதை மட்டுமே உண்ணவேண்டும் என்கிறார் கவிதாவின் அம்மா.



நீ உண்ண விரும்பும் உணவு எது ? கலந்துரையாடுக.

ஒற்றுமையே பலம்

ஒருநாள் மாலைப் பொழுது. மலர்விழி விளையாட்டாய்த் தன் ஐந்து விரல்களில் முகங்களை வரைந்தாள். சிறிது நேரத்தில் அவை பேசத் தொடங்கின.

கையிலுள்ள ஐந்து விரல்களுக்குள் 'யார் சிறந்தவர்?' என்ற போட்டி! நானா? நீயா?' என்ற வாதம். அது வாய்ச்சண்டையாக மாறியது. "என் உதவியின்றிச் சின்னஞ்சிறு பொருளைக்கூட உங்களால் தூக்க முடியாது", என்று செருக்குடன் கூறியது கட்டை விரல். 'சும்மா கிட! தற்பெருமை கொள்ளாதே. அவன், அவள், அது, இது எனச் சுட்டிக் காட்டுவது நான் தானே. 'நானே சிறந்தவன்' என்றது சுட்டு விரல்.

"நாம் எல்லாரும் வரிசையாக நிற்போம். உயரமானவர் யார்? எனப் பார்த்துவிடலாம்" என்று 'சவால் விட்டது' நடு விரல். "விலையுயர்ந்த மோதிரம் அணிவிப்பது யாருக்கு? எனக்குத்தான், எனது பெயரே 'மோதிர விரல்'. உங்கள் நால்வரினும் செல்வாக்கு மிக்கவன் நானே! " என்று 'பெருமை பேசியது' மோதிரவிரல். "கைகூப்பி வணக்கம் சொல்லும்போது முதலில் நிற்பவன் நான். எனக்குப்பின்தான், நீங்கள் எல்லாரும். எனவே, 'நானே பெரியவன்' " என்றது சுண்டுவிரல்.

அப்போது 'செல்பேசி' ஒலித்தது. "மலர்விழி.. அதை எடுத்துவா!" என்றார் அம்மா. இதுவரை விவாதம் செய்து கொண்டிருந்த ஐந்து விரல்களும் தங்களை மறந்து ஒன்று சேர்ந்தன. ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன.

அவை என்ன பேசியிருக்கும்?

குழுவாகச் செய்வோம்

கொட்டைகள், கற்கள், மணிகள் போன்ற பொருள்களை கலந்து வைக்கவும். குழந்தைகளைக் குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவினரிடமும் அக்கலவைப் பொருள்களைக் கொடுக்கவும். எந்தக் குழு முதலில் அப்பொருள்களை தனித்தனியாகப் பிரித்து எடுக்கிறதோ அக்குழுவே வெற்றி பெற்ற குழு. ஒவ்வொரு குழுவும் தாங்கள் அப்பொருள்களைப் பிரித்தெடுக்க எந்த முறையைப் பின்பற்றினார்கள் என்பதைக் கூறச்செய்யவும். குழுவாக இணைந்து செயல்பட்ட குழுவே வெற்றியடைந்திருக்கும். அதைக் குறித்து குழந்தைகளுடன் பேசுங்கள்.

கும்மியடி பெண்ணே கும்மியடி

கும்மியடி! தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி! (கும்மியடி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மியடி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி! (கும்மியடி)

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

பாடலைக் குழுவாக இனிய மெட்டமைத்துப் பாடுங்கள்.

ஆசிரியர் குறிப்பு :

பெயர்	–	சுப்பிரமணிய பாரதியார்.
ஊர்	–	எட்டயபுரம்.
பெற்றோர்	–	சின்னசாமி, இலக்குமி அம்மையார்.
சிறப்புப்பெயர்	–	தேசியக்கவி, மகாகவி.
காலம்	–	11.12.1882 முதல் 11.09.1921 வரை.

கும்மி – விளக்கம் :

கும்மிப்பாடல் நாட்டுப் பாடல்களில் ஒருவகை ஆகும். பெண்கள் வட்டமாய் நின்று கைக்கொட்டிப் பாடி ஆடுவது கும்மிப் பாடல். பெண்கள் அணிந்திருக்கும் வளையலின் ஓசையும் கைத்தட்டும் ஓசையும் பாட்டுக்குத் தாளமாக அமைவது கும்மிப் பாடலின் சிறப்பு ஆகும்.

பயிற்சிகள்

அ.அகரமுதலியைப் பார்த்து பொருள் எழுதுக :

ஏடு –

மாய்ந்து –

பாரினில் –

இளைப்பில்லை –

ஆ.பிரித்து எழுதுக.

1. தீமையென்று = _____
2. எண்ணியிருந்தவர் = _____
3. ஆணுக்கிங்கே = _____

இ. விடை எழுதுக.

1. பாரதியார் பற்றிக் குறிப்பு வரைக.
2. கும்மிப்பாடல் உணர்த்தும் கருத்துகள் யாவை ?
3. பாடலில் உங்களுக்குப் பிடித்த வரிகள் எவை ? ஏன் ?

குழுவாகச் செய்வோம்

அ. பாடலை நிறைவு செய்க.

1. கும்மியடி ! நம் பள்ளி முழுதும்
   குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
   பள்ளித் தூய்மையைக் காத்திடுவோம்
   என உறுதி கொண்டு கும்மியடி.....

ஆ. வீட்டில் ஆண், பெண் குழந்தைகளுக்குச் சம உரிமைகள் அளிக்கப்படுகின்றன. ஆம் ! இல்லை ! என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடத்துக.

“அப்பா, பாண்டியன் அதி விரைவு வண்டி புறப்படும் நேரம் இரவு 09.15 மணி என்று சொன்னீர்கள். ஆனால் பலகையில் 21.15 என எழுதி உள்ளதே. ஒன்றுமே புரியவில்லை?” என்று ஆதவன் கேட்டான். அதற்கு அவர் இரயில்வே துறையில் நேரம் 24 மணி அடிப்படையில் தான் கணக்கிடப்படுகிறது. அதனால் தான் இரவு 09.15 என்பதை 21.15 என்று எழுதியுள்ளனர்.

“அப்படியானால் 20.05 மணி என்றால் இரவு 08.05 தானே அப்பா?” எனக்கேட்டான் ஆதவன். “ சரியாகச் சொன்னாய்.” சரி வாருங்கள். நாம் செல்லவேண்டிய தொடர்வண்டியின் கதவுகள் திறக்கப்பட்டுவிட்டன. நாம் ஏறிக்கொள்வோம் என்றார் அப்பா.

தொடர்வண்டி புறப்பட்டது. அதி விரைவாகச் சென்றது. அயர்ந்து தூங்கிய ஆதவன், கண் விழித்துப் பார்த்தான். மதுரை சந்திப்பு எனப் பலகை தெரிந்தது, அனைவரும் இறங்கினர்.

மதுரை சந்திப்பின் வாயிலில் ஒரு பெரிய விளம்பரப்பலகை வைக்கப்பட்டு இருந்தது. அதை ஆதவனும் மற்றவர்களும் பார்த்தனர். அந்த விளம்பரத்தில்.

ஆதவன், “அம்மா, பொருட்காட்சி மிக நன்றாக இருக்கும் போலிருக்கிறதே, அங்குப் போகலாமா?” என்று கேட்டான். அதற்கு அம்மா இப்பொழுது தான் வந்திருக்கிறோம். நாளை அங்குப் போகலாம். இப்பொழுது மாமா வீட்டிற்குச் செல்வோம்” என்று கூறினார்.

பேருந்து எண்	ஊர்	புறப்படும் நேரம்
3	பழங்காநத்தம்	6.30 மு.ப.
4	தெப்பக்குளம்	7.00 மு.ப.
2	புதூர்	7.15 மு.ப.
23	திருப்பாலை	7.30 மு.ப.
75	மேலூர்	7.35 மு.ப.

உரை நடை

இயல் – 6

சித்திரைப் பொருட்காட்சி

அப்பா, அம்மா, தம்பி–தங்கை அனைவருடனும் ஆதவன் எழும்பூர் தொடர்வண்டி நிலையத்திற்கு வந்து சேர்ந்தான். கோடை விடுமுறை தொடங்கி விட்டது. மதுரையில் ஆதவனின் மாமா இருக்கிறார். எனவே அனைவரும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டு வந்துள்ளனர்.

எழும்பூர் தொடர்வண்டி நிலைய வாயிலில் அவர்கள் நுழைந்தனர். ஒரு தொடர்வண்டி புறப்படும் சத்தம் கேட்டது. "அப்பா, தொடர்வண்டி போய்விடப் போகிறது" பரபரப்பாகச் சொன்னான் ஆதவன்.

"இல்லை ஆதவன், நாம் செல்ல வேண்டியது பாண்டியன் அதி விரைவு வண்டி. அது 09.15 மணிக்குத்தான் புறப்படும். அதோ பார்! பயண அறிவிப்புப் பலகை. அதில் தொடர்வண்டியின் பெயர், வண்டி எண், நிற்கும் இடம் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன" என்றார் அப்பா. ஆதவன் ஆர்வத்துடன் அறிவிப்புப் பலகையைப் பார்த்தான்.

வண்டி எண்	வண்டியின்பெயர்	புறப்படும் நேரம்	நடை மேடை
2661	செங்கோட்டை பொதிகை விரைவு வண்டி	20.05	6
2631	நெல்லை அதிவிரைவு வண்டி	20.50	5
2637	மதுரை பாண்டியன் அதிவிரைவு வண்டி	21.15	4
6701	இராமேசுவரம் விரைவு வண்டி	21.40	3

அவர்கள் புதூர் செல்வதற்காகப் பெரியார் பேருந்து நிலையத்தை அடைந்தனர். ஆதவன் அங்கு வைக்கப்பட்டிருந்த பேருந்துக் கால அட்டவணையைச் சுட்டிக் காட்டினான். "அப்பா புதூர் செல்லும் பேருந்து எண்ணும் , புறப்படும் நேரமும் குறிப்பிடப்பட்டுள்ளன. என்று சொன்னான்.

அப்பொழுது புதூர் செல்லும் 2 ஆம் எண் பேருந்து வந்தது. அதில் ஏறி அனைவரும் மாமா வீட்டை அடைந்தனர்.

மறுநாள், ஆதவன் மாமாவுடன் இரு சக்கர வண்டியில் பொருட்காட்சிக்குச் சென்றான். நுழைவுச் சீட்டை மாமா வாங்கினார். இருவரும் உள்ளே சென்றனர். பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்தனர். இராட்டினத்தில் சுற்றினர். நூல் விற்பனை மையம் இருந்தது. பயனுள்ள அறிவியல் நூல்களையும், பொழுதுபோக்குக் கதைப்புத்தகங்களையும் மாமா அவனுக்கு வாங்கித் தந்தார். பந்து, சில பொம்மைகள், கைக்குட்டை ஆகியவற்றை வாங்கினார்.

சிற்றுண்டி உண்ட பின் வீட்டிற்குப் புறப்பட்டனர். ஆதவன் மதுரை நகரின் ஒழுங்கான தெருக்களையும், விளம்பரங்களையும் பார்த்தவாறே வீடு வந்து சேர்ந்தான்.

பயிற்சிகள்

அ. வகுப்பறையில் பேசுக.

1. நியாய விலைக்கடையில் எழுதிவைக்கப்பட்டிருக்கும் அறிவிப்புகளையும் விலைப் பட்டியலையும் படித்து அறிக.
2. பள்ளி ஆண்டு விழா, திருமண விழா அழைப்பிதழ்களைத் திரட்டிப் படித்து வருக.

ஆ. பிரித்து எழுதுக.

1. தொடர்வண்டி = _____
2. வண்டியிலிருந்து = _____
3. பொருட்காட்சி = _____
4. நுழைவுச்சீட்டு = _____
5. எழுதியிருந்தது = _____

இ. சேர்த்து எழுதுக.

1. மகிழ் + உந்து = _____
2. கணக்கு + இடப்படும் = _____
3. பயன் + உள்ள = _____
4. வாங்கி + தந்தார் = _____
5. கை + குட்டை = _____

ஈ. வினாக்களுக்கு விடை எழுதுக .

1. ஆதவன் தொடர் வண்டியில் எங்குச் சென்றான் ?
2. சித்திரைப் பொருட்காட்சி எந்த ஊரில் எப்பொழுது நடைபெற்றது ?

இணைந்து செய்வோம்

அ .செய்தித்தாள் படித்துக் கருத்து வரைபடம் அமைக்க :

கின்னசு சாதனை

சென்னை, ஜூன்–10 நேரு உள்விளையாட்டு அரங்கில் உலகச் சுகாதார அமைப்பு சார்பில் ஒரே நேரத்தில் 15,115 மாணவர்கள் கை கழுவிய நிகழ்ச்சி 'கின்னசு சாதனைப்' புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

இது குறித்துத் தமிழக நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் வெளியிட்ட அறிக்கை.

கைகள் சுத்தமாக இல்லாமல் இருந்தால் குழந்தைகளுக்கு வயிற்று நோய் ஏற்படுகிறது. உணவு உண்பதற்கு முன்பும், கழிவறையில் இருந்து வந்த பின்பும் சோப்புப்போட்டுக் கை கழுவுவது மிக அவசியம். இதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களை 25 சதவீதம் தடுக்க முடியும். இதைக் கருத்தில் கொண்டு உலகச் சுகாதார நிறுவனம் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 15ஆம் தேதியை 'உலக கை கழுவும் நாள்' என்று அறிவித்துள்ளது. உலகச் சுகாதார நிறுவனம் சார்பில் நடைபெற்ற கை கழுவும் நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 15,115 மாணவ, மாணவிகள் ஒரே நேரத்தில் கைகளைக் கழுவிச் சாதனை படைத்தனர்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆ. தலைப்புச் செய்திகளை விரிவான செய்திகளாக மாற்றி செய்திவாசிப்பாளர் போல் வாசியுங்கள்.

கன மழை....
நிலநடுக்கத்தால்
விவசாயிகள்மகிழ்ச்சி
கட்டிடங்கள் குலுங்கின.....
கபடி
இந்தியா அபார வெற்றி...

இ. உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி ஒன்றிற்கு அழைப்பிதழ் உருவாக்குக.

இன்றைய செய்தியாளர்

ஒரு நாள் முழுவதும் பள்ளி/சுற்றுப்புறத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உற்றுநோக்குக. அவற்றில் உன்னைக் கவர்ந்த/ பாதித்த நிகழ்வுகளைச் செய்தியாக மாற்றுக. அடுத்த நாள் காலைக் கூட்டத்தில் படித்துக்காட்டுக.

பள்ளியின் கால அட்டவணையை இரயில்வே நேரத்தில் மாற்றி அமைத்து எழுதுக.

காடையின் நுண்ணறிவு

ஓர் அறுவடைக் காலம். நெல் வயலில் பயிர்கள் நன்கு வளர்ந்து கதிர்கள் முற்றியிருந்தன. அந்த வயலுக்குள் காடைப்பறவை ஒன்று கூடுகட்டித் தன் குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது. குஞ்சுகளுக்கு இன்னும் முழுமையாக இறகுகள் வளரவில்லை.

ஒருநாள் தாய்ப்பறவை இரை தேடுவதற்காக வெளியில் சென்றிருந்தது. அப்போது வயலின் சொந்தக்காரர் வயலைச் சுற்றிப் பார்த்தார். 'கதிர்கள் நன்றாக முற்றிவிட்டன. நாளையே அண்டை அயலார் உதவியுடன் அறுவடை செய்ய வேண்டும்' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டே சென்றார்.

திகிலடைந்த குஞ்சுகள், தாய்ப்பறவை கூட்டுக்குத் திரும்பியவுடன் நடந்ததைக் கூறின. தாய்ப்பறவை, 'என் செல்வங்களே கவலைப்படாதீர்கள்! அண்டை அயலார் ஒவ்வொருவரும் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருப்பர். எனவே, நாளை வயலுக்குச் சொந்தக்காரர் அறுவடை செய்ய வரமாட்டார்; பொறுத்திருப்போம்' என்று கூறியது.

மறுநாள் காலை வயலுக்கு வந்த வயலின் சொந்தக்காரர், மிகவும் கவலையுடன், 'நாள்கள் தள்ளிப் போனால் நெல் வீணாகி விடுமே! சுற்றத்தார் உதவி கொண்டாவது நாளையே அறுவடை செய்ய வேண்டும்' என்று கூறிக்கொண்டே சென்றார்.

மாலை கூட்டிற்குத் திரும்பிய தாய்ப்பறவையிடம் குஞ்சுகள் மீண்டும் முறையிட்டன. அப்போதும் தாய்ப்பறவை, "என் கண்மணிகளே! நாளையும் அவர் அறுவடை செய்யமாட்டார். ஏனெனில், சுற்றத்தாருக்கும் நெல்வயல்கள் இருக்கும். அவர்கள் வருவது சந்தேகம் தான். எனவே, பொறுத்திருப்போம்" என்று கூறியது.

மறுநாள் வயலைப் பார்க்க வந்த வயலின் சொந்தக்காரர், 'இனி யாரையும் நம்பிப் பயனில்லை. நாளையே குடும்பத்தினருடன் வந்து அறுவடை செய்துவிட வேண்டியதுதான்' என்று கூறிக்கொண்டே சென்றார். மாலையில் கூட்டுக்குத் திரும்பிய தாய்ப்பறவை நடந்ததை அறிந்தவுடன், 'குழந்தைகளே, நாம் உடனே பாதுகாப்பான வேறு இடத்திற்குச் செல்ல வேண்டும்' என்று குஞ்சுகளைப் பாதுகாப்பான இடத்திற்குக் கூட்டிச் சென்றது.

காடையின் முடிவு பற்றிக் குழுவில் கலந்துரையாடுங்கள்; கருத்துகளை வெளியிடுங்கள்.

இணைந்து செய்வோம்

வேறுபாடுகளைக் கண்டுபிடி.





நூறு வயது தருவன!

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ ?

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

கூழை யேநீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா!
ஏழை யேநீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா!

தூய காற்றும் நன்னீரும்
சுண்டப் பசித்த பின்உணவும்
நோயை ஓட்டி விடுமப்பா
நூறு வயதும் தருமப்பா!

– கவிமணி தேசிக விநாயகம்

நான் செய்வேன்

பயிற்சி

அ) அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருள் அறிக.

1. நித்தம் –
2. பேணுதல் –
3. ஆயுள் –
4. உலாவி –
5. சுண்டப் பசித்த –
6. காலன் –

ஆ) பிரித்து எழுதுக.

1. இடமெங்கும் – _____
2. நன்னீர் – _____
3. உறங்கப்பா – _____
4. நீயதனை – _____
5. சுத்தமுள்ள – _____

இ) விடை எழுதுக.

1. எப்பொழுது உண்ணல் வேண்டும்?
2. எவரைக் கண்டால் எமன் ஓடிப் போவான்?

இணைந்து செய்வோம்

வரைபடத்தை நிரப்புக



நான் பேசுவேன்

அ) வகுப்பறையில் பேசுக.

கீழ்க்காணும் படங்களில், முறையானவை எவை? தவறானவை எவை? என்பன குறித்துப் பேசுக.





விளையாடலாம் வாங்க!

1. படம்	2. விதை	3. பாடு	4. முறம்	5. கல்
6. உணர்வு	7. கோட்டை	8. புயல்	9. அரும்பு	10. மந்தி

துண்டுத்தாள்களில், மேலே கொடுக்கப்பட்ட சொற்களை எழுதிச் சுருட்டிப் போடுக.

ஒவ்வொரு குழந்தையையும், ஒரு தாளினை எடுத்து, உரக்கப் படிக்கச் செய்க.

அச்சொல்லில், ஓர் எழுத்தைச் சேர்த்தோ, நீக்கியோ புதிய சொல்லை உருவாக்கிக் கூறச் செய்க.

எடுத்துக்காட்டு

1. மகள் – மக்கள் 2. வளையல் – வயல்

களப்பயணம் செல்வோம்

திருவள்ளூர் மாவட்டம், திருவூர், அரசுத் தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் மாணவர்கள், தம் ஆசிரியருடன், வேளாண்மை அறிவியல் நிலையத்திற்குக் களப்பயணம் சென்றனர்.

நிலையத்தின் முன்புறம் அமைந்துள்ள அலங்காரச் செடிகள், பசுமையான புல்வெளி, அழகிய வண்ணப்பூக்கள் ஆகியவை மாணவர்களை வரவேற்றன. தென்னை மரங்களின் ஓலைகள் காற்றில் சலசலத்தன. மாமரக் கிளையிலிருந்த குயில்கள் 'கூ...கூ...' எனக் கூவிக் கொண்டிருந்தன. பலா மரங்களில், பலாப்பழங்கள் பழுத்துத் தொங்கின. இவற்றையெல்லாம் மாணவர்கள் பார்த்து, மகிழ்ந்துகொண்டே சென்றார்கள்.

அப்போது, நெல் ஆராய்ச்சி நிலைய ஆய்வாளர், மாணவர்களை வரவேற்று, நிலையத்தைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் சென்றார்.

ஆய்வாளர் : மாணவர்களே! நம் மாநிலத்தில், முப்பதுக்கும் மேற்பட்ட வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அம்பாசமுத்திரம், ஆடுதுறை, திருப்பதிசாரம், மதுரை முதலிய இடங்களில் நெல் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இங்கு அதிக விளைச்சல் தரும் புதிய நெல்வகைகளை உருவாக்குதல், பழ மரக்கன்றுகள், காய்கறி விதைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல், வேளாண்மை முறைகள் பற்றிப் பயிற்சி அளித்தல் முதலிய பணிகள் நடைபெறுகின்றன.

முகிலன் : டிகேஎம் 9 , டிகேஎம் 11, டிகேஎம் 12 என எழுதப்பட்ட பலகைகளை வயல்களில் ஆங்காங்கே வைத்துள்ளீர்களே, எதற்காக ?

ஆய்வாளர் : அஃது ஒவ்வொன்றும் ஒவ்வொரு நெல்வகையின் பெயர். பொதுவாக, நெல் விதைகளை நீர்வளம் நிறைந்த இடங்களில் விதைப்பார்கள். நெற்பயிருக்குத் தண்ணீர் அதிகமாகத் தேவை. ஆனால், இவ்வகைப் பயிர்கள் நீர்வளம் குறைந்த இடங்களிலும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியவை; அதிக விளைச்சலும் தரக்கூடியவை.

எழிலரசி : வறட்சியைத் தாங்கும் என்று சொல்கிறீர்களே! தண்ணீரே தேவையில்லையா ?

ஆய்வாளர் : இல்லை, இல்லை! ஓரளவு வறட்சியைத் தாங்கும். இவ்வாராய்ச்சி நிலையத்தில் புழுதிக்கால், மானாவாரி, இறவை ஆகிய சூழல்களுக்கு ஏற்ற அதிக விளைச்சல் தரும் நெல் வகைகளை, ஆராய்ந்து உருவாக்குகிறோம். இதுவே இந்நிலையத்தின் தலையாய பணி. இதோ, இங்கு விதைக்கப்பட்டுள்ள டிகேஎம் 11, டிகேஎம் 12 என்னும் நெல் வகைகள், வறட்சியைத் தாங்கி வளரக் கூடியவை. மழை பெய்தவுடன் புதிய துளிர் விட்டு நன்கு செழித்து வளரும்; பூச்சிகள் தாக்காது, நோய்எதிர்ப்புத் திறன் கொண்டது.

பாரதி : எங்கள் நிலத்தில் எதுவும் சரியாக விளைவதில்லை. "கிணற்று நீர் சற்று உவர்ப்புடன் உள்ளது" என அப்பா கூறுவார்.

ஆய்வாளர் : அங்கே பாருங்கள்... டிகேஎம் 7 எனப் பெயர் தாங்கிய பலகை. அந்த நெல், உவர் நிலத்திலும் களர் நிலத்திலும் செழிப்பாக வளர்ந்து, நல்ல விளைச்சல் தரும்.

பாரதி : இங்குப் பாசிப்பயறு, துவரை, உளுந்து போன்றவை மிகவும் பசுமையாக வளர்கின்றன. ஆனால், எங்கள் தோட்டத்தில் இவை போன்று வளர்வதில்லையே ஏன் ?

ஆய்வாளர் : அதோ! அந்தத் தொட்டிகளில் இலைதழைகள், மாட்டுச்சாணம், கரும்புச்சக்கை ஆகியவற்றில் மண்புழுக்களை விட்டு மட்கச் செய்து, மண்புழு உரம் தயாரித்து வருகிறோம். இங்குள்ள வயல்களில் தக்கைப் பூண்டு, சணப்பை முதலிய பசுந்தாள் உரங்களும் 'அசோலா' என்னும் நுண்ணுயிர் உரமும் இடப்படுவதனால் பயிர்கள் நன்கு செழித்து வளர்கின்றன.

(அப்போது, மே... மே... என ஆடுகள் கத்துவதனைக் கேட்டனர்)

எழிலரசி : இந்த ஆடுகள் வெள்ளை வெளேரென்று கொழுகொழுவென அழகாக உள்ளனவே!

ஆய்வாளர் : இவை கேரள மாநிலத்தில் உள்ள தலைச்சேரியிலிருந்து வருவிக்கப் பட்ட ஆடுகள் ஆகும். அதிகமாகப் பால் தரக்கூடியவை. இந்த இனத்தை, தமிழ்நாட்டில் பெருக்குவதற்காக பண்ணை அமைத்து இங்கு வளர்க்கிறோம்.

குமுதவல்லி : ஆட்டுக்குட்டி எந்தன் குட்டி
அருமையான சின்னக் குட்டி
ஓட்டம் ஓடி வந்திடுவாய்
உனக்கு முத்தம் தந்திடுவேன் ...

(அனைவரும் கைதட்டினர் ; ஆட்டுக் குட்டிகளைப் பார்த்துவிட்டு,
அங்கிருந்து நகர்ந்தனர்)

பாரி : அஃது என்ன கூடாரம்? 'பசுமைக்குடில்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதே!

ஆய்வாளர் : ஆம். அது வெப்பம் அதிகம் தாக்காதவாறு அமைக்கப்பட்டுள்ள இடம். அதனுள் சென்று பார்ப்போம். (நெகிழிப்பைகளில், சிறு சிறு மரக்கன்றுகளும் அவற்றின் அருகில் இமாம்பசந்து, ருமானி, செந்தூரம், நீலம், மல்கோவா, பெங்களூரா, பங்கனப்பள்ளி என எழுதப்பட்ட அட்டைகளும் இருந்தன) இவையெல்லாம் பலவகைப்பட்ட மாங்கன்றுகள். இவை ஒட்டுவகையைச் சார்ந்தவை; குறுகிய காலத்தில் வளர்ந்து அதிக விளைச்சலைத் தரக்கூடியவை.

பாரதி : அங்குப் பலர் குழுமி இருக்கிறார்களே... ஏதேனும் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறதா ?

முகிலன் : பாரதி... அங்குள்ள பெயர்ப் பலகையைப் பார். 'உழவர் பயிற்சி விடுதி' என எழுதப்பட்டுள்ளது.

ஆய்வாளர் : நன்று. அங்கு, உழவர்களுக்குப் புதிய வேளாண்மைத் தொழில்நுட்பங்கள், புதிய நெல் விதை அறிமுகம், மண்புழு உரம் தயாரித்தல் முதலியவற்றில் பயிற்சிகள் தரப்படுகின்றன.

இதுவரை இந்நிலையத்தின் அனைத்து விவரங்களையும் அறிந்திருப்பீர்கள்; நீங்கள் அனைவரும் களைப்பாக உள்ளீர்கள்; அங்கே தட்டுகளில் பழங்கள் உள்ளன; தின்று இளைப்பாறுங்கள்.

(மாணவர்கள் அனைவரும் மகிழ்வுடன் பழங்களைத் தின்றனர்)

ஒவ்வொரு மாணவருக்கும், வீட்டில் வளர்ப்பதற்குப் பழ மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. மாணவர்கள் ஆய்வாளருக்கு நன்றி கூறி, பள்ளி வந்து சேர்ந்தார்கள்.

நான் செய்வேன்

பயிற்சி

அ) அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருள் அறிக.

1. இறைவை –
2. பசுந்தாள் –
3. மானாவாரி –

ஆ) பிரித்து எழுதுக.

1. கிளையிலிருந்த – _____
2. பிரித்தெடுக்கும் – _____
3. மாங்கன்று – _____
4. பெயர்ப்பலகை – _____

இ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உவர்நிலம் என்பதன் பொருள்

(அ) உப்புத்தன்மை உள்ள நிலம் (ஆ) வளமான நிலம் (இ) பாலை நிலம்

2. கணித்தல் என்பதன் பொருள்

(அ) தொகுத்தல் (ஆ) கணக்கிடுதல் (இ) வரைதல்

3. உழவர்களின் நண்பன்

(அ) வெட்டுக்கிளி (ஆ) மண்புழு (இ) கோழி

4. குடில் என்பதன் பொருள்

(அ) பெரியவீடு (ஆ) குடிசை வீடு (இ) அரண்மனை

ஈ) சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. வரவேற்று = _____
2. கண்டுபிடிப்பு = _____
3. சுவைமிக்க = _____

உ) விடை எழுதுக.

1. நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பணிகள் இரண்டனை எழுதுக.
2. நெல் ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களின் பெயர்களை எழுதுக.
3. நெல்வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.
4. நீ சென்று வந்த ஓர் இடத்தைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

இணைந்து செய்வோம்

அ) தொழிலாளர்களின் பெயர்களை எழுதி, அவர்களைப் பற்றி இரண்டு வரிகள் எழுதுக.

மண்பாண்டம் செய்பவர், தச்சர், நடத்துநர், உழவர், மீனவர், செவிலியர், அஞ்சல்காரர், கொத்தனார்.

ஆ) ஒவ்வொரு சொல்லாக இணைத்துச் சொற்றொடரை நீட்டுக.

(எடுத்துக்காட்டு) பூ.

செவ்வந்திப் பூ.

மஞ்சள் செவ்வந்திப் பூ.

அழகான மஞ்சள் செவ்வந்திப் பூ.

நான் பேசுவேன்

படங்களைப் பார்த்து, ஆசிரியருடன் கலந்துரையாடுக.





குழுவாகச் செய்வோம்

களப்பயணம்

உன் ஊரில் உள்ள வேளாண்மை ஆய்வு மையம் / தொடர்வண்டி நிலையம் முதலிய இடங்களுக்குக் களப்பயணம் செல்க. அங்குப் பார்த்தவை குறித்து ஒரு கட்டுரை வரைக; அல்லது படங்கள், செய்திகளைத் திரட்டித் தொகுப்பேடு ஒன்றனை உருவாக்குக.

துணைப்பாடம்

இயல் – 7

தன்னம்பிக்கைத் தாத்தா

‘வேலங்குடி’ என்னும் ஊரில் போதுமான அளவு மழை பெய்வதில்லை. ஆதலால், குடிநீருக்குத் தட்டுப்பாடு. அவ்வூரிலிருந்து சற்றுத் தொலைவில் நெடிதுயர்ந்த நீண்ட மலைத்தொடர் இருந்தது. அதன் மறுபக்கத்தில், வற்றாத ஆறு ஒன்று ஓடி, வீணாகக் கடலில் கலந்துகொண்டிருந்தது. அந்த ஆறு நம் ஊரின் அருகே ஓடினால் நன்றாக இருக்குமே என மக்கள் விரும்பினர்.

அவ்வூர் மக்கள் ஒன்று கூடினர். ஆற்று நீரைக் கொண்டு வர ஒவ்வொருவரும் ஒரு கருத்தைக் கூறினர்.

கூட்டத்திலிருந்த முதியவர் ஒருவர் “மலையைக் குடைந்து ஆற்றுநீரைக் கொண்டு வரலாம்” என்றார். முதியவரின் பேச்சைக்கேட்ட சிலர் “மலையைக்குடைதல் என்பது முடியாத வேலை” என்றனர். பலர், “முதியவர் இல்லாத ஊருக்கு வழி சொல்லுகிறார்” என ஏளனம் செய்தனர். ஆனால், அம்முதியவர் மட்டும் தமது கருத்தில் உறுதியாக இருந்தார்.

ஒருநாள் காலைப் பொழுதில் உளி, கடப்பாரை, கூடை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு முதியவர் மலையை அடைந்தார். சிற்றுளியால் மலையைக் குடையத் தொடங்கினார்.

இச்செயலைக் கண்டு அனைவரும் திகைத்தனர். "தள்ளாத வயதில் ஏன் இந்த வீண் வேலை? உங்களால் எப்படி இந்த வேலையைச் செய்து முடிக்க முடியும்?" எனக் கேட்டனர்.

அதற்கு அம்முதியவர், "உங்களுக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை. வெளியூர் சென்றுள்ள என் மகன் நாளை வருவான். அவனும் இம்மலையைக் குடையும் வேலையைச் செய்வான். அவனுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் பிறந்து கொண்டேயிருப்பார்கள். இதற்கு முடிவே இல்லை. ஆனால், இம்மலையால் மனிதர் போல வளர முடியாது. ஆகையால், ஒருநாள் மலை முழுவதும் குடையப்பட்டுக் குகை வழியே, ஆறு நமது ஊருக்கு வரும்" என முதியவர் கூறினார். முதியவரின் பேச்சு அங்கிருந்தவர்களின் மனத்தில் நம்பிக்கையைத் தோற்றுவித்தது. அனைவரும் நம்பிக்கையுடன் மலையைக் குடைந்தனர்; ஆற்றுநீர் பெருக்கெடுத்து வந்தது.

இன்று, வேலங்குடி விளைச்சல் மிகுந்த வேளாண்குடியானது. ஊர் மக்களால் முதியவர், 'தன்னம்பிக்கைத் தாத்தா' என அன்புடன் அழைக்கப்பட்டார்.



கலையும் கைவண்ணமும்

சிங்கக்குட்டி வரையலாம்

கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் கீழ்க்கண்ட வரைபடத்தில் பெரிதாக வரைந்து வண்ணமிட்டு மகிழ்க.

செய்யுள்

இயல் – 8

பகைவனுக்கு அருள்வாய்

பகைவனுக் கருள்வாய் – நன்னெஞ்சே!
பகைவனுக் கருள்வாய்!

புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே – நன்னெஞ்சே!
பூமியிற் கண்டோமே
பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் – நன்னெஞ்சே!
பரமன் வாழ்கின்றான்

சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ? – நன்னெஞ்சே!
குப்பையிலே மலர்கொஞ்சுங் குருக்கத்திக்
கொடி வளராதோ? – நன்னெஞ்சே!

உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்
உள்ளம் நிறைவாமோ – நன்னெஞ்சே!
தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனாமோ? – நன்னெஞ்சே!

வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ? – நன்னெஞ்சே!
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவான் என்ற
சாத்திரங் கேளாயோ? – நன்னெஞ்சே!

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

பாடல்பொருள் :

நல்ல மனமே! பகைவன் இடத்திலும் அன்பு கொள்ளல் வேண்டும். எரிச்சல் ஊட்டும் புகை நடுவிலும் பயன் தரும் தீ இருக்கும். சிப்பிக்குள்ளும் நல்முத்து விளையும். குப்பையிலும் அழகான மலர்கள் பூத்துக் குலுங்கும்; குருக்கத்திக் கொடி வளரும். பகைவனுக்குள்ளும் அன்பு கொண்ட இறைவன் வாழ்கிறான்.

சுவைமிக்க நல்ல தேனில் சிறிதளவு நஞ்சு கலந்துவிட்டால், அந்தத் தேன் முழுவதும் நஞ்சாகிவிடும். நிறைவான உள்ளம் இருப்பினும், அதில் வஞ்சக எண்ணம் கொண்டால் அவ்வுள்ளம் உயர்ந்த உள்ளமாக ஆகாது.

நிறைவான வாழ்வு வாழ வேண்டும் என விரும்புகிறபோது, பிறருக்குத் தீங்கு நினைத்தால் அவ்வாழ்வு நிறைவான வாழ்வாக அமையாது. பிறருக்குத் தீங்கு செய்ய நினைத்தால், அத்தீங்கு தனக்கே வந்து சேரும் எனச் சாத்திரங்கள் கூறுவதனைக் கேட்டதில்லையா? ஆகவே நல்ல மனமே, 'நீ பகைவனுக்கும் அருள் செய்தல் வேண்டும்'.

நான் செய்வேன் — பயிற்சி

அ) அகரமுதலியைப் பயன்படுத்தி பொருள் எழுதுக.

1. அருள் – _____
2. குருக்கத்தி – _____
3. தெள்ளிய – _____
4. சாத்திரம் – _____

ஆ) பிரித்து எழுதுக.

1. நன்னெஞ்சே – _____
2. அன்புருவான – _____
3. செய்தியறியாயோ – _____
4. தீயிருப்பதை – _____

இ) சேர்த்து எழுதுக.

1. பூமியில் + கண்டோம் – _____
2. பிறர்க்கு + எண்ண – _____
3. தான் + அழிவான் – _____
4. நிறைவு + இலார் – _____

ஈ) விடை எழுதுக.

1. பிறருக்குத் தீங்கு எண்ணுதல் கூடாது. ஏன்?
2. இப்பாடலின்வழி பாரதியார் கூறும் கருத்துகள் யாவை?

இணைந்து செய்வோம்



பாடலைத் தொடர்ந்து எழுதிப் பாடி மகிழ்க.

நம்பமாட்டேன் நம்பமாட்டேன்
மூடத்தனமாய் நம்பமாட்டேன்

பூனை குறுக்கே போனாலே
பொல்லாதது நடக்குமாம்

(நம்பமாட்டேன்...)

கழுதை முகத்தைப் பார்த்தாலே
நல்லதெல்லாம் நடக்குமாம்

(நம்பமாட்டேன்...)

.....

.....

(நம்பமாட்டேன்...)

.....

.....

(நம்பமாட்டேன்...)

குழுவாகச் செய்வோம்

உரைநடை

இயல் – 8

போரைத் தடுத்த புலவர் ★

முன்னொரு காலத்தில், சோழநாடு இரு பிரிவுகளாக இருந்தது. கருவூர்ப்பகுதியை நலங்கிள்ளியும், உறையூர்ப் பகுதியை நெடுங்கிள்ளியும் ஆட்சி செய்து வந்தனர்; இருவரும் உறவினர்கள்.

இவர்களுக்குள் தீராப்பகை. இதனால், அங்கே அடிக்கடி போர் மூளும்சூழல் ஏற்பட்டது. இருநாட்டு மக்களும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாயினர். ஒற்றர், பகைவர் எனக் குற்றம் சாட்டப்பட்டுப் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். புலவர் இளந்தத்தனாரும் இக்குற்றச்சாட்டுக்கு ஆளாகி உறையூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். இதனைக் கேள்விப்பட்டுப் புலவர் கோவூர்கிழார் சினத்துடன் உறையூர் அரண்மனைக்கு வருகிறார்.

காட்சி – 1

இடம் : உறையூர் அரண்மனையின் அரசவை

நாடக மாந்தர்கள் : கோவூர்கிழார், நெடுங்கிள்ளி

நெடுங்கிள்ளி : சோழ நாட்டின் புலவரே! வருக! வருக! உம் வரவு நல்வரவாகுக.

கோவூர்கிழார் : (சினத்துடன்) ஆன்றோரும் சான்றோரும் புகழ்ந்து போற்றும் அறங்காக்கும் உறையூரிலா இந்த அவலம்! அறியாமற் செய்தனையோ? இல்லை அறிந்தே செய்தனையோ? நீ ஒரு காவலன் என்பதனையும் மறந்தனையோ?

நெடுங்கிள்ளி : கோவூர் தந்த புலவர் தலைவ! தாங்கள் என்மீது கொண்ட சினத்திற்குக் காரணம் யாதோ?

கோவூர்கிழார் : உன்னைப் பாடிப் பரிசில் பெற வந்த, எம் ஆருயிர் நண்பர் புலவர் இளந்தத்தனார் எங்கே? அவரை என்ன செய்தாய்?

நெடுங்கிள்ளி : (ஏளனமாக) ஓ! இளந்தத்தனா! பகைவன் நலங்கிள்ளியின் ஒற்றர் அல்லவா! பகை நாட்டு ஒற்றருக்கு என்ன மரியாதை தர வேண்டுமோ, அதனைக் கொடுத்திருக்கிறேன். ஒற்றரைத் தண்டிப்பதில் தவறேதுமில்லையே!

கோவூர்கிழார் : கொற்றவனே! என் செய்தனை! புலவரை ஒற்றர் எனக்கருதிச் சிறையிட்டனையே! இஃது உமது குடிப்பெருமைக்கு ஏற்றதன்று. புலவர்களின் பரிசில் வாழ்க்கையை நீவிர் அறியீரோ? பழமரத்தை நாடிச் செல்லும் பறவைகள் போல, வள்ளல் தன்மை உடையோரை நாளும் சென்றடைந்து, பாடிப் பரிசில் பெறும் வாழ்க்கையல்லவா புலவர்களது வாழ்க்கை. புலவர்கள் தாம் பெற்ற பரிசில் பொருள்களைத் தாம் மட்டும் துய்க்காது, உற்றார், உறவினர் மட்டுமல்லாது வறியோர்க்கும் எளியோர்க்கும் வழங்கி மகிழ்வர்.

நாடுகளுக்கு இடையே ஒற்றுமை ஏற்பட வழி வகுப்பர்; நாட்டில் காணப்படும் குறைகளை அரசர்களுக்கு எடுத்துச் சொல்வர்; அரசனிடம் காணப்படும் குறைகளைச் சுட்டிக்காட்டித் திருத்துவர். இவற்றை நீ அறியாயோ? புலவர்கள் எந்நாட்டவர்க்கும் சொந்தமானவர்கள். அறிவுரை கூறுதலும் அறம் காத்தலும் புலவர்களின் தொழில் என்பதனையும் மறந்தனையோ! இத்தன்மை வாய்ந்த புலவர் இளந்தத்தனார், 'ஒற்றரா? பகைவரா?' சிந்தித்துப்பார்.

நெடுங்கிள்ளி : இளந்தத்தனார் புலவரா? அந்தோ! என் அறியாமையால் பெரும் பிழை செய்து விட்டேன்; மன்னிக்க வேண்டும். இப்பொழுதே இளந்தத்தனாரை விடுவிக்கிறேன்.

(காவலர்கள் இளந்தத்தனாரை விடுதலை செய்து அழைத்து வருதல்)

நெடுங்கிள்ளி : அறிவிற் சிறந்த புலவரே! வாயிற் காவலர் கூற்றை 'மெய்' என்று நம்பி, ஆராய்ந்து பார்க்காமல் செய்த தவறிது. தக்க நேரத்தில் கோவூரார் அறிவுறுத்தினார்; பிழை உணர்ந்தேன். பொறுத்தருள்க!

இளந்தத்தனார் : மன்னர் பெருமானே! தங்கள் நிலை அறிந்தேன். உறையூர் வேந்தன் புலவர்க்கு அநீதி இழைத்தான் என்னும் பழிச்சொல் நீங்கியது.

நெடுங்கிள்ளி : புலவர் பெருமக்களே! இன்னாத செய்த என்னையும், வாழ்த்தும் உங்களை என்றும் மறவேன். சான்றோர், என்றும் சான்றாண்மை உடையவர் என்பதனை உங்களால் அறிந்தேன். இதோ... இந்தப் பொன்னும் பொருளும் உம்மைச் சார்ந்ததே! பெற்றுக்கொள்வீர். நீவிர் இருவரும் சில காலம் எம் விருந்தினராய்த் தங்கியிருந்து எம்மைப் பெருமைப்படுத்திட வேண்டும்.

(வேந்தனின் வேண்டுகோளை ஏற்று, விருந்தினராய்ச் சிலகாலம் அரண்மனையில் தங்கியிருந்தனர்; தாம்பெற்ற பரிசில் பொருள்களோடு தத்தம் இல்லம் திரும்பினர்)

காட்சி – 2

இடம் : மன்னன் நெடுங்கிள்ளி அரசவை

நாடக மாந்தர்கள் : மன்னன் நெடுங்கிள்ளி, ஒற்றர் தலைவன், தலைமை அமைச்சர், படைத்தளபதி.

(மன்னன் நெடுங்கிள்ளி அரசவையில் அமைச்சர் முதலானவர்களுடன் இருக்கிறார். அப்போது...)

ஒற்றர் தலைவன் : (ஓடோடி வந்து ...) மன்னாதி மன்னா! அவசரச் செய்தி! கருவூரின் படைகள் நம் உறையூரை முற்றுகையிட விரைந்து வருகின்றன.

நெடுங்கிள்ளி : ஓ! நலங்கிள்ளி படையெடுத்து வருகிறானா? வரட்டும். போரில் முதுகிட்டு ஓடச் செய்கிறேன். அமைச்சரே! ஒலிக்கட்டும் போர் முரசு! நால்வகைப் படைகளும் போர்க்களம் நோக்கிப் புறப்படட்டும்.

அமைச்சர் : பேரரசே! போர்க்களம் நமக்குப் புதிதன்று! நமது படைவீரர்கள் வலிய நெஞ்சுரம் மிக்கவர்கள்.

படைத்தளபதி : வாளுக்கும் வேலுக்கும் அஞ்சாத நம் படை வீரர்கள் எதிரிகளை எளிதில் வெற்றி கொள்வர். வெற்றி நமதே!

(நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் போர் புரியப் போவதை அறிந்த கோவூர்கிழார் மிகுந்த வருத்தம் அடைந்தார். எவ்வாறேனும் போரை நிறுத்த வேண்டும் என உறுதிகொண்டார். நெடுங்கிள்ளியின் போர்ப் பாசறையை நோக்கிச் சென்றார்)

காட்சி – 3

இடம் : நெடுங்கிள்ளியின் போர்ப் பாசறை

நாடக மாந்தர்கள் : கோவூர்கிழார், நெடுங்கிள்ளி

நெடுங்கிள்ளி : அறிவுசால் புலவரே! போர் முனையில் தங்களின் வருகை வியப்பளிக்கிறது!

கோவூர்கிழார் : இதிலென்ன வியப்பு? உங்கள் இருவரின் பகையைக் கண்டுதான் உலகமே வியக்கிறதே! சோழநாடு பொன்விளையும் பூமி அல்லவா? உட்பூசலால் உங்கள் நாட்டினைப் பகைவர் கவரும் நிலை உள்ளது என்பதனைத் தாங்கள் அறிவீரா?

நெடுங்கிள்ளி : இஃது என்ன புதுக்கதை!

கோவூர்கிழார் : கதையன்று! உண்மை! பெருவலி படைத்த பெருந்தகையீரே! உங்கள் நால்வகைப் படைகளின் வீரத்தை நானிலமே அறியும். ஆனாலும் இப்போரினால் துயரப்படப்போவது யார்? உங்களுக்குள் பகை வேண்டா. பகையால் நாடும் நாட்டு மக்களும் அடையும் துயர் சொல்லில் அடங்காது. அயலவர் படையெடுத்தால் உங்கள் நிலை என்ன? சிந்தீப்பீர். வேற்றுமையை வேரறுத்து, ஒற்றுமைக்கு உரமளிப்பீர். ஒற்றுமையால் உங்கள் இருவரின் வலிமை கூடுமன்றோ! போரைத் தவிர்த்திடுக. நலங்கிள்ளியும் உணர்வான், அவனிடம் நானே நேரில் செல்கிறேன்.

நெடுங்கிள்ளி : பண்புடைச் சான்றீர்! நீவிர் கூறுவது முற்றிலும் உண்மை. மனம் வருந்துகிறேன். இதனை நலங்கிள்ளியும் உணர வேண்டுமே!

கோவூர்கிழார் : உண்மை நிலையை எடுத்துரைக்கிறேன்; அதுவரை பொறுத்திரு.

காட்சி – 4

இடம் : நலங்கிள்ளியின் போர்ப்பாசறை

நாடக மாந்தர்கள் : நலங்கிள்ளி, கோவூர்கிழார், நெடுங்கிள்ளி, படைவீரர்கள்.

(கோவூர்கிழார் வருவதனைப்பார்த்து....)

நலங்கிள்ளி : சோழர் குலப் புலவரே! பொய்யா நாவின் புலமைச் சான்றீரே! வருக, வருக! தங்களின் அறிவுரையை மதித்து, நெடுங்கிள்ளி இளந்தத்தனாரை விடுவித்தான் என அறிந்தேன். சோழர்குடிக்கு ஏற்படவிருந்த பெரும்பழி நீங்கியது.





கோவூர்கிழார்: நலங்கிள்ளி! அதனைவிடப் பெரும்பழி உன்னால் சோழர்குடிக்கு வரப்போகிறதோ என அஞ்சுகிறேன். போர்க்களத்தில் எவர் தோற்றாலும் 'சோழன் தோற்றான்!' என்றுதான் கூறுவார்கள். இந்தப் பழியானது சோழர் குலத்தைத்தானே சாரும். உங்களுக்குள் இப்பகை தேவையா?

நலங்கிள்ளி : புலமைச் செல்வரே! உங்கள் கூற்றில் உண்மை இருக்கிறது. இதனை நெடுங்கிள்ளியும் உணர்வானா?

கோவூர்கிழார்: உன் இளவல் நெடுங்கிள்ளி தவற்றை உணர்ந்தான். இதுநாள்வரை இருந்துவந்த பகைக்கு வருந்துகிறான். உன் நட்பை விரும்புகிறான். உன்னைப் பார்க்கத் துடிக்கிறான். (சற்றுத் தொலைவில் நெடுங்கிள்ளி வருவதனைப் பார்த்தல்...) அதோ வருகிறான் நெடுங்கிள்ளி.

நலங்கிள்ளி : (கண்ணீர் மல்க) தம்பி...!

(நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் கண்ணீர் மல்க ஆரத் தழுவிக்கொள்கின்றனர்.)

நெடுங்கிள்ளி: என் முன்னவ! என்னைப் பொறுத்தருளல் வேண்டும். அறியாமையால் பெரும்பகை வளர்த்தேன். கோவூர்கிழாரின் அறிவுரையால் அறிவுத் தெளிவு பெற்றேன். இனி, நமக்குள் எந்நாளும் போரில்லை; பகையில்லை. இரு நாடும் ஒரு நாடு ஆகட்டும். ஆட்சிப் பொறுப்பை முன்னவன் நீ ஏற்று அரியணையில் அமர வேண்டும்.

நலங்கிள்ளி : இளவலே! காலம் தாழ்த்தியாவது நின் மனம் மாறியது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். நடந்ததை மறப்போம்! நல்லதை நினைப்போம்! ஆட்சிப் பொறுப்பில் நீயும் உறுதுணையாய் இருக்கவேண்டும். தக்க காலத்தில் நம் இருவருக்கும் அறிவுரை வழங்கி ஒற்றுமைப்படுத்திய கோவூர்கிழாரை வாழ்த்துவோம்!

படைவீரர்கள் : கோவூர்கிழார் வாழ்க! போரைத் தடுத்த புலவர் வாழ்க! சோழர் குலம் வாழ்க, வாழ்க!

பயிற்சி

நான் பேசுவேன்

வகுப்பறையில் பேசுக.

இந்நாடகத்தில் உனக்குப்பிடித்த கதை மாந்தர்கள் யார் யார்? ஏன்?

நான் செய்வேன்

அ) அகரமுதலியைப் பயன்படுத்தி பொருள் எழுதுக.

1. மூளும் – _____
2. அவலம் – _____
3. ஒற்றன் – _____
4. முற்றுகை – _____
5. நெஞ்சுரம் – _____
6. கொற்றவன் – _____

ஆ) பிரித்து எழுதுக.

1. அறங்காக்கும் – _____
2. தவறேதும் – _____
3. ஏற்றதன்று – _____
4. எந்நாட்டவர்க்கும் – _____
5. புதிதன்று – _____

இ) சேர்த்து எழுதுக.

1. நான்கு + நிலம் – _____
2. சிறை + இட்டனையே – _____
3. பொறுத்து + அருள்க – _____
4. உள் + பூசல் – _____
5. தவறு + இது – _____

ஈ) விடை எழுதுக.

1. புலவர் இளந்தத்தனார் யாரால், எதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார்?
2. புலவர்களின் வாழ்க்கையைப் பற்றிக் கோவூர்கிழார் கூறியவை யாவை?
3. நெடுங்கிள்ளி இளந்தத்தனாரிடம் கூறியவை யாவை?
4. போரை நிறுத்த கோவூர்கிழார் கூறிய காரணம் என்ன?

குழுவாகச் செய்வோம்

அ) இந்நாடகத்தில் வரும் கதை மாந்தர்களை ஆளுக்கொருவராக ஏற்று, குரல் ஏற்ற இறக்கத்துடன் உரக்கப் படியுங்கள்.

ஆ) இந்நாடகக் கதை மாந்தர்களை ஆளுக்கொருவராக ஏற்று நடியுங்கள்.

இ) கதையைப் படித்துப் பொம்மலாட்டம் நிகழ்த்துங்கள்.

ஓர் ஊரில், ஒரு பூனையும் அதன் குட்டியும் இருந்தன. தாய்ப் பூனை வெளியே சென்றிருந்தது. பூனைக்குட்டிக்குப் பசி எடுத்தது. அம்மாவைக் காணாததும் அழுகை வந்துவிட்டது. 'மியாவ் மியாவ்' எனக் கத்தியவாறே தெருத்தெருவாக அம்மாவைத்தேடிச் சென்றது. அங்கே பறந்து வந்த புறா ஒன்று 'ஏன் அழுகிறாய்?' எனப் பூனைக்குட்டியிடம் கேட்டது. 'என் அம்மாவைக் காணவில்லை; எனக்குப் பசிக்கிறது' என்றது பூனைக்குட்டி. புறா தன்னிடமிருந்த நெல் மணிகளைத் தந்தது. 'நான் இதனைச் சாப்பிடமாட்டேன். எனக்கு வேண்டா' எனக் கூறிய பூனைக்குட்டி அழுதுகொண்டே சென்றது. வழியில் தவளை ஒன்று வந்தது. 'ஏன் அழுகிறாய்?' எனப் பூனைக்குட்டியிடம் கேட்டது. 'என் அம்மாவைக் காணவில்லை; எனக்குப் பசிக்கிறது' என்றது பூனைக்குட்டி. தவளை தன்னிடமிருந்த பூச்சியைக் கொடுத்தது. 'நான் இதனைச் சாப்பிடமாட்டேன். எனக்கு வேண்டா' எனக் கூறிய பூனைக்குட்டி மீண்டும் அழுதுகொண்டே சென்றது. அங்கே ஒரு மாடு நின்றுகொண்டிருந்தது. 'ஏன் அழுகிறாய்?' எனப் பூனைக்குட்டியிடம் கேட்டது. 'என் அம்மாவைக் காணவில்லை; எனக்குப் பசிக்கிறது' என்றது பூனைக்குட்டி. மாடு தன்னிடமிருந்த பாலைத் தந்தது. 'எனக்குப் பால் நிரம்பப் பிடிக்கும்' எனக் கூறிய பூனைக்குட்டி பால் முழுவதையும் ஒரே மூச்சில் குடித்தது. மாட்டுக்கு நன்றி கூறிய பூனைக்குட்டி தெம்பாக அம்மாவைத் தேடிக் கண்டுபிடித்தது.









- குழந்தைகளை இரு குழுவினராகப் பிரிக்க.
- ஒரு குழுவினரைக் கதைக்கேற்ற உரையாடலை எழுதக்கூறுக. மற்றொரு குழுவினரைக் கதைக்கேற்ற பொம்மைகளை உருவாக்கச் செய்க.
- இரு குழுவினரும் இணைந்து இக்கதையைப் பொம்மலாட்டமாக நிகழ்த்தச் செய்க.

விளையாடலாம் வாங்க

- குழந்தைகளை இரு குழுவினராகப் பிரிக்க.
- கரும்பலகையில் கீழ்க்காணும் அட்டவணையை வரைக.

வ.எண்	யார், எது, எவை, யாவர்	யாரை, எதனை, எவற்றை, எங்கு	முடிந்தசெயல்
1. 2. 3.			

- வரைந்தான், அழைத்தாள், ஓட்டினாள், கட்டியது, சென்றார், ஆடியது, அள்ளினான் முதலிய சொற்களைத் துண்டுத்தாள்களில் எழுதிச் சுருட்டுக.
- துண்டுத்தாள்களைக் குலுக்கிப் போட்டு எதேனும் ஒன்றனை எடுத்து அட்டவணையில் 'முடிந்த செயல்' என்னும் தலைப்புக்குக் கீழ் எழுதவும்.

எடுத்துக்காட்டு:

வ.எண்	யார், எது, எவை, யாவர்	யாரை, எதனை, எவற்றை, எங்கு	முடிந்தசெயல்
1.			ஓட்டினாள்

- முதல் குழுவினரை அச்சொல்லுடன் தொடர்புடைய 'யாரை? எதனை? எவற்றை? எங்கு?' முதலிய கேள்விக்குப் பொருத்தமான சொல்லை அட்டவணையில் எழுதச் செய்க.

எடுத்துக்காட்டு:

வ.எண்	யார், எது, எவை, யாவர்	யாரை, எதனை, எவற்றை, எங்கு	முடிந்தசெயல்
1.		மிதிவண்டி	ஓட்டினாள்

- இரண்டாம் குழுவினரை அச்சொல்லுடன் தொடர்புடைய 'யார்? எது? எவை? யாவர்?' முதலிய கேள்விக்குப் பொருத்தமான சொல்லை அட்டவணையில் எழுதச் செய்க.

எடுத்துக்காட்டு:

வ.எண்	யார், எது, எவை, யாவர்	யாரை, எதனை, எவற்றை, எங்கு	முடிந்தசெயல்
1.	ஓவியா	மிதிவண்டி	ஓட்டினாள்

- முறையான சொற்றொடரை உருவாக்கும் குழுவினரைப் பாராட்டுக.

இவ்வாறு தொடர்ந்து விளையாடச் செய்க.

சொற்றொடர் அமைப்புமுறை அறிவோம்

எழுவாய்

ஒரு தொடரில் யார், எது, எவை, யாவர் என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய். (எழுவாய் எப்போதும் பெயர்ச் சொல்லாகவே இருக்கும்)

எடுத்துக்காட்டு: இளமதி பாடல் பாடினாள்.

செயப்படுபொருள்

ஒரு தொடரில் யாரை, எதனை, எவற்றை, எங்கு என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே செயப்படுபொருள்.

எடுத்துக்காட்டு: இளமதி பாடல் பாடினாள்.

பயனிலை

ஒரு தொடரில் அமைந்துள்ள வினைமுற்றையே பயனிலை என்கிறோம்.

எடுத்துக்காட்டு: இளமதி பாடல் பாடினாள்.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் ஒரு தொடரில் இடம்பெற்றிருக்கும்.

பாடல் பாடினாள் – இத்தொடரில் எழுவாய் இல்லை.

இளமதி பாடினாள் – இத்தொடரில் செயப்படுபொருள் இல்லை.

ஒரு தொடர், எழுவாய் அல்லது செயப்படுபொருள் இல்லாமலும் அமையலாம். ஆனால், பயனிலை தவிராது இடம்பெற்றிருக்கும்.

அ) எழுவாய், செயப்படுபொருள், பயனிலைகளை எடுத்து எழுதுக.

1. மணிமேகலை நடனம் ஆடினாள்.
2. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
3. அழகன் தோட்டத்திற்குச் சென்றான்.
4. பொன்மலர் விண்மீன்களை எண்ணினாள்.

வ.எண்	எழுவாய் யார், எது, எவை, யாவர்	செயப்படுபொருள் யாரை, எதனை, எவற்றை, எங்கு	பயனிலை முடிந்தசெயல்
1.			
2.			
3.			
4.			

இணைந்து செய்வோம்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து அட்டவணையை நிரப்புக.

மேலப்பேடு ஊரில், குழந்தைகள் நாள்விழா நவம்பர் 14 அன்று நடத்தப்பட்டது. சுற்றி உள்ள ஊர்களிலிருந்து பள்ளிக் குழந்தைகள் கலந்துகொண்டனர். அவ்விழாவில் கவிதை, கட்டுரை, பேச்சு, ஓவியம், தனி நடிப்பு முதலிய போட்டிகள் நடத்தப்பட்டன. அப்போட்டியில் மேலப்பேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலிருந்து கவிதா, தேன்மொழி, மேரி, இப்ராகிம், எழிலரசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

- கவிதா, கவிதைப் போட்டியில் முதலிடமும் ஓவியப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றாள். கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகளில் பங்கேற்புச் சான்றிதழ்கள் பெற்றாள்.
- தேன்மொழி, ஓவியப் போட்டியில் முதலிடமும் கவிதைப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றாள். தனி நடிப்பு, கட்டுரைப் போட்டிகளில் பங்கேற்புச் சான்றிதழ்கள் பெற்றாள்.
- எழிலரசன், கட்டுரை போட்டியில் முதலிடமும் தனி நடிப்பு, பேச்சுப் போட்டிகளில் மூன்றாம் இடமும் பெற்றான். கவிதை, ஓவியம் ஆகிய போட்டிகளில் பங்கேற்புச் சான்றிதழ்கள் பெற்றான்.
- மேரி, கட்டுரை, தனி நடிப்பு, பேச்சு ஆகிய போட்டிகளில் இரண்டாம் இடமும் கவிதைப் போட்டியில் மூன்றாம் இடமும் பெற்றாள்.
- இப்ராகிம், பேச்சு, தனி நடிப்பு ஆகிய போட்டிகளில் முதலிடமும் கட்டுரை, கவிதையில் மூன்றாம் இடமும் கட்டுரை, ஓவியம் ஆகிய போட்டிகளில், மூன்றாம் இடமும் பெற்றான். கவிதைப் போட்டியில் பங்கேற்புச் சான்றிதழ் பெற்றான்.

போட்டிகள் / பங்கேற்றோர்	கவிதை	கட்டுரை	பேச்சு	ஓவியம்	தனிநடிப்பு
கவிதா	முதல் இடம்	பங்கேற்பு	பங்கேற்பு	இரண்டாம் இடம்	___
தேன்மொழி					
எழிலரசன்					
மேரி					
இப்ராகிம்					

துணைப்பாடம்

இயல் – 8

ஓர் ஊரில் ஒரு தாத்தாவும் பாட்டியும் இருந்தனர். தாத்தாவின் பெயர் தூயவன். பாட்டியின் பெயர் அமுதம்மாள். அவர்களிடம் ஒரு பழத்தோட்டம் இருந்தது. தொடக்கத்தில் தரிசு நிலமாக இருந்த நிலத்தை இவர்கள் இருவரும் இணைந்து, பாடுபட்டுப் பழத்தோட்டமாக மாற்றினார்கள்.

அவர்களுக்குக் குழந்தையில்லை. பழத்தோட்டத்தை அவர்கள் தங்கள் பிள்ளையாகவே கருதிப் பாதுகாத்து வந்தனர். 'பசுமையான தோட்டம் பச்சப்புள்ளை' என்பார் அமுதம்மாள். இருவரும் தோட்டத்திலேயே எப்போதும் இருப்பர். அத்தோட்டத்தில் கொய்யா, மா, வாழை எனப் பலவகையான பழ மரங்கள் இருந்தன. எந்த மரத்தில் எங்குப் பூக்கள் பூத்திருக்கின்றன ? எங்குப் பிஞ்சுகள் இருக்கின்றன ? காய்கள், பழங்கள் எத்தனை ? எனத் தோட்டம் பற்றிய அனைத்தும் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் அத்துபடி.

வயதாகும்வரை தங்களுக்குக் குழந்தையில்லை என்னும் எண்ணமே ஏற்படவில்லை. வயதாகிவிட்ட நிலையில், தங்களுக்குப் பிறகு இந்தத் தோட்டத்தை யார் பார்த்துக் கொள்வார்கள் ? என்னும் கவலை அவர்களை வாட்டத் தொடங்கியது. தோட்டத்தைத் பார்த்துக் கொள்ளவாவது யாரையாவது தத்து எடுத்துக் கொள்ளலாமா என தத்தாவும் பாட்டியும் எண்ணினர்.

எங்குத் தேடியும் அவர்கள் நினைத்ததுபோல் ஒருவரும் கிடைக்கவில்லை. நண்பர்கள், பலபேரை அறிமுகம் செய்தும், யாரையும் இவர்களுக்குப் பிடிக்கவில்லை. உங்கள் பிள்ளையாக இருக்க அப்படி என்னதான் தகுதி வேண்டும்? என நண்பர்கள் கேட்க ஆரம்பித்தார்கள். ‘ நல்ல உழைப்பாளியாக இருக்க வேண்டும். நானும் என் மனைவியும் பாடுபட்டு உருவாக்கிய தோட்டம் இது. காடுகள் அழிந்துகொண்டிருக்கிற இந்தக் காலத்தில் பழத்தோட்டத்தையே உருவாக்கியது சமூகத்துக்குச் செய்கிற நல்ல செயல் என நாங்கள் நினைக்கிறோம். அதனால், இப்பழத்தோட்டத்தைக் காப்பாற்றுவதுடன் மேலும் பெரியதாக வளர்க்கிற பொறுப்பு எங்கள் பிள்ளைக்கு இருக்கு. அதனால்தான், எச்சரிக்கையுடன் தேடுகிறோம்’ என்றார் தாத்தா.

தாத்தாவும் பாட்டியும் தாங்கள் நினைத்ததுபோல் யாரும் கிடைக்கவில்லையே எனக் கவலையில் ஆழ்ந்தனர். திடீரென ஓர் எண்ணம் அவர்களுக்குத் தோன்றியது. அதன்படி, வண்டி நிறைய கொய்யாப்பழங்களுடன் நம்பிக்கையுடன் கிளம்பினார் தாத்தா; பக்கத்து ஊர்களுக்குச் சென்றார்.

"கொய்யாப்பழம்... கொய்யாப்பழம்...

குப்பைக்குப் பதிலாய்க் கொய்யாப்பழம்"

என அவர் கூவினார்.



அந்த ஊர் மக்களுக்கு ஒரே வியப்பு. "குப்பைக்கு மாற்றாகக் கொய்யாப்பழமா? இப்படி ஒரு கிறுக்கனா!" என எண்ணியவாறே தங்கள் வீடுகளைக் கூட்டிப் பெருக்கி, ஒட்டடை அடித்துக் குப்பைகளை அள்ளி வந்தனர். குப்பையின் எடைக்கு ஈடாகக் கொய்யாப்பழத்தைப் பெற்றுச் சென்றனர். குப்பைகள் குவிந்தன. பழங்கள் குறைந்துகொண்டே சென்றன. அடுத்தடுத்த ஊர்களுக்கு நம்பிக்கையுடன் சென்றார் தாத்தா.

ஓர் ஊரில், இளம்பெண் ஒருத்தி தயங்கித் தயங்கி வண்டியிடம் வந்தாள். கையில் சிறிய பொட்டலம் ஒன்று இருந்தது. "ஐயா! என் வீட்டில் குப்பைகளே இல்லை. நாள்தோறும் தூய்மைப்படுத்திக்கொண்டே இருப்பேன். எவ்வளவு தேடியும் குப்பையே கிடைக்கவில்லை. பக்கத்து வீட்டுக்காரர்களிடம் கேட்டு இந்தக்குப்பையை வாங்கி வந்தேன். இதற்கு மாற்றாக ஒரு பழமாவது தருவீர்களா?"எனக் கேட்டாள்.

தாத்தா, மகிழ்ச்சியில் வண்டியிலிருந்து குதித்தார்; கைகளைத்தட்டி அப்பெண்ணைப் பாராட்டினார்.

"ஒரு பழம் என்ன? கொய்யாப்பழத் தோட்டமே உனக்குத்தான்" என்றார்.

பெற்றோர் இல்லாத அந்த உழைப்பாளிப் பெண்ணைத் தங்கள் பெண்ணாகத் தத்தெடுத்துக்கொண்டனர், தாத்தாவும் பாட்டியும்.

சில காலங்களுக்குப் பின், பழத்தோட்டம் என்னவாகியிருக்கும்?

செயல்திட்டம்

உங்கள் வீடு / பள்ளியில் உள்ள இடங்களுக்கு ஏற்றவகையில் தோட்டம் அமைத்து மகிழ்க.

குழுவாகச் செய்வோம்

விளையாடலாம் வாங்க



- இவ்விளையாட்டில் ஒரு குழந்தை கற்பனைப் புகைப்படக்காரராகச் செயல்படல் வேண்டும்.
- ஒரு குழந்தை ஏதேனும் ஒரு முக, உடல் சைகையைக் காட்ட, அதைப் புகைப்படம் எடுப்பதுபோல் நடித்தல் வேண்டும்.
- உடனே அடுத்தடுத்த சைகையை மாற்றி, புகைப்படங்கள் தொடர்ந்து எடுத்தல் வேண்டும்.
- கொடுக்கப்பட்ட முப்பது வினாடிகளுக்குள் மிகுதியான புகைப்படங்கள் எடுக்கப்பட்ட குழந்தையை வெற்றி பெற்றதாகக் கூறிப் பாராட்டுதல் வேண்டும்.

செய்யுள்

இயல் – 9

கனவு தந்த தீர்ப்பு

(கதைப் பாடல்)

பொன்னன் வீட்டு மாடியிலே
பொந்து ஒன்று இருந்ததுவே
சின்னக் குருவிகள் இரண்டுவந்தே
சீராய் அதிலே தங்கினவே.

அந்தக் குருவிகளுடன் இரண்டு
அன்புக் குருவிக் குஞ்சுகளும்
சிந்தைக் கின்பம் தந்திடவே
சிறப்பாய்த் தோன்றி வாழ்ந்தனவே.

குருவிகள் தமது கூட்டினிலே
கூடிக் கீச்சுக் கீச்செனவே
பெருகும் சத்தம் போடுவது
பிடிக்க வில்லை அவனுக்கே.

தந்தைக் குருவி தாய்க்குருவி
தாம் இல்லாத சமயத்தில்
அந்தப் பொந்தை அச்சிறுவன்
அட்டை ஒன்றால் மூடிவிட்டான்.

குருவிகள் இரண்டும் வந்தனவே
கூக்குர லிட்டுக் கதறினவே
பரிவு ஒன்றும் இல்லாமல்
படுக்கப் போனான் அச்சிறுவன்.

இரவில் பொன்னன் தூங்குகையில்
இரண்டு குருவியும் கனவினிலே
அருவி போல ஓவென்றே
அலறி அலறி அழுதனவே!



உன்னை இப்படி ஓர் அறையில்
ஒருவர் பூட்டி வைத்தால்நீ
என்ன செய்வாய்? என்பதையே
எண்ணிப் பார்க்க வேண்டாவோ?

பொன்னன் கனவில் குருவிகளின்
புலம்பல் கேட்டு மனமுருகி
மின்னல் போல விரைந்தோடி
மூடிய அட்டையை எடுத்தெறிந்தான்.

துன்பம் அடைந்த குருவிகளும்
இன்பம் கொண்டே முன்போலே
பொன்னன் வீட்டில் நலமாகப்
பூரிப் புடனே வாழ்ந்தனவே.

– புலவர் தணிகை

பெயர்	:	தணிகை உலகநாதன்
ஊர்	:	திருவத்திபுரம், வேலூர் மாவட்டம்
பெற்றோர்	:	தா. தணிகாசலம், சுந்தரம் அம்மையார்
இயற்றிய நூல்கள்	:	பூஞ்சோலை, தேன்சுவைக் கதைகள், பாடும் பாப்பா, மாணவர் தமிழ் விருந்து, சிறுவர் நாடக விருந்து இன்னும் பிற நூல்கள்.
காலம்	:	01.10.1921 முதல் 19.11.1993 வரை
சிறப்பு விருது	:	1974 இல் தமிழக அரசின் 'நல்லாசிரியர் விருது'.

நான் செய்வேன்

பயிற்சி

அ) அகரமுதலியைப் பயன்படுத்தி பொருள் எழுதுக.

1. சீராய் –
2. சிந்தை –
3. பெருகுதல் –
4. கூக்குரல் –
5. பரிவு –
6. புலம்பல் –
7. மனமுருகி –
8. பூரிப்பு –

ஆ) பிரித்து எழுதுக.

1. சிந்தைக்கின்பம் = _____
2. கூக்குரலிட்டு = _____
3. மனமுருகி = _____
4. விரைந்தோடி = _____
5. எடுத்தெறிந்தான் = _____

இ) விடை எழுதுக.

1. பொன்னன் குருவிகளை வெறுக்கக் காரணம் என்ன ?
2. உன் வாழ்வில் நடந்த விலங்குகளுடன் தொடர்புடைய மறக்கமுடியாத நிகழ்ச்சி ஒன்றனை எழுதுக.
3. மனிதர்களால் பாதிக்கப்படும் பறவை, விலங்குகளின் வாழிடங்கள் குறித்து எழுதுக.

நான் பேசுவேன்

வகுப்பறையில் பேசுக.

கதைப்பாடலை உன் சொந்த நடையில் கதையாகக் கூறுக.

உரைநடை

இயல் – 9

அறிவு வளர்ச்சியில் கலைக்களஞ்சியம்!

கண்மணியும் கனலும் நண்பர்கள். ஒருநாள் பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தார்கள். வரும் வழியில் செடிகளைத் தொட்டுப்பார்த்தும் ஆட்டிக்கொண்டும் நடந்தார்கள். 'ஆசிரியர் மூங்கில்கள் பற்றி தொகுப்பேடு செய்துவரச் சொன்னாரே யாரிடம் கேட்கலாம்?' என்றாள் கண்மணி. 'நம் ஊர் நூலகரைக் கேட்போம். அவர்தான் நமக்குப் பல செய்திகளைச் சொல்லுவார்' பதிலளித்தாள் கனல். இருவரும் நூலகரைத் தேடி நூலகத்துக்குச் செல்கின்றனர்.

'ஐயா! வணக்கம், எங்கள் ஆசிரியர் மூங்கில் பற்றி தொகுப்பேடு செய்துவரச் சொன்னார். அதனைப் பற்றி எங்களுக்குச் சொல்லுங்களேன்' எனக் கண்மணி கேட்டாள். 'வாருங்கள் குழந்தைகளே... கற்றல் பள்ளியுடன் மட்டும் நின்றுவிடாது, நூலகம்வரை வந்திருப்பது மகிழ்வளிக்கிறது' மகிழ்வுடன் வரவேற்றார் நூலகர்.

'மூங்கில், புல் குடும்பத்தைச் சேர்ந்தது. மூங்கிலைப் பயன்படுத்திப் பல பொருள்களைச் செய்யலாம். இது குறித்துக் கலைக்களஞ்சியத்தைப் பார்த்து மேலும் அறிந்துகொள்ளலாம்' எனக் கூறிய நூலகர், கலைக்களஞ்சிய நூலைக் கொண்டு வருகிறார்.

'குழந்தைகள் கலைக்களஞ்சியம் நீங்களே படித்துப் புரிந்துகொள்ளலாம். இஃது பத்துத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. பத்தாவது தொகுதியின் இறுதியில், சொற்களின் அகர வரிசைப்பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கும். நாம் அறிந்துகொள்ள விரும்பும் சொல், அப்பட்டியலில் எங்கு உள்ளது? என்பதனை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அச்சொல்லைத் தொடர்ந்து இரு எண்கள் கொடுக்கப்பட்டிருக்கும். முதல் எண் தொகுதியையும் இரண்டாவது எண் பக்கத்தையும் குறிக்கும். எடுத்துக்காட்டாகப் பட்டியலில் குயில்: 4–1 எனக் குறிக்கப்பட்டிருக்கும். நாம் நான்காம் தொகுதியை எடுத்து முதல் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தால், குயில் என்னும் சொல்லும் அது தொடர்பான செய்திகளும் இடம் பெற்றிருப்பதனைக் காணலாம்' என்றவாறு குழந்தைகள் கலைக்களஞ்சிய நூலை நீட்டினார் நூலகர்.

நூலைப் பெற்றுக்கொண்ட கண்மணியும் கனலும் பக்கங்களை ஆர்வமாகத் திருப்பினர். எட்டாம் தொகுதியில் நாற்பத்து ஐந்தாவது பக்கத்தில் மூங்கில் பற்றிய செய்திகள் படங்களுடன் இருந்தன.

மூங்கில் : மக்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய தாவரங்களில் மூங்கிலும் ஒன்று. மூங்கிலைக் கொண்டு ஏணி, கூடை, ஆதாரக் கால்கள், பாய், விளையாட்டுப் பொருள்கள், இசைக்கருவிகள், ஈட்டி, வில், நீரோடுங்குழாய், மேசை, நாற்காலி முதலிய பல பொருள்களையும் செய்யலாம்.

மூங்கில், புல் குடும்பத்தைச் சேர்ந்தது. இதில் சுமார் 300 வகைகள் உண்டு. வெப்ப மண்டலப் பகுதிகளில் இந்தியா, இலங்கை, பர்மா, சீனா, ஜப்பான், தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில் மூங்கில் வளர்கிறது. மித வெப்பப் பகுதிகளில் மூங்கில்கள் தாழ்வான புதர்ச்செடிகளாகச் சிறுத்துவிடுகின்றன. மிகச் சிலவகை மூங்கில்கள் கொடிகளாகப் படர்வதையும் காணலாம்.

சிலவகை மூங்கில்கள் 35 மீட்டர் உயரம்வரை வளரும். அவற்றின் அடிப்பகுதி சுமார் 30 செண்டிமீட்டர் சுற்றளவுள்ளதாக இருக்கும். செழிப்பான இடங்களில் மூங்கில் நாளொன்றுக்கு 30 செண்டி மீட்டர் நீளம் வளரக்கூடும்.

மூங்கிலில் பல கணுக்கள் உண்டு. மூங்கில் புதராக அடர்ந்து வளரும். ஒரு புதரில் 30 முதல் 100 மூங்கில்வரை இருக்கும். மூங்கிலில் பொதுவாக இரண்டு கணுக்களின் இடையே உள்ள பகுதி குழாயைப்போல் இருக்கும்.

ஆனால், சில இனங்களில் இவ்வாறு குழாய்போல இல்லாமல் கெட்டியாக இருக்கும். இவை கல்மூங்கில் எனப்படும். மூங்கில் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் வளர்ந்து முதிர்ந்த பின்பு அதனை வெட்டிப் பயன்படுத்தலாம்.

மூங்கில் மிக உயரமாக வளரும்வரை கிளைகள் விடுவதில்லை. பின்பு, சிறிய கிளைகள் அடர்த்தியாக வளரும். மூங்கில் பூக்கள் பச்சை நிறமானவை. இவை சிறிய கதிர்களாக அடர்த்தியாகக் காணப்படும். பூக்களிலிருந்து தானியம் போன்ற விதைகள் கிடைக்கின்றன. மூங்கிலில் பெரும்பாலானவை பல ஆண்டுகள் வாழ்ந்திருந்து ஒரே தடவை பூத்துப் பிறகு சிறிது காலத்தில் பட்டுப்போகும். சில இனங்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பூத்துக் கொண்டு உயிர்வாழும் மற்றும் சில ஆண்டுதோறும் பூக்கும்.

மூங்கிலிலிருந்து எடுக்கும் மரக்கூழ், காகிதம் செய்ய உதவுகிறது. மூங்கில் இலை கால்நடைகளுக்கு நல்ல தீவனம். இளங்குருத்தை நீரில் ஊறவைத்தும், ஊறுகாய் போட்டும், சர்க்கரைப் பாகில் தோய்த்தும் உண்பதுண்டு. மூங்கிலின் கணுக்களுக்கிடையிலுள்ள நீர்வற்றி வேய்முத்து அல்லது மூங்கில் முத்து உண்டாகும். இதனை மருந்தாகப் பயன்படுத்துவார்கள்.

மூங்கிலால் செய்யப்பட்ட பொருள்களுள் சில..

இருவரும் குறிப்பேட்டில் அழகாக எழுதிக்கொண்டனர். நூலகருக்கு நன்றி கூறி விடைபெற்றனர். அடுத்தநாள், வகுப்பறையில் படித்துக்காட்டி அனைவரின் பாராட்டுதலையும் பெற்றனர்.

நான் செய்வேன்

பயிற்சி

அ) பின்வரும் சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

மணல்	புறா	கடல்	சிரிப்பு	பலாமரம்
பறவை	பல்லி	பூண்டு	காடு	சிகரம்

ஆ) விடை எழுதுக.

1. கலைக்களஞ்சியம் என்றால் என்ன?
2. கலைக்களஞ்சியத்தின் பயன்கள் யாவை?

இ) குறிப்புகளைக் கொண்டு நீ கொண்டாடிய 'பொங்கல்' விழா பற்றி எழுதுக.

பொங்கல்	தை	புதுப்பானை
கரும்பு	அறுவடை	மஞ்சள்

குழுவாகச் செய்வோம்

குழந்தைகளைச் சிறுசிறு குழுவாகப் பிரிக்க. பின்வரும் சொற்கள் குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில், எந்தத் தொகுதியில், எப்பக்கத்தில் உள்ளது என்பதனைக் கண்டுபிடித்து எழுதச் செய்க.

அ. ஊர்வன ஆ. கரும்பு இ. திமிங்கிலம் ஈ. மேகங்கள் உ. வெளவால்

விளையாடலாம் வாங்க

வகுப்பறையில் உள்ள குழந்தைகளை ஐந்து அல்லது ஆறுபேர்கள் கொண்ட குழுக்களாகப் பிரிக்க.

நேரம் தொடங்கியவுடன் ஒவ்வொரு குழுவினரும் தங்கள் குழுவிலுள்ளவர்களின் பெயர்களை முறையாக அகரவரிசைப்படுத்தச் செய்க.

குறைவான நேரத்தில் தங்கள் பெயர்களை முறையாக அகரவரிசைப்படுத்தி எழுதிய குழுவினரே வெற்றிபெற்றவர் ஆவர்.

செயல்திட்டம்

பள்ளிவளாகம் / ஊரில் உள்ள மரங்களின் பெயர்களை அகரவரிசையில் எழுதுக.

ஒவ்வொரு மரத்தைப் பற்றியும் ஊர்ப் பெரியவர்களிடம் கேட்டு விவரங்களை எழுதுக.

இணைந்து செய்வோம்

கீழ்க்காணும் படங்களை வரிசைப்படுத்தி கதையாக எழுதுங்கள்.







குழுவாகச் செய்வோம்

ஒரு கதையின் முதல் தொடர் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு தொடர் கூறிக் கதையை நிறைவு செய்க.

நள்ளிரவில், காட்டின் நடுவே விலங்குகளின் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

துணைப்பாடம்

இயல் – 9

விகடகவி தெனாலிராமன்

விசயநகரப் பேரரசை, மன்னர் கிருஷ்ணதேவராயர் ஆட்சி செய்து வந்தார். அவருடைய அரசவை விகடகவி தெனாலிராமன். அவையோரைத் தன் நகைச்சுவைத் திறத்தினால் மகிழ்விப்பது அவர் வேலை. ஒரு நாள், நாட்டில் நிலவும் முக்கிய சிக்கல்கள் குறித்து மன்னர் விவாதித்துக் கொண்டிருந்தார். அப்போது, தெனாலிராமன் அரசவைக்குள் நுழைந்தார். மன்னரையும் மற்றவர்களையும் பார்த்தார். மன்னரிடம் சென்றார். "மன்னரே, தங்களின் பிரச்சினை யாதோ?" எனக் கேட்டார்.

அப்போது, அவரது வருகை அனைவருக்கும் எரிச்சலைத் தந்தது. "நாங்கள் முக்கியமான சிக்கல் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இடையூறு செய்யாதே!" என்றார் அமைச்சர். உடனே தெனாலிராமன், "அமைச்சரே... சிந்திப்பது உம் வேலை; சிரிக்க வைப்பது எம் வேலை; நீங்கள் உங்கள் வேலையைச் செய்யுங்கள். நான் என் வேலையைச் செய்கிறேன்" என்றார். தெனாலிராமனின் இப்பேச்சைக்கேட்டு அவையோர் சிரித்தனர். அமைச்சருக்குத் தன்னை தெனாலிராமன் ஏளனப்படுத்தியதாகத் தோன்றியது.

இதனைக் கவனித்த மன்னர், "தெனாலிராமா! போதும் உன் விகடப்பேச்சு. எங்களைச் தொல்லைப்படுத்தாதே" என்றார். அதற்கும் தெனாலிராமன், "விகடமாகப் பேசினால் சிரிப்பல்லவா வரும்; தொல்லை எங்கிருந்து வரும்?" என்றார். "உன்னோடு பேசிச் சமாளிக்க முடியாது" என்றார், அமைச்சர். "படைபலத்தைச் சமாளிக்கும் உங்களால் என் பேச்சைச் சமாளிக்க முடியவில்லையே!" என்றார் தெனாலிராமன். அவையோரின் சிரிப்பு அடங்க வெகுநேரம் ஆகியது.

மன்னரின் கண்கள் சினத்தால் சிவந்தன. "தெனாலிராமா! நிறுத்து உன் பேச்சை. இந்தப்பக்கம் உன் தலையைக் காட்டாதே! போ வெளியே!" என்றார். தெனாலிராமன் தலை கவிழ்ந்தபடியே வெளியே சென்றார். மறுநாள், தலையில் பானையைக் கவிழ்த்துக் கொண்டு அரசவைக்கு ஒருவன் வந்தான். அப்பானையில், பார்ப்பதற்கு வசதியாக இரு ஓட்டைகளும் மூச்சுவிட வசதியாக ஓர் ஓட்டையும் போடப் பட்டிருந்தது. "ஏய்! பானைத் தலையா! நில். யார் நீ? எங்கே செல்கிறாய்?" தடுத்துக் கேட்டார் வாயிற்காவலர்.



"மன்னரைக் காண வேண்டும். உள்ளே செல்ல விடு" என்றான் பானைத் தலையன். "இங்கேயே இரு. மன்னரிடம் கேட்டு வருகிறேன்" எனச் சொல்லி உள்ளே சென்றார் வாயிற்காவலர். அவர் மன்னரைப் பார்த்து, "மன்னாதி மன்னா! தங்களைப் பார்க்கப் பானையைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு ஒருவன் வந்துள்ளான். அவனை உள்ளே அனுமதிக்கலாமா?" எனக் கேட்டார், வாயிற்காவலர்.

"நேற்றைய கருத்தாடலின்போது தெனாலிராமனின் தொல்லை. இன்று அவன் இல்லை என மகிழ்ந்தேன். ம்... சரி, சரி அப்பானைத்தலையனை வரச்சொல்" என்றார் மன்னர்.

தலையில் பானையைக் கவிழ்த்துக்கொண்டு வந்த அவனைப் பார்த்து அனைவரும் சிரித்தனர். மன்னருக்கு எரிச்சல் கலந்த வியப்பு. "யார் நீ ? எங்கிருந்து வருகிறாய் ? உனக்கு என்ன வேண்டும் ?" என்றார் கிருஷ்ணதேவராயர். அப்போது அப்பானைத் தலையன், "மன்னா! என்னைத் தெரியவில்லையா ?"

" நான்தான் தெனாலிராமன்," என்றார். அனைவருக்கும் சிரிப்பு. அப்போது மன்னர், "தெனாலிராமா! என்ன இது கோமாளித்தனம் ? இந்தப்பக்கம் தலையைக் காட்டக்கூடாது என்றேனே, என்ன துணிச்சல் ? ஏன் இங்கு வந்தாய் ?" எனச் சினங்கொண்டு கேட்டார். அப்போது தெனாலிராமன், "மன்னா! தாங்கள் என் தலையைத்தானே காட்டக்கூடாது என்றீர்கள். உடலைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே! எனவேதான் தங்கள் சொற்படி என் தலையை மட்டும் மறைத்துக்கொண்டு வந்துள்ளேன்" என்றார்.

அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். அவையோரின் சிரிப்பொலி அடங்க வெகுநேரம் ஆகியது. மன்னரும் சிரித்தார். மன்னர், "கோமாளித்தனத்திலும் உன் அறிவுக்கூர்மை வெளிப்பட்டுள்ளது. சரி, சரி, பானையை எடுத்து விடு" என்றார்.

கம்பி நீட்டிவிட்டான், வாய் நீளம், காதில் பூ சுற்றாதே

_____

_____

இவ்வாறான, பொருளை மாற்றிப் புரிந்துகொள்ளும் சொற்றொடர்களை ஊரில் உள்ள பெரியவர்களிடம் கேட்டு எழுதுக.

சிந்திக்கலாமா ?

அப்பாவின் நண்பர், தொலைக்காட்சி பார்க்கும்போது காட்சிகள் குறித்துப் பேசக்கூடாதவற்றைப் பேசுகிறார். அவர் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை.

இனி, பிடிக்கவில்லை என்பதனை நேரிடையாக அவரிடம் சொல்லிவிடலாம். இல்லையென்றால், அங்கிருந்து நாம் சென்றுவிடலாம்.

உங்களுக்குப் பிடிக்காத, தவறான ஒன்றனை யாரேனும் பேசினால் என்ன செய்யலாம் என்பது குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

கலையும் கைவண்ணமும்

வண்ண வண்ணப் புழுக்கள் செய்யலாம்

தேவையான பொருள்களை எடுத்துக்கொள்க.



முட்டை அட்டையை வெட்டி எடுத்து, பிடித்த வண்ணத்தைத் தீட்டுக.



முதல் அட்டையில் இருபுறமும் துளைகளிடுக.



வண்ணக் குச்சி / கம்பியினைச் செருகவும்.

வாய் வரைந்து, கண்களை ஒட்டுக.

வண்ண மணிகள், சமிக்கிகளைக்கொண்டு அழகுபடுத்துக.

இன்னொன்றனையும் உருவாக்குக.



இதோ! வண்ண வண்ணப் புழுக்கள்.

பொருள் அறிவோம்

அச்சாணி – கடையாணி
அடைமொழி – சிறப்புச் சொல்
அமிலப்புகை – நச்சுக் கலந்த புகை
அரிது – இயலாது
அல்லார் – அல்லாதவர்
அளப்பரிய – எல்லையற்ற
ஆர்ப்பரிக்கும் – பேரொலி எழுப்பும்
ஆன்ற – நிறைந்த
எழில் – அழகு
ஓங்கி – உயர்ந்த
ஓம்புவான் – பாதுகாப்பவன்
கருவூலம் – சேமிக்கும் இடம்
களஞ்சியம் – பொருள் நிறைந்த இடம்
காப்பியங்கள் – கதைத் தொடர்நிலைச் செய்யுள்

குழையும் – வாடும்
கேளிர் – உறவினர்
சிறுமை – கீழ்மை, வறுமை
செம்மாந்து – இறுமாந்து
செம்மொழி – செம்மையான மொழி
செவ்வியல் – அழகிய, தகுதியான
ஞாலம் – உலகம்
டன் – ஆயிரம் கிலோ
தரணி – உலகம்
தழைத்திட – பெருகிட, மிகுந்திட
திரிந்து – மாறுபட்டு
திரு – அழகு
தீந்தமிழ் – இனிமையான தமிழ்
துவாரபாலகர் – வாயிற் காவலர்

தொழுதல் – வணங்குதல்
தொன்மை – பழைமை
நந்தி – காளை, எருது
நல்கியது – கொடுத்தது
நவிலல் – கூறுதல்
நுண்மை – நுட்பம், கூர்மை, மிகச்சிறியது
நெடிதுயர்ந்த – உயரமாக வளர்ந்த
நோக்க – பார்க்க
பண்பாடு – ஒழுக்கம்
பருவந்து – துன்பம் வந்து
பாழ்படுதல் – வீணாதல்
புராணம் – பழங்கதை, பழைய நிகழ்வு
பொதுமை – பொதுத்தன்மை
முகடு – உச்சி, உயர்வு, வீட்டின்மேற்கூரை
முத்திரை – அடையாளம், இலச்சினை
முந்தையது – முற்பட்டது
மூலிகை – மருத்துவக் குணம் நிறைந்த செடி, கொடிகள்
மோப்ப – நுகர்தல்
வழிமொழிதல் – ஒப்புக்கொள்ளல்
விசும்பு – வானம்
விந்தை – வியப்பு, அழகு, வேடிக்கை
விருந்தோம்பல் – விருந்தினரைப் பேணுதல்
வேட்கை – ஆவல், பற்று
வேதிக்கழிவு – நச்சுத்தன்மை உடைய

பொருள் அறிவோம்

அன்னை – தாய்
அண்டை வீடு – பக்கத்து வீடு
அரங்கு – கூடம்
அயல்நாடு – வெளிநாடு
அவித்து – வேகவைத்து
அருகு – அருகம்புல்
அன்னார் – போன்றவர்
அணியும் – புகழும், பாராட்டும்
அருமை – எளிதில் செய்ய இயலாத அரிய சொல்
ஆற்றுவார் – செய்வார்
இளைப்பில்லை – தாழ்வில்லை
உருவு – உருவம்
எள்ளாமை – இகழ்ந்துபேசாமை
ஏடு – புத்தகம்
கயமை – கீழோரது தன்மை
கருதினும் – நினைத்தாலும்
கடிதாய் – வேகமாக
குத்தொக்க – குத்துவதைப்போல்
கூம்பும் பருவம் – பொறுமையுடன் காத்திருக்கும் காலம்
கொக்கொக்க – கொக்கைப்போல்
கையாள்வதில் – பயன்படுத்துவதில்
சதாவதானி – ஒரே நேரத்தில் நூறு செயல்களை நினைவில் வைத்துச் சொல்பவர்
சீர்த்த இடம் – உரிய காலம்
செவி மடுத்தனர் – கேட்டனர்
சொல்லொணா – சொல்ல இயலாத
ஞாலம் – உலகம்
தலைவாரி – தலைமுடியை ஒழுங்குபடுத்தி
நன்செய் – நெல் விளையும் இடம்
நல்கியது – கொடுத்தது
படியும் – அமையும்
பாடசாலை – பள்ளிக்கூடம்
பாமரர் – படிக்காதவர்
பாரினில் – உலகில்

புதல்வி – மகள்
மடமை – அறிவின்மை
மாய்ந்து – இறந்து
முடக்கத்தான் – மூலிகைச் செடி
மேதை – அறிவாளி
வண்ணம் – முறை

அவலம் – துன்பம்
அருள் – இரக்கம்
ஆயுள் – வாழ்நாள்
இறைவை – நீர் இறைக்கும் கருவி
உலாவி – நடந்து
ஒற்றன் – உளவாளி
காலன் – எமன்
குருக்கத்தி – மாதவிக் கொடி
கூக்குரல் – அலறல்
கொற்றவன் – அரசன்
சாத்திரம் – அற நூல்கள்
சிந்தை – உள்ளம்
சீராய் – சிறப்பாய்
சுண்டப் பசித்த – நன்கு பசித்த
தெள்ளிய – தெளிந்த
பரிவு – அன்பு
பசுந்தாள் – பசுமையான இலைதழைகள்
புலம்பல் – வருந்துதல்
பூரிப்பு – மகிழ்ச்சி
பெருகுதல் – மிகுதல்
பேணுதல் – பாதுகாத்தல்
மனமுருகி – உள்ளம் நெகிழ்ந்து
மானாவாரி – மழை பெய்தால் மட்டுமே பயிர் விளையும்
முற்றுகை – சுற்றி வளைத்தல்
மூளும் – உருவாகும்
நித்தம் – நாள்தோறும் நிலம்
நெஞ்சுரம் – மனவலிமை

‘என்னால் முடியும், நான் செய்தேன்’

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

வ. எண்	நாள்	பாட எண்	பாடத்தலைப்பு	செயல்பாடுகள்	குறிப்புரை